# திராவிட நாடு

## தி.மு.க. மூன்றாம் ஆண்டு மலர்.



8 அணா

Maximum light given.

# தாயகமே! தாயே!!

திராவிட நாடு

தி. மு. க.
3வது
ஆண்டு மலர்

விலை: அணா 8

28-9-52



உனது கால்களைப் பிணைத்துக் கிடக்கும் அடிமைச் சங்கிலி, எமதுள்ளத்தை, எரிமலையாக்குகிறது.

உன்னைக் கொத்திச் சாண்டும், ஆதிக்கக் கழுகுகளின் அட்டகாசம், எம்மை வீறு கொள்ளச் செய்கிறது.

உனது அன்பு மடியில், தவழப் பிறந்தோம்—ஆனால், சதிகாரர்களால் தாக்கப்பட்டு நிற்கிறோம்.

கேட்காது அளிக்கும்—தங்கமும், இரும்பும், சுரங்கப் பொருள்களும், சுந்தரச் சோலையும், கழனியும், உண்டு உன்னிடம்.

ஆனால், அது, எங்களுக்கில்லை! நாங்கள் வாடுகிறோம்—சாகிறோம்—உனது காலில் புதைக்கப்படுகிறோம்.

சனாதனம் — மூட நம்பிக்கை—முதலாளித்துவம்—டில்லிச் சங்கிலி; இவைகளால் நீ சிந்தும் இரத்தக் கண்ணீர், சாகத்துடிக்கும் சமுதாயத்தின் மீது, உரைக்காமலில்லை — சுடாமலில்லை. அதன் விளைவுதான், எமது சுதந்திர நாதம்! விடுதலைத் தாகம்!!

அந்தப் பட்டாளப் பவனியை கடந்த மூன்றாண்டுகளில் கண்டாய். ஓடிப்போன, ஆண்டில், அது நடாத்தியிருக்கும் 'வெற்றிகளை'யும் கண்டாய். சாகத் துடிக்கும் நிலைதான் உனது குழந்தைகளுடையது. ஆனாலும் சமருக்கும் வீரத்துக்கும் அஞ்சாத பரம்பரையன்றோ?

வசதிகள் இல்லாத வாலிபப்படை, நான்காவது ஆண்டில் நடைபோடுகிறது. பெருமிதத்தோடு, கடந்த ஆண்டில், தான் சாதித்த காரியங்களை உனக்குச் சமர்ப்பிக்கிறது.

பெருமூச்சு விடாதே, அம்மா! உலகில், கடந்த ஓராண்டில் புதுவாழ்வு கண்டிருக்கும் நாடுகளை எண்ணுகிறாயா? ஆம்! பல நாடுகள்! உன்னை விடச்சிறியனவை!! தமதுவாழ்வை, நடத்தித்தான் செல்லுகின்றன

ஆனால்?—அதை, உனது குழந்தைகளிலே, பலர் இன்னும் உணரவில்லையே! கோபிக்கிறார்களே!!

புகழ் மகுடம் சூட்டிக் கொண்டிருந்த உன்காட்சியை வாயாரப் பேசுகிறார்கள்—'திருஇடம்' என்கிறார்கள். ஆனால், 'அடுத்த வீட்டு அம்மாவுக்கு' நீ 'அடிமையாயிருக்க வேண்டும்' என்கிறார்களே!

அவர்களுக்காக, நீ, அழாதே, தாயே. எமது சகோதரர்கள்தான், அவர்களும். உனது மடியில் தவழ்பவர்கள்தான்!

உன் அடிமைச் சங்கிலியை அறுக்க, அவர்களும் விரைவில் வந்துவிடுவார்கள். விழிதிறக்கும் பணியை, வழக்கம்போல், நாங்கள் செய்கிறோம். அடிக்கும் கைதான், அவர்களுடையது! ஆனாலும் அண்ணன்களுடையதுதானே!!

மழை, காற்று, இடி—இவைகளைக் கண்டு கலங்காத உனது மனநிலை, எமக்கும் உண்டு, பூமிமாதா! பொறுமையும், சகிப்புத்தன்மையும், நீ காட்டும் 'விளக்குகள்', அவைகளை, நாங்கள் ஏந்தி நிற்கிறோம்.

அழாதே அம்மா!

கடமைப் பாதையில் செல்லும் எங்களை, காட்டாறுபோல, ஆதிக்கம் செலுத்துவோர் அடித்துச் செல்லலாம். மடக்கிப் போடலாம். இரத்தத்தைக் குடிக்கலாம். எமக்கு அது பெரிதல்ல! உனக்காக, நாங்கள் செலுத்தும், சிறுகாணிக்கைதானே, அவை?

புது ஆண்டு, எமக்கு—உனது விடுதலைப் படைக்கு.

சக்தியைத் திரட்டுகிறோம்! முன்னேற்றநாதம் ஒலிக்கச் செய்கிறோம்!!

"கட்டுப்பாடும் ஒற்றுமையும் பெரிது என்கிறாயா?" அதுதான் தாயே எமது கண்கள்.

"விரைவில் உன் விலங்குகளை ஒடிக்கிறோம் — கண்ணீரைத் துடைக்கிறோம். தாயும் குழந்தைகளும் மகிழ்ந்து வாழ்வோம்" என்று இன்று சபதம் எடுத்துக் கொள்கிறோம். வாழ்க எம் தாயகம்! வாழ்க எம் திராவிடம்!!

## தழும்புகள்

செப் 23: காத்தான் தாக்குண்டார்! அவர் தம்பி கருப்பையாவுக்கு கையில் அரிவாள் வெட்டு!!
—நிலக்கோட்டை

செப் 28: கூட்டத்தைக் கலைக்க முயற்சி. கல்லடி. ஒருவருக்குத் தலையில் காயம்.—சின்னாளப்பட்டி.

அக் 14: காந்தி ஜயந்தி விழாவில் நமது தோழர்களைத் தாக்கினர்.
—ராணிப்பேட்டை

நவ 7: கழகக் கொடி பறக்கக் கூடாதென அட்டகாசம். ஆர்ப்பாட்டம். —அம்மாபேட்டை

நவ 5: ஹனீபா பாடும்போது, கல்லடி, கலவரம், காங்கிரஸ் தோழர்களால். —திருவல்லிக்கேணி

ஜன 3: கூட்டத்தில் குழப்பம், பெரியார் பேசக் கூடாதென ஆர்ப்பாட்டம். —செம்பனார்கோவில்

ஜன 4: பொதுக் கூட்டம் நடைபெறுமற் செய்ய, அட்டகாசம். கலாட்டா. —பரமத்தி

ஜன 7: தி. மு. க. கூட்டத்தில் புகுந்து ரௌடித்தனம். பலருக்கு அடி. —ஆச்சான்புரம்

ஜன 24: இளைஞன் மஜீது கொலை. —நெல்லிக்குப்பம்

பிப் 22: கழகக் கொடி தீக்கிரை. காரியாலயம் தாக்குண்டது.
—கோவை

*

கொலை! வெட்டு! கலாட்டா! தீ! கல் வீச்சு!—இத்தகைய காட்டுமிராண்டி முறைகளால், குரலை ஒடுக்கிட, கடந்த ஆண்டில் மிக மிக முயன்றனர் பிற்போக்கு வாதிகள். அரசியல் வியாபாரத்தில் அமர்ந்திருக்கும் மஞ்சள் நிறத்தோர் தாம்—இத்தகைய செயல்களில் ஈடுபட்டோராகும். 'ஒரு பக்கம் சர்க்காரின் அடக்குமுறை! மற்றோர் பக்கம் 'சர்க்காரை நடத்துவோர்' எனக் கூறிக் கொள்வோரின் அட்டகாசம்!! இரண்டுக்குமிடையில், நமது கொள்கை, பட்டுப்போய்விடவில்லை. நமது கொடி வானளாவப் பறக்கிறது! தோழர்கள் சிந்திய ரத்தம், நமது கொடியின் சிகப்பை இன்னும் மெருகேற்றித் தந்திருக்கிறது!!

## ஆக்க வேலைகள்

மாநில மாநாடு
கலைக் கண்காட்சி.
பிரச்சாரப் பயிற்சி.
உறுப்பினர் சேர்த்தல்.
புதுச் சட்டதிட்டம்.
கழக வெளியீடுகள்.
தலைமைக் கழகம் ஏற்பாடு
கழகத்துக்கோர் மாளிகை.
மஜீதுக்கு நிதி.
தேனிகலவர நிதி.

★

## அறப்போர்

கவர்னருக்கு கண்டனம் —
நாடெங்கும் அதிருப்திநாள்.
பேச்சுரிமைப் போர்.
இந்தி போர்டு அழிப்பு.
கருப்புக்கொடி, துரோகிகளுக்கு!

★

## —நீதியின் தீர்ப்பு—

கடம்பூர்—செப்: 51
தோழர்கள் மீது வேண்டுமென்றே காங்கிரசார் தொடர்ந்த வழக்கு தள்ளப்பட்டது.

திருச்சி—செப்: 51
கருப்புக்கொடி வழக்கில் தோழர்கள் விடுதலை

மார்ச்—52
"ஆரியமாயை" வெற்றி

வாலாஜா—ஏப்: 52
கருப்புக்கொடி — தோழர்கள் விடுதலை.

கோவை—ஜுலை: 52
கழகச் செயலாளர் ராசமாணிக்கம், மீது 'கடவுள்' சம்பந்தமாக அளித்த தண்டனை ரத்து. விடுதலை.

குன்றத்தூர்—செப்: 52
பேச்சுரிமை வழக்கில் என்.வி. என், பாலசுந்திரம் விடுதலை.

★

## நெஞ்சில் இருக்கவேண்டியவை!

17-10-51 மதுரையில் பொதுக் குழு.

18-10-51 சட்ட திட்டம் அங்கிகாரம். 'ஒப்பந்தப் பத்திரம்'

5-11-51 ரூ 30,000த்தில் கழகத்துக்கென ஓர் மாளிகை வாங்கப்பட்டது.

2-12-51 'அறிவகம்' — தோழர் ஜான் திறந்து வைத்தார்.

டிச. 13, 14, 15, 16, மாநில மாநாடு — கண் கொள்ளாக் காட்சி.

4-3-52 வெற்றி பெற்ற எம். எல். ஏ; எம். பிக்கள் தந்த உறுதி மொழி.

6-4-52 ஈரோட்டில் பொதுக் குழுவின் கடைசிக் கூட்டம்.

25-4-52 அறிவகத்தில் தலைமைக் கழகம் இயங்க ஆரம்பித்தது. ஈ. வே. கி. சம்பத் பொறுப்பாளர்:

18-5-52 கேரள மாநாட்டில் தி: மு. க. பிரதிநிதி.

1-8-52 ஆகஸ்டு இந்தி அழிப்புப் போர்.

8-8-52 தலைமை நிலைய பொறுப்பாளராக இரா. நெடுஞ்செழியன்.

13-9-52 பொன்மலை தொழிலாளர் மாநாட்டில் பொதுச் செயலாளர்.

★

**இலட்சியம்
நமது இருதயம்
கொள்கைகள்
நம் நரம்புகள்**

★

# அரசாங்கப் பொருளாதாரம்

எ இருதயராஜ்,
திருச்சி சேன்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்

மனிதன் எவ்வாறு இலாபகரமான முறையில் பொருளீட்டுகிறான், அதை எப்படி சிக்கனமான வழியிலும் பயன்பெறும் வகையிலும் செலவழிக்கிறான் என்பதைப் பற்றிக் கூறுவதே பொருளாதாரநூல். அவன் அன்றாட வாழ்க்கையில் செல்வத்தை சேர்ப்பதற்காக எடுக்கும் முயற்சிகள், அப்படிச் சேர்த்த செல்வத்தை பயன்படும் முறையில் செலவு செய்யும் வழிகள்—இவைகளே பொருளாதாரப் பிரச்சனைகள்.

எப்படி ஒரு ராஜ்யத்தில் அரசாங்கமானது பொருள் திரட்டுகிறது, அப்பொருளை எவ்வாறு மக்களுக்குப் பயன்படும்விதத்தில் செலவிடுகிறது என்பதைப் பற்றி ஆராய்வது அரசாங்கப் பொருளாதாரம்.

## குடும்பமும் அரசாங்கமும்:

குடும்ப பரிபாலனமும் இராஜ்ய பரிபாலனமும் ஏறக்குறைய ஒன்றேதான். இரண்டிலும் வருவாய்க்கு அடங்கியே இருக்கவேண்டும் செலவினங்கள். வருவாய்க்கு மீறி செலவானால், குடும்பத்துக்கு எப்படிக் கடன் ஏற்படுகிறதோ, அதுபோலவே, அரசாங்கமும் கடன் வாங்க நேரிடலாம். குடும்பங்களில் அனுவசியமான செலவுகளால் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாமற் போவதுபோல இராஜ்ய பரிபாலனத்திலேயும் யுத்த காரியங்களுக்காகவும், நாட்டுக்குத் தேவையில்லாத உருப்படாத திட்டங்களுக்காகவும் ஏராளமாக பொருள் செலவிடப்பட்டால், மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வது கஷ்டம். ஊதாரித்தனமான செலவு ஒரு குடும்பம் சீர்குலையக் காரணமாய் இருப்பதைப்போல், ஒரு அரசாங்கம் மக்களின் நன்மையை உதாசீனம் செய்து பணத்தை விரயமாக்கினால், வளமான நாடுங்கூட சுடுகாடாகும்.

ஒரு குடும்பத் தலைவன் தனது வருவாய்க்குத் தக்கபடி செலவுகளைக் கூட்டியோ குறைத்தோ செய்கிறான். குறைந்த வருவாய் உள்ள ஒருவன் சிக்கனமாக செலவிடுகிறான். வருவாய் உயர்ந்தால் அதற்குத் தக்காற்போல் தன் குடும்பத்துக்கு அதுவரை கிடைக்காத சில சவுகரியங்களைப் பெறும் விதத்தில் தாராளமாக செலவு செய்கிறான். குடும்பச் செலவுக்கு எவ்வளவு பணம் தேவையென்று முதலில் கணக்குப் பார்த்துக்கொண்டு அதன்படி எவனும் வருவாய் தேடுவது கிடையாது. அதாவது குடும்பத்தைப் பொறுத்தமட்டில் வருவாய்தான் செலவை நிர்ணயிக்கிறது.

ஆனால், ஒரு அரசாங்கம் மக்களுக்குத் தேவைப்படும் நன்மைகளைச் செய்து தருவதற்கு என்ன செலவாகும் என்று முதலில் கணக்குப் பார்த்து, பிறகுதான் அத்தொகையை வரிகள்மூலமாகவோ அல்லது மற்ற வழிகளிலோ பெறுவதற்குத் திட்டம் தீட்டுகிறது. ஆகவே, அரசாங்கத்தின் செலவைப் பொறுத்திருக்கிறது, அதன் வருவாய் திரட்டும் திட்டம்.

ஆனால், சில சமயங்களில் வருவாய்—செலவைக் கட்டுப்படுத்தும் நிலைமையும் ஒரு அரசாங்கத்துக்கு நேரலாம். உதாரணமாக விவசாயமே முக்கிய தொழிலாகக்கொண்ட ஒரு நாட்டில் மழையின்மையாலோ மற்றெந்தக்காரணத்தாலோ பஞ்சம் அல்லது விளைவுக் குறைச்சல் ஏற்பட்டு, மக்கள் அவதிக்குட்பட்டிருந்தால் அதிக வரிகளைச் சுமத்தி அவர்களிடமிருந்து பொருள் திரட்டமுடியாத காரணத்தால், அரசாங்கமும் குறுகிய வருவாய்க்குத் தக்கபடி செலவைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகும்.

அதுபோலவே, சில சமயங்களில் ஒரு குடும்பத்திலும் செலவைப்பொறுத்து வருவாயைகூட்டவோ அல்லது குறைக்கவோ நேரிடலாம். உதாரணமாக, ஒருவன், தான் கல்யாணமாகாததற்குமுன் சொற்ப வருமானத்தைக் கொண்டு திருப்தியடைகிறான். ஆனால், அதே மனிதன், கல்யாணமானபின், குடும்பம் ஒன்று ஏற்பட்டு செலவு அதிகரிக்கக் கண்டு, முன்னைவிட அதிக நேரம் உழைத்தோ, ஓய்வு நேரங்களில் வேறு ஒரு வேலையை மேற்கொண்டோ, செலவுக்குத் தக்கபடி தன் வருவாயை கூட்டிக்கொள்கிறான்.

வருவாய்க்குமேல் செலவு செய்யும் ஒரு அரசாங்கம், ஒரு குடும்பத்தைப்போலவே கடன் வாங்க நேரிடும். கடனால் ஒரு குடும்பம் நொடித்துப்போய் விடக்கூடும். அதனால் குடும்பத் தலைவன் கடன் வாங்குவதைத் தவிர்க்கவேண்டும். ஆனால், வியாபாரம், தொழில் முதலிய காரியங்களுக்கு, வருமானத்தைப் பெருக்க வசதிகள் செய்து கொள்ள கடன் வாங்குவதால் கெடுதலில்லை.

ஒரு அரசாங்கம் கடன் வாங்காமலே இருப்பது கடினம். அவ்விதம் கடன் வாங்குவதால் கெடுதலும் இல்லை. ஏனென்றால், கடன் வாங்குவதன்மூலம்தான் சில சமயங்களில் ஒரு அரசாங்கம் நீர்ப்பாசனம் போன்ற பெரிய திட்டங்களை உருவாக்கமுடியும். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதன்மூலம் நாட்டில் செல்வம் அதிகரிக்கச் செய்ய முடியும். எப்பொழுதுமே வரிப் பணத்தைக்கொண்டே எல்லா காரியங்களையும் சாதித்துவிடமுடியாது ஒரு அரசாங்கம்.

ஒருவன் தன் வருமானத்திலிருந்து குடும்பத் தேவைகளுக்காக செலவிடும்பொழுது, அந்தச் செலவினங்கள் ஒவ்வொன்றிலுமிருந்தும் ஏறக்குறைய ஏற்றத் தாழ்வின்றி ஒரே விதமான பயனும் மொத்தத்தில் எவ்வளவு அதிகமான பிரயோஜனம் அடையலாமோ அதைப் பெற விரும்புகிறான். குறைந்த வரு

வாய் உள்ள ஒருவன் முதலில் உடுப்புகளுக்காக அதிகப் பணம் செலவிட்டுவிட்டு உணவுக்குப் போதிய அளவு பணம் இல்லாமல் அவதிப்படுகிறான். பிறகு தன் போக்கைத் திருத்திக்கொண்டு மேற்கொண்டு உடுப்புகளுக்காக ஒன்றும் செலவிடாமல் உணவுக்காக அதிகம் செலவிடுகிறான்.

அதுபோலவே ஒரு அரசாங்கம் பாதுகாப்புக்காக ராணுவத்திற்கு தேவைக்குமேல் அதிகப் பணம் செலவு செய்தால், மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான வைத்திய வசதி, கல்விவசதி முதலியவைகளைச் செய்துதர முடியாது. தவறை உணர்ந்து பாதுகாப்புச் செலவைக் குறுக்கிக்கொண்டு, மக்களின் மற்ற தேவைகளுக்கு அதிகமாக செலவழித்தால் அதிக பயன் பெற முடியும்.

நடைமுறையில் படாடோப அலங்கார வாழ்க்கையில் அதிகம் செலவிட்டுவிட்டு, உண்ண உணவின்றி அல்லல்படும் குடும்பங்கள் இருப்பதுபோலவே' கட்சிக்கட்டுப்பாடு, கட்சித் திட்டம் என்று சொல்லிக்கொண்டு உதவாக்கரையான, மக்களுக்குத் தேவையில்லாத, பல காரியங்களில் பொருளை விரயமாக்கி அத்யாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத அரசாங்கங்களும் உண்டு. மக்களுடைய உணவு உடை குடியிருப்பு முதலிய முக்கிய தேவைகளை வருவாய்ப் போதவில்லையென்ற காரணத்தால் பூர்த்தி செய்துதர முடியவில்லை என்று கூறும் அரசாங்கங்கள் ஏராளமான பணத்தை, கதர்த் திட்டம், பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் முதலிய காரியங்களுக்காக வீணாக்குவதையும் காண்கிறோம்.

ஒருவன் செலவு செய்யும் பொழுது தனக்கும் தன் குடும்பத்துக்கும் அவ்வப்பொழுது ஏற்படும் தேவைகளையே கவனிக்கிறான். சில சமயங்களில் தன் வயது முதிர்ந்து சம்பாதிக்க முடியாத தள்ளாத காலத்தில் தனக்கு ஏற்படக்கூடிய தேவைகளுக்காகவும் செலவிடுகிறான். தனக்குப்பின் தன் பிள்ளைகளுடைய சவுகர்யத்தை உத்தேசித்து செலவு செய்பவர்களும் உண்டு. ஆனால் தன்னுடைய மூன்றாவது நாலாவது தலைமுறையில் தோன்றப்போகும் வாரிசுகளுக்காகத் தேடிவைப்பதுமில்லை. அவர்களுக்கு ஏற்படக்கூடிய தேவைகளை நினைத்துக் கவலைப்பட்டு இப்பொழுதே அவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பதுமில்லை.

ஆனால் ஒரு அரசாங்கமோ ஒரு குடும்பத்தைவிட அதிக நிரந்தரமான ஸ்தாபனம் பல்லாண்டுகளுக்குப் பிறகும் மக்களுக்குத் தேவைப்படக்கூடிய காரியங்களை மனதிற்கொண்டு பிற்கால சந்ததிகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அரசாங்கம் இப்பொழுது செலவிடவேண்டும்.

### ராஜ்ய பரிபாலனத்தின் நோக்கம்.

அரசாங்கம் மக்களிடமிருந்து வரிகள் மூலமாகவோ பிறவழிகளிலோ பொருளைப் பெற்று அதை எல்லோருக்கும் பயனளிக்கும் விதத்தில் செலவு செய்யவேண்டும். வரி வசூலிப்பதனால் மக்களுக்கு அதிக கஷ்டம் நேராமல், வசூலித்த வரிப் பணத்தை நல்ல முறையில் செலவு செய்து சமுதாயத்துக்கு எவ்வளவு அதிக நன்மை செய்யமுடியுமோ அந்த முறையில் பரிபாலனம் நடக்க வேண்டும்.

தேவைக்கு அதிகமாய் வருவாய் உள்ளவர்களிடமிருந்து வரிகளைத் தண்டி அதைக்கொண்டு போதிய வருமானம் இல்லாதவர்களுக்கு வேண்டிய பொது சவுகரியங்களை செய்துதர வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இதைச் சரிவர செய்தால், நாட்டின் செல்வம் பெருகுவதுமட்டுமன்றி, சமுதாயத்தில் செல்வம் சரிவரப் பங்கீடுசெய்யப்படாமல், ஒரு சிலர் பரம்பரைப் பணக்காரர்களாகவும், ஏனைய பெரும்பாலான மக்கள் என்றும் ஏழையாகவே வாழ்வதையும் தவிர்க்கலாம்.

### அரசாங்கத்தின் செலவினங்கள்.

அரசாங்கத்தின் செலவினங்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு தேசத்துக்கு வேண்டிய வெளிநாட்டுப் பாதுகாப்பு, உள்நாட்டில் சமாதானத்தைக் காப்பாற்றுவது முதலானவைகளுக்குச் செலவிடுவது ஒருவகை. மக்களுடைய வாழ்க்கையின் தரத்தையும் சவுகரியத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான செலவுகள் மற்றொருவகை.

லாபகரமான செலவினங்கள் என்றும் லாபகரமில்லாதவை என்றும் கூட ஒரு பாகுபாடு உண்டு. ரயில்வே தபால் முதலியவைகளுக்காக அரசாங்கம் செலவிடும் பொருள் லாபகரமான தொழில் நடத்துவதுபோலாகும். பஞ்சத்தைத் தவிர்க்க ஏராளமான பொருளை சர்க்கார் செலவிடும்போது லாபத்தை எதிர்பார்ப்பதில்லை.

லாபகரமில்லை என்பதற்காக சில செலவினங்களை எப்பொழுதுமே அரசாங்கம் தவிர்த்துவிடமுடியாது. பஞ்சத்தடுப்பு, இலவச வைத்தியம், இலவசக் கல்வி முதலிய செலவினங்களால் தொழில் முறையில் லாபம் கிட்டுவதில்லை என்றுதான் சொல்லலாமே தவிர மக்களுக்கு அவைகளால் அபரிமிதமான நன்மை ஏற்படுகிறதென்பதை யாரும் மறுக்க முடியாது.

நாட்டின் பாதுகாப்புக்காக, சமாதானம், நீதி இவைகளை நிலைநாட்டுவதற்காக, ரஸ்தாக்கள் ரயில்பாதைகள் போடுவதற்காக, கல்வி, வைத்திய, சுகாதார வசதிகள் ஏற்படுத்துவதற்காக, இன்னும் மின்சார விளக்குவசதி, குடிதண்ணீர் விநியோகம் முதலிய பொதுக் காரியங்களுக்காக, அரசாங்கம் செலவு

## நினைத்துப் பார்!

[வாணிதாசன்]

பொன்னாட்டின் தாய்நாட்டின்
புனல் நாட்டின் நல்வாழ்வே
உன்நல் வாழ்வாம்!

தென்னவனே! திராவிடனே!
இளந்தமிழா! கோல்புலியே!
சிறுத்தை ஏறே!

முன்னவர்கள் எந்நாளும்
பிறர்க்கடிமை ஆகாமல்
வாழ்ந்தார் முன்னாள்!

உன்நிலையை நினைத்துப்பார்!
முன்னேற்றப் பணிபுரிவாய்!
உயர்வாய் நீயே!!

செய்ய வேண்டியிருக்கிறது. மேற்சொன்ன செலவினங்களில் சுகாதாரம், மின்சார விளக்கு வசதி, இலவச ஆரம்பக் கல்வி, வைத்திய உதவி, குடிதண்ணீர் விநியோகம் முதலியவை ஸ்தல ஸ்தாபனங்களாகிய மாவட்ட மன்றங்கள், நகர மன்றங்கள் முதலியவைகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கம் நல்ல முறையில் செலவுகளை செய்தால் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்படுகின்றன. நீர்ப்பாசனத்திற்காக செலவிடுவது உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் செல்வத்தை அதிகரிக்கும். சுகாதாரம், வைத்தியசாலைகளுக்காக ஏற்படும் செலவுகள் மக்களை திடகாத்திரர்களாகவும், ஆரோக்கியமுள்ளவர்களாகவும் பலசாலிகளாகவும் மாற்றி, விவசாயம் தொழில் துறைகளில் உற்பத்தி பெருக வழி செய்கின்றன. கல்விக்காக செலவிடுவது—முக்கியமாக தொழிற் கல்விக்காக செலவிடுவது மக்களுடைய தொழில் நுட்பத்தையும் திறமையையும் அதிகரிக்கச் செய்கிறது. பாதுகாப்புக்காக ராணுவத்துக்கு செலவிடுவது மக்களை பயமின்றி வாழ உதவுகிறது. உள்நாட்டுக் கலவரங்கள் இன்றி போலீஸ் பந்தோபஸ்துடன் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு செலவிடுவது மக்கள் சொத்து சுதந்தரத்துடன் கவலையின்றி வாழ வழி செய்கிறது. ரயில்வே தபால் முதலிய போக்குவரத்து சாதனங்கள் ஏற்படுத்துவதால் வாணிபம் வளருகிறது. இலவசக் கல்வி, ஏழைகளுக்கு விடுதிகள், இலவச வைத்திய உதவி, ஏழைப் பிள்ளைகளுக்குப் பள்ளியில் இலவச உணவு முதலியவைகளுக்காக ஏற்படும் செலவுகளால் மக்களுக்கு புத்தி நுட்பமும், தேகாரோக்கியமும் ராஜ்ய விவகாரங்களில் அக்கறையும் நாட்டின் நன்மையிலே நாட்டமும் உண்டாகவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவுகிறது. ஆனால் அனாவசியமாக யுத்த தளவாடங்கள் செய்வது போன்ற செலவினங்களால் நாட்டுக்கோ, நாட்டு மக்களுக்கோ யாதொரு நன்மையும் ஏற்படுவதில்லை.

சில அரசாங்கங்கள் வேலையில்லாதவர்களுக்குப் படியும், 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுத்துதவுகின்றன. இவ்வித செலவினங்கள் ஒரு குறிப்பிட்ட சிலருக்கே பயனளிக்கின்றன. இலவச வைத்தியசிகிச்சை இலவசக் கல்வி முதலியவைகள் அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் பொழுது மக்களில் ஒரு பகுதியினர் — ஏழைகள்—மட்டுமே பயனடைகிறார்கள். இம்மாதிரி செலவினங்களிலிருந்து பணம் படைத்தவர்கள், சொந்த செலவிலேயே வைத்திய சிகிச்சை, கல்வி வசதிகள் செய்து கொள்ளக் கூடியவர்கள் பயனடைவதில்லை — போக்குவரத்து சாதனங்களுக்காக, நல்ல ரஸ்தாக்கள் முதலியவைகளுக்காக, நாட்டில் சமாதானம் நிலைக்க போலீஸ் பந்தோபஸ்து ஏற்படுத்த அரசாங்கம் செலவிடும் பொழுது ஏழை முதல் எல்லோரும் பயன் பெறுகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் செல்வம் படைத்தவர்கள் இவ்வித செலவினங்களால் அதிகம் பயன் பெறுகிறார்கள் என்றே சொல்லவேண்டும். நல்ல ரஸ்தாக்களிருப்பதால், மோட்டார் வாகனங்கள் வைத்திருக்கும் அவர்கள்தான் நன்மை அடைகிறார்கள். பணம் குவிந்திருக்கும் அவர்களுக்குத்தான்—நாட்டில் கலவரம் இன்றி சொத்துக்கு நஷ்டம் ஏற்படாதபடி, சொத்தே களவு போகாதபடி போலீஸ் பந்தோபஸ்து அவசியம். ஏழை மக்கள்—பாதுகாப்பதற்கு சொத்தோ பணமோ இல்லாதவர்கள், அவ்வளவு நன்மை அடைவதில்லை.

மக்களில் பணமுடையோரிடமிருந்து வரியாகப் பணத்தைப் பெற்று, அதில் பெரும் பகுதியை ஏழை மக்களுக்குப் பயன்படும்படி செலவிடுவதே அரசாங்கத்தின் நோக்கம். ஆனால் வரிப்பளுவை அதிகமாக்க அதிகமாக்க, பணமுடையவர்கள் சரியான கணக்குக் காட்டாமல் சர்க்காரை ஏமாற்றவும், சொத்து விவரங்களைத் தராமல் பணத்தைப் பதுக்கவும் நினைப்பார்கள். மேலும் பலர் சொத்து அதிகம் சேர்ந்தால், வருமானம் அதிகரித்தால் அதனால் வரிப்பளுவும் தாங்கமுடியாமற் போகும் என்று பயந்து பணத்தை சேமித்து வைத்து சொத்து சேகரிப்பதற்குப் பதில் தாராளமாக செலவு செய்யவோ அல்லது பணம் சம்பாதிக்கும் முயற்சியை குறைத்துக் கொள்ளவோ நேரிடும். இவ்வாறு வரிப்பளுவினால் நாட்டில் சேமிப்புக் குறையுமானால், தொழில் துறைகளில் மூலதனம் குறையும். அதனால் தொழில் உற்பத்தி குறையும் அதன் விளைவாக நாட்டின் செல்வமும் குறையும். ஆகவே வரி விதிப்பதிலும் ஒரு முறை வேண்டும். கட்டுப்பாடு அவசியம் முறையின்றி வரிகளைச் சுமத்தினால் ஒரு சில காலத்துக்குத்தான் அது நல்ல வருமானத்தைத் தரும் ஆனால் நாளடைவில் தொழில் உற்பத்தியும் அதனால் மக்களுடைய வருமானமும் குறையுமாதலால் வரி வசூலே பாதிக்கப்படும்.

மிதமாக வரிகளை விதித்து நல்ல வருமானம் உள்ளவர்களுக்கு அதிக கஷ்டமோ, நஷ்டமோ ஏற்படாமல் நடந்தால், வரிவசூல் சுலபமாகவும், அதிகமாகவும் இருக்கும் அதனால் ஏழை மக்களுக்கு நன்மைகள் செய்யவும் ஏதுவாகும். ஆனால் அதை விட்டு ஒரேயடியாக அபரிமிதமான வரிகளைச் சுமத்தினால் நாளடைவில் வரி வசூல் விழுந்து போகும்—அதனால் மக்களுக்கு நிரந்தரமான நன்மை செய்ய முடியாது. அவ்வாறு செய்வது தினம் ஒரு பொன் முட்டை விட்டுக்கொண்டிருந்த வாத்தை திடீரென்று திரவியம் சேர்க்க நினைத்து வயிற்றைக்கிழித்து விட்ட மதியீனன் செயலுக்கு ஒப்பாகும்.

### சேவை செய்யும் சர்க்கார்

இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னால் மேல் நாடுகளிலுங்கூட அரசாங்கங்கள் அதிக செலவு செய்ததில்லை. இரண்டாவது உலகப்போர் நடந்த காலத்தில் இங்கிலாந்து அரசாங்கம் ஒரு நாளில் செலவழித்தபணம் பதினெட்டாவது நூற்றாண்டில் அதே அரசாங்கம் இரண்டு மூன்று வருஷங்களுக்கு செலவழிக்கப் போதுமானதாயிருந்திருக்கும்! இன்றைக்கு இங்கிலாந்தில் கல்விக்கு மட்டும் ஒரு ஆண்டில் செலவழிக்கப் படும் பணம் பதினெட்டாவது நூற்றாண்டில் அதே அரசாங்கத்தின் ஒரு வருஷ செலவுக்கு ஈடு கட்டியிருக்கும். இதுபோலவே தற்காலத்தில் எல்லா

நாடுகளிலும் அரசாங்கச் செலவுகள் அபரிமிதமாக அதிகரித்துள்ளன.

இதற்கு காரணம் என்ன? அந்தக் காலத்தில் அரசாங்கங்களுக்கு இப்பொழுது இருப்பது போல் அத்தனை அலுவல்கள் இருந்ததில்லை. அக்கால அரசாங்கங்கள்பாதுகாப்பு, உள்நாட்டு சமாதானம், அதாவது ராணுவம், போலீஸ் இவ்விரண்டு வேலைகளையே கவனித்து வந்தன. ஆனால் இக்காலத்தில் அரசாங்கங்கள் இவ்விருவேலைகளையும் முன்னைவிட அதிக திறமையாகவும் அதிக செலவோடும் கவனித்து வருவது மல்லாமல், பல புதிய அலுவல்களையும் சமூகசேவைகளையும் மேற்கொண்டு விட்டன.

முன்னைய போலீஸ் சர்க்காருக்கும் இன்றைய சேவைசெய்யும் சர்க்காருக்கும் வித்தியாசம் என்னவென்றால், முன்காலத்தில் அரசாங்கங்கள் மக்களின் சௌகரியங்களை வெறும் மேற்பார்வை மட்டும் பார்த்து வந்தது. மக்கள் தங்கள் சவுகரியங்களைத்தாமே கவனித்து வந்தார்கள். ஆனால் இப்பொழுதோ வென்றால் சர்க்கார் பல பொது சேவைகளை மேற்கொண்டு நமது முன்னோர்கள் நினைத்துக்கூட பார்த்திராத பல பொது அலுவல்களை செய்யவேண்டியிருக்கிறது. முன்னைய அரசாங்கங்கள் வெறும் போலீஸ் பரிபாலனத்தைத்தான் செய்தன. இப்பொழுது அவை சேவை செய்யும் சர்க்காரா மாறிவிட்டன. ஒரு ராஜ்யத்தின் அரசாங்கத்தின் திறமை அந்த சர்க்காரின் சேவையைப் பொறுத்தே இப்பொழுது கணக்கிடப்படுகின்றது.

கல்வி, போக்குவரத்து, பொழுது போக்குவசதிகள், பஞ்சத் தடுப்பு நோய் தடுப்பு, அணைகள் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசன வசதிகள் மின்சாரம், குடிதண்ணீர் விநியோகம் முதலிய புது அலுவல்கள் மிகவும் ஏராளமான செலவில் கவனிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இக்காலத்தில் இவ்வளவு அலுவல்களைச் செய்வதற்கு நிர்வாகச் செலவே ஏராளமாகின்றது. எண்ணற்ற உத்தியோகஸ்தர்களும் எழுத்தர்களும், வரிவிதிப்பவர்களும் தண்டுபவர்களும், நீர்பாசன முதலிய ஆக்கவேலைகளை செய்வதளகு தொழில் நிபுணர்களும் சம்பளம் பெறுகிறார்கள்.

இத்துடன் கூட தற்காலத்தில் ஜனநாயக ஆட்சியே அரசாங்கத்துக்கு அதிக செலவை உண்டாக்குகிறது. ஜனநாயகங்களில் அடிக்கடி பிரதிநிதிகள் தேர்தல்கள் பெருத்த செலவில் நடத்தப்படுகின்றன. மேலும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுக்கு சம்பளமோ அல்லது படியோ கொடுத்தாகவேண்டும். இந்தியாவில் மத்திய அரசாங்கத்தில் பாராளுமன்றத்திலுள்ள அங்கத்தினர்களுக்கு மட்டும் தினப்படி ரூ 30,000 செலவாகிறது.

இம்மாதிரியான செலவுகள் பண்டைக் காலத்தில் அரசாங்கங்களுக்குக் கிடையாது. அதனாலேயே தற்காலத்தில் அரசாங்கச் செலவுகள் அதிகரித்துவிட்டன.

## ராஜ்யத்தின் வருமானங்கள்

அரசாங்கத்துக்கு பல வழிகளில் வருமானங்கள் கிடைக்கின்றன. காடுகள், சுரங்கங்கள், மீன் குத்தகை முதலியவைகளிலிருந்தும், தபால் தந்தி, போக்குவரத்து முதலியன போன்ற தொழில்களை போட்டியின்றி நடத்துவதன் மூலம் கிடைக்கும் வருவாயும், பத்திரங்களைப் பதிவு செய்வதற்குண்டான கட்டணங்கள் மூலமும், யுத்தம் போன்ற நெருக்கடியான காலங்களில்கிடைக்கும் நன்கொடை போன்ற வழிகளிலும் போரிட்டு தோல்வியுற்ற நாடுகளிடமிருந்து நஷ்ட ஈடு, கப்பல் மூலமாகவும், நீதி மன்றங்களில் குற்றம் செய்பவர்களிடமிருந்து தண்டப் படும் அபராதங்கள் மூலமும் வருமானம் கிடைக்கிறது. மேற்சொன்னவைகளைத் தவிர வருமானத்திற்கு மற்றொருவழி, வரி விதிப்பதன் மூலம்.

மேலும் வருமானத்திற்காக அரசாங்கம் சில தொழில்களைத் தானே எடுத்து நடத்தலாம் — ரஷியாவில் அரசாங்கமே எல்லாத்தொழில்களையும் தானே நடத்துகிறது. இங்கிலாந்தில் இரும்பு நிலக்கரி உற்பத்தி தொழில்கள் சர்க்காராலேயே நடத்தப் படுகின்றன.

முன் காலங்களிலெல்லாம் மன்னர்கள் யதேச்சாதிகாரமாய் நடந்து வந்தபொழுது பணக்காரர்களிடமிருந்து கட்டாயமாய் பணம் பறித்தும் வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர். இங்கிலாந்தில் ஏழாவது ஹென்றி முதலிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் இம்மாதிரி துராக்கிருதமாய் பணம் வசூலிப்பது வழக்கம். முதலாவது ரிச்சர்ட் என்ற மன்னன் தனக்குப் பணம் தேவைப்படும்பொழுது ஏதாவதொரு நகரத்துக்கு ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு சாஸனம் எழுதிக் கொடுத்துவிட்டு, அந்த நகரில் சுங்கவரி முதலியவைகளை தண்டும் உரிமையை விடுவது வழக்கம்—ஒரு சமயம் ஒரு யுத்தத்துக்குப் பணம் இல்லாத நேரத்தில், லண்டன்மா நகரத்தையே வாங்குவதற்கு ஆள் இருந்தால் விற்றுவிடத் தயார் என்று சொன்னதாக சரித்திரம் சொல்லுகிறது.

தற்காலத்தில் ஜனநாயக ஆட்சிகளில் மேற்சொன்ன, யதேச்சாதிகார வருமானம் தேடும் முறைகள் கையாளப்படுவதில்லை சில சமயங்களில் பண நெருக்கடி ஏற்படும் போது, அரசாங்கங்கள் கரன்சி நோட்டுகளை அச்சடித்துக் கொள்வதுமுண்டு. ஆனால் அத்துமீறி தேவைக்குமேல் நோட்டுகளை அச்சடித்து விநியோகித்தால் நாட்டில் பணப் பெருக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயரும்.

வருமானத்துக்கு வேறு வழியில்லாவிட்டால், அரசாங்கத்துக்கு கடைசி வழி கடன் வாங்குவதாகும்—ஆனால் கடன் வாங்குவதிலும் ஒரு முறைவேண்டும். லாபகரமான செலவினங்கள் — அதாவது லாபந்தரக் கூடிய திட்டங்களை உருவாக்கவும், நாளடைவில் வாங்கிய கடனை தீர்க்கக் கூடிய சக்தி இருந்தால் மட்டும் கடன் வாங்குவது நல்லது.

## வரி விதிப்பு

அரசாங்கத்தின் வருமானத்துக்கு முக்கியமான வழி வரி விதிப்பது. வரி என்பது ஒரு பிரஜையின்வேலை, வியாபாரம், சொத்து, வருவானம் இவைகளின் பேரில் சர்க்காரால் விதிக்கப்பட்டு கட்டாயமாக வசூலிக்கப்படும் கட்டணம். வரிசெலுத்திய வரிக்குத்தக்க நேரடியான பலன்களை எதிர்பார்க்க முடியாது.

எல்லா மக்களுக்கும் வேண்டிய வசதிகளை சர்க்கார் செய்து தருவதற்காக இக்கட்டணம் வசூலிக்கப் படுகிறது. அதனால் ஒருவரும் தான்

வரி கட்டுவதனுல் அவசியம் தனக்கு ஒரு நன்மையை அரசாங்கம்செய்து தான் தர வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. இவ்வளவுபலன் கிடைக்க வேண்டுமென்று யாரும் வற்புறுத்த முடியாது. அது போலவே எனக்கு சர்க்காரிடமிருந்து யாதொரு சலுகையும் கிடையாது அதனுல் நான் வரி செலுத்த முடியாது என்றுவாதாடுவதற்கும் இடமில்லை.

வரி விதிப்பு விதிகள்:—

முதலாவதாக ஒரு ராஜ்யத்தின் பிரஜைகளிடமிருந்து, ராஜ்ய நிர்வாகம் சரிவர நடைபெற அவரவர்களுடைய சக்திக்குத் தக்கவாறு அதாவது அவரவருடைய வருமானத்திற்குத் தக்கவாறு வரி தண்ட வேண்டும். வரி செலுத்துவதால் ஏற்படும் கஷ்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரி இருக்கவேண்டும். அதிக வருமானம் உள்ளவர்கள் அதிக வரி கொடுக்கக்கூடிய சக்தி பெற்றவர்கள். 1000 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒருவர் வரி செலுத்துவதால் எவ்வளவு சிரமம் அடைகிறரோ அதைவிட அதிக சிரமம் இருக்கக்கூடாது 100 ரூ. சம்பளம் வாங்குபவர் வரி செலுத்தும்போது.

இரண்டாவதாக ஒவ்வொரு பிரஜையும் செலுத்த வேண்டிய வரித்தொகை, எவ்வளவு எப்பொழுது எப்படி செலுத்த வேண்டும் என்பது அவனுக்குமட்டுமல்ல எல்லோருக்கும் தெளிவாக தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் வரி தண்டும் அதிகாரிகளால்மக்களுக்கு அனுவசியமாக உபத்திரவம் ஏற்படும்.

மூன்றுவதாக வரி வசூலிப்பது மக்களுக்கு சிரமமில்லாத வகையில்; அவர்கள் இலகுவாகக் கொடுக்கக்கூடிய சமயத்தில் வசூலிக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கு விதித்திருக்கும் வரியை அறுவடைகாலத்தில் வசூலிக்கவேண்டும். அதுஉங்கூட நிலவரியை ஒரேயடியாக வசூலிப்பதைவிட மூன்று அல்லது நான்கு தவணைகளில் வசூலிப்பது நல்லது. சென்னை ராஜ்யத்தில் அப்படித்தான் வசூல் செய்யப்படுகிறது.

நான்காவதாக வரி வசூலிப்பதற்கு அதிகப் பணம் செலவாகக் கூடாது. வரிதண்டுவதற்காக ஏராளமான அதிகாரிகள் நியமிக்கப்பட்டால் அவர்களுடைய சம்பளத்திற்காக வசூலித்த வரியில் பெரும் பகுதி செலவிடப்பட்டுவிடும். அதனுல் ஒரு பயனுமில்லை.

பொதுவாக ஒரு அரசாங்கத்தின் தேவைகளைப்பூர்த்தி செய்யக்கூடியதாயிருக்கவேண்டும், வரியிலிருந்து கிடைக்கும் வருமானம். மேலும் ஜனத்தொகைப் பெருகப் பெருக அரசாங்கத்தின் செலவினங்கள் வளருமாதலால் வரித்தொகை வசூலும் தானுகவே பெருகக்கூடியதாயிருக்கவேண்டும்.

இருபதாவது நூற்றுண்டில் வாழும் நமக்கு மேலே சொன்ன நியதிகள் சர்வ சாதாரணமாகத் தோன்றலாம். ஆனுல் முன்காலங்களிலெல்லாம் மன்னர்கள் முறை தவறியும், மக்கள் சக்திக்கு மீறியும் வரி வசூலிப்பதும் வசூல் செய்யும் அதிகாரிகள் முரட்டுத்தனமாயும் மிருகத்தனமாயும்மக்களிடம்நடந்து கொள்வதும், வசூலித்தபணத்தில் பெரும் பகுதியை வசூலித்தவர்களே அபகரித்துக்கொள்வதுமே சர்வ சாதாரணமாக இருந்தது.

மேற்சொன்ன விதிகளைத் தவிர, நடைமுறையில் கவனிக்கவேண்டிய சில காரியங்களும் இருக்கின்றன. வரி விதிப்பைப்பற்றிய சகல விவரங்களும்-மக்களுக்குப் புரியும் விதத்தில் இலகுவாகவும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய விதத்திலும் தெளிவாக இருக்கவேண்டும். அப்படியில்லாமல் அர்த்தபேதங்களுண்டாகும் விதத்திலும் அதைத் தெளிவுபடுத்திக்கொள்ள ஒரு வக்கீலையோ அல்லது மற்றெவரையோ நியமிக்க வேண்டிய தொல்லை ஏற்படக்கூடாது.

அரசாங்கம் விதிக்கும் வரிகளில் சிலவாவது வேண்டும் பொழுது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஏதுவானதாக இருக்க வேண்டும். அப்படி வருமானத்தை அதிகப்படுத்தும் நேரத்தில் வசூல் செய்யும் செலவும் அதிகரிக்கக் கூடாது. நாட்டில் வியாபாரம், தொழில் துறைகளில் செழிப்பு ஏற்படும்போது தானுகவே அதிக வருமானம் கொடுக்கக் கூடிய வரிகள் இருக்கின்றன. உதாரணமாக வருமான வரியை எடுத்துக்கொண்டால் நாட்டில் தொழில் அபிவிருத்தி ஏற்படும்போது அந்த வரியினுல் வரும் வருமானமும்

---

புதுசட்ட திட்டப்படி, கிளைக் கழகங்களை நிறுவியிருக்கும் மாவட்டங்களை, வரிசைக் கிரமமாகத் தந்துள்ளோம். வடஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்கள் தவிர்த்து கீழ்க்கண்ட மாவட்டங்களில்மட்டும் அமைக்கப்பட்டிருக்கும் கிளைக் கழகங்களின் தொகை 430 இந்தக் கிளைகள், மத்திய கழகத்துடன் தொடர்பு கொண்டு, விதிமுறைப்படி பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சட்ட ரீதியில்; கிளைக்கழகங்கள்அமைக்கும் பணி சம்பந்தமான தகவல்கள் வந்துகொண்டுள்ளதாகவும் இதுவரையில், பதிவு செய்யப் பட்டிருப்பதைமட்டும் தருவதாகவும், தலைமைக் கழகப் பொறுப்பாளர் தெரிவிக்கிறர். அவர் தரும் விபரம்.

தஞ்சை 85
கோவை 69
(நகரக்கிளைகள் தவிர்த்து)
சேலம் 65
ராமநாதபுரம் 54
மதுரை 49
திருச்சி 39
சென்னை 35
திருநெல்வேலி 26

கன்னடம், ஆந்திரம், கேரளப் பகுதிகளில் 7. பம்பாய் 1.

இன்னும் மூன்று மாவட்டங்கள், பாக்கியிருக்கின்றன. மொத்த கிளைக் கழகங்கள், பொறுப்பாளர்கள் விபரம், பிறகு தலைமைக் கழக வெளியீடுமூலம் தெரிவிக்கப்படும். தலைமைக் கழகத்துடன் தொடர்புகொள்ளாத கிளைக்கழகங்கள் இருந்தால், அவை, தமது மாவட்டக் கழகத்தினருக்கு எழுதியோ அல்லது தலைமைக் கழகப் பொறுப்பாளருக்குத் தெரிவித்தோ, விரைவில் பதிவு செய்துகொள்ளலாம். கிளைக் கழகங்கள் தாம், கழகத்தின் கோட்டைகள்! அவைகளைப் பலப்படுத்தி, ஜனநாயக ரீதியில் இயங்கச் செய்வதே நமது இந்த ஆண்டுத் திட்டம். கவனத்தில் வையுங்கள்.

தானுகவே உயரும். மேலும் யுத்த நெருக்கடி ஏற்படும்பொழுது வரியை சிறிது உயர்த்தினாலும், ஏராளமான வருமானம் மேற்கோண்டு கிடைக்கும் ஒரு அரசாங்கம் சாமான்களின் மேல் மட்டும் வரி விதித்தால் அது அபாயமாகவே வந்து முடியும். ஏனெனில் நாட்டில் வியாபாரம் தொழில் முதலியவை செழித்திருக்கும்போது ஏராளமான வருமானம் வரும். ஆனல் நாட்டில் செழிப்புக் குறைந்து மக்கள் கஷ்டப்படும் நேரத்தில், அரசாங்கம் அக்கஷ்டத்தைப் போக்க அதிகமாக செலவிட வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படும் நேரத்தில், நேரத்தில் அந்த வரிகளிலிருந்து வருமானம் குறைந்து போகும்.

கடைசியாக ஒரு அரசாங்கம் குறைந்த வருமானம் கொண்டு வரக்கூடிய பல வரிகளை சுமத்தி மக்களை கஷ்டப்படுத்துவதைவிட நல்ல வருமானம் தரக்கூடிய ஒரு சில வரிகளை மட்டும் விதித்தால் நல்லது.

# 144

ஆறுமுகநேரி:— 144 மீறிய எம். எஸ். சிவகாமி, எம். ரத்தினம், சாது, தியாகராஜன், மணிமொழியன், சண்முக சுந்தரம், தனசேகரன், திலகராஜன், சோமு ஆகியோருக்குச் சிறைவாசம்.

தென்தாமரைக்குளம்: 144 மீறிய வி. எம். ஜான், கி. மனோகரன், மு. சுப்பிரமணியம், இ. குமாரசாமி, ஏ. பகவதிப்பெருமாள், எஸ். செல்லத்துரை, எஸ். ஆதிநாராயணன், ஏ. தங்கப்பழம்; டி. பொன்னையா, எஸ். செல்லப்பன், எஸ். தங்கசாமி சிறைத்தண்டனை.

சித்தையன்கோட்டை:— பேச்சுரிமைக்காக காஞ்சி. கல்யாணசுந்தரம் ஆர். எஸ். எஸ். நடராசன், ஆர். எஸ். சுனகராசன் எஸ். வெங்கடேசுவரன், எம். எஸ். எஸ். மணி, முகம்மது அமீது, அப்துல்காதர், காமாட்சி, டி. கே. நாதன், எஸ். ரத்தினசாமி ஆகியோருக்குச்சிறைத் தண்டனை.

திண்டுக்கல்:— பி. என். எம். சவுடையா, எஸ். முருகையன், பி. ஆர். கேந்திரன், பி. எஸ். மணி, என். அண்ணாமலை ஆகியோர் அடக்குமுறைக்கு ஆளாயினர்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கிவிடக்கூடியதுமல்ல. சமுதாயத்துறையில் மாறுதல்! அரசியல் துறையில் ஓர் மனவிழிப்பு!!—இந்த அருமையான் சூழ்நிலைக்கு யாருடைய பணி காரணம் என்பதை, ஒதுக்கிவிடுவோம்.

இவ்விதம் ஏற்பட்டிருக்கும்மனப்புரட்சியின் அளவை வீணுக்கிவிடுவதா?—என்பதே, நமது கேள்வி.

"சுயமரியாதை இயக்கமும் திராவிட இயக்கமும் செய்த அரும்பணியின் பலனன்றோ, இவை?"—என்று தோள் தட்டுவதைவிட, "இந்த அருமையான சூழ்நிலையை ஆற்று வெள்ளமாக்கிடுவதா?" என்றே, ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்.

மாற்றுக் கட்சித் தோழர்கள் — குறிப்பாக, முற்போக்கு எண்ணம் படைத்தோர், சிந்திக்க வேண்டும்

அவ்விதம் சிந்திக்கும் நேரத்தில், பொதுவுடைமை பூப்பதற்கு, தெற்கு எவ்வளவு பண்பட்டிருக்கிறது என்பது விளங்கும்,

இப்போது வளர்ந்திருக்கும் சூழ்நிலை மட்டுமல்ல, தென்னுட்டின் நிலையும், பொதுவுடைமை வளரத்தக்க முற்போக்குப் பிரதேசமாகும்.

அரசியல் வரலாறுணர்ந்தோர், வடக்கையும் தெற்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தென்னுட்டில் புதுமணம் காண்பது எளிதென்பதை உணரலாம்.

ஏழ்மை
தொழிலின்மை
அதிகாரம் இன்மை
பசி! பட்டினி!!
ஏக்கம்

நவீன ஆலைகள் இல்லாமை. இவ்விதம், பாதாளத்தில், கிடப்பது தெற்கு! வடக்கோ, பஞ்சணையில் இருக்கிறது!!

இதை ஒப்பிடும்போது, ஒழுங்கான கூட்டு முயற்சியோடு, முற்போக்குக் கட்சிகள் ஒத்துழைத்தால், விரைவில், எந்த இடத்தில் பொதுவுடைமை மலரைப் பூக்கச் செய்யலாம் என்பதைக் கூர்ந்து சிந்திக்கவேண்டும்.

"நானே சாதிப்பேன்!"
"எமது 'லேபிளே' முக்கியம்"

இந்த, எண்ணங்கொண்டோரல்ல, நாம். எவ்விதமாயினும், நமக்குப் புதுவாழ்வு வேண்டும்—அதற்காக மக்கள் உள்ளத்தை உலேக்கூடமாக்கி, வெற்றியும் பெற்று வருகிறோம்.

இந்த வெற்றியை நிரந்தரமாக்கி, புதுவாழ்வு அரும்பச் செய்யவே, முற்போக்குக் கட்சிகளின் நல்லுறவை வளர்க்கிறோம்.

தென்னுட்டில், வேறெந்தக்கட்சிகளைக் காட்டிலும், தி. மு. க. வுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், கொள்கைஅளவிலும்,தோழைமைத் துறையிலும்—நெருங்கிய சகோதர பாசம் உண்டு.

அவர்கள் நினைக்கும்இன்பவாழ்வு தான் நமது இதயத்திலும் இருப்பதென்பதை, எவரும் அறிவர்.

அந்த இன்பவாழ்வை, தெற்கில் ஏன், நாம் ஏற்படச் செய்யக்கூடாது? அந்த இன்ப வாழ்வு ஏற்படும் பூமிக்கு 'திரு இடம்' என்ற பெயரை நாம்ஏன் இட்டழைக்கக்கூடாது? பேதமும் பிளவும் ஒழிந்துவிட்டால், பிறகு, யாவரும் "மனிதர்தானே!" நாம், திராவிட இயக்கத்தைக்கட்டிக் காக்கிறோம்.

பொதுவுடைமை பூத்த அந்த இன்பத் திருநாட்டின், சிறந்த அங்கங்களாக, முற்போக்கு எண்ணம் வளர்ந்துவரும் ஆந்திரமும் கேரளமும், இருக்கவா மறுக்கும்?

நமது எண்ணம் தெற்கேமுடிந்துவிட்டால், வடக்கு ஏக்கதியாகும்?— அமெரிக்காவோடு கைகுலுக்கினும் வடநாட்டுத் தர்பார், நமது புதிய தாரகத்தை, எதிர்த்திட இயலுமா? நாம்தான் விடுவோமா?

இதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்—தோழர்களே.

பரந்த தோட்டத்தை பூங்காடு ஆக்குமுன், கள்ளியையும் முள்ளியையும் செதுக்கி செப்பனிடுமுன், ஓரளவு பண்பட்டிருக்கும் இடத்தில் பூச்செடிகளைப் பயிரிடுவது நல்லது. பயன் தரக்கூடியது.

நமக்குத் 'தயாராக' இருக்கும் இடத்தை நமதாக்குவோம். வீணுசையும் விவாதமும், வேண்டாம். சிந்தித்துப் பாருங்கள்.

# முஸ்லிம்களும் நாமும்

[ இரா. நெடுஞ்செழியன் ]

மயிலை திருவள்ளுவர் கழக 7வது ஆண்டு விழாவில், நான் ஆற்றிய சொற்பொழிவு குறித்து எழுந்த ஐயப்பாட்டுணர்ச்சி அகலவேண்டி, எனது பேச்சின் கருத்து. நோக்கம் ஆகியவற்றின் உண்மை நிலையை விளக்கி, வெளியிட்ட அறிக்கையை, "முஸ்லிம்" இதழாசிரியர் தமது 4—9—52-ம் நாள் இதழில் பெருந்தன்மையோடு வெளியிட்டதற்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது சொற்பொழிவின் உண்மை நோக்கத்தையும், உண்மை நிலையையும் தெளிவுற அறிந்தோர், முஸ்லிம்களின் மனதைப் புண்படச் செய்ய வேண்டுமென்பதற்காகவோ அல்லது குர்ஆனை இழித்தும், பழித்தும், குறை கூறிப் பேச வேண்டும் என்பதற்காகவோ, என்னுடைய கருத்து வெளியிடப்பட்டதல்ல என்பதை நன்கு உணர்வார்கள். திருக்குறள் எப்படி என் கருத்துக்கு ஏற்றதாகப் படுகிறது என்பதை விளக்கிக் காட்டி வருகையில், மேற்போக்காகக் காட்டிய உதாரணங்கள் பற்றிய குறிப்புகளிலே குர்ஆன் பற்றிய குறிப்பும் ஒன்றாகுமே ஒழிய, குர்ஆனை இழித்துக் கூறுவதற்கென்று பேசப்பட்ட பேச்சாகவோ, கூட்டப்பட்ட கூட்டமாகவோ தெளிவறிவுடையோர் யாரும் கொள்ளமாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

முஸ்லிமகளிடையே, என் பேச்சுப்பற்றிய ஐயப்பாட்டுணர்ச்சியால் உந்தப்பட்டுள்ளவர்கள் இருவகையினராவர். ஒரு சாரார், எப்பொழுதுமே திராவிட இயக்கத்தையும் பகுத்தறிவியக்கத்தையும் அழித்தொழிக்க வேண்டும் என்ற வெறுப்புணர்ச்சியிலேயே வேலை செய்து வந்து, இப்பொழுது துரும்பைத் தூணாக்கித், தூணை யானையாக்கி, அதன் மூலம் இயக்கம் அழிந்துவிடாதா என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள். மற்றொரு சாரார் திராவிட இயக்கக் கொள்கைகளுக்கும், தங்களுடைய நெறிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அறிந்து, இயக்கப் பணிகளிலே பங்கு கொண்டு, நட்புறவோடு இருந்து வருபவர்கள் ஆவார்கள். நான் சற்று அக்கறையோடு விளக்கங் கூற முற்படுவது முன்னைய சாரார்க்கு அல்ல. அவர்கள் நம்மைப் பொறுத்து எதையும், எப்பொழுதும் எதிர்ப்பவர்கள்; இப்பொழுதும் எதிர்க்கிறார்கள் என்றால், அவர்களைப் பற்றிக் கவலையில்லை. நான் விளக்கங் கூறி ஐயப்பாட்டுணர்ச்சியைப் போக்க விரும்புவதெல்லாம், பின்னைய சாரார்க்கேயாகும்.

நான் மயிலை திருவள்ளுவர் கழக ஆண்டு விழாவில், உலகில் தோன்றி, வளர்ந்து, நிலைத்து வரும் மதங்களிலே எந்த மதம் நல்ல பல

## வாரீர்!

[கருணா]

—❀—

பொறுத்திருந்த காலமெலாம் போதும்; இன்று
புவியெங்கும் நமையறியப் பொங்கிச் செல்வோம்!
வெறுத்தொதுக்க வேண்டியவீண் நூற்களையும்
வேறுபடும் மக்களையும் விலக்கித் தள்ளி
அறுத்தெறிந்து தளைகளெல்லாம் அகன்று நீங்க
ஆண்மையுடன் விரைந் தெழுந்து நமது தொண்டை
மறுத்தெதிர்க்கும் மதியிலிகள் மயங்குமாறு
மாண்புடனே செயலாற்ற வழிகள் செய்வோம்!

கண்ணியத்தைக் கவசமெனக் கொண்டோர் நாமே
கடுகளவும் நேர்மைவழி தவறிடாமல்
எண்ணியதை முடித்துவைக்கும் உள்ளத்தோடும்
எதுவரினும் தாங்குகின்ற இதயத் தோடும்
கண்ணிருந்துந் தடுமாறும் அரசாங் கத்தார்
கடுமையுடன் அடக்குமுறை வீசி நாசம்
பண்ணிடவே முயன்றாலும் பலிக்கா வண்ணம்
பண்பட்ட நிலைபெறுவோம், ஒன்று கூடி!

மூன்றாண்டு காலத்தின் முன்னே நாட்டில்
மூண்டபெருங் காரிருளில் சிக்கி, மக்கள்
ஆன்றவழி காணாமல் அமைதி குன்றி
அழுதழுது, கண்ணீரைச் சிந்தும் போது
தோன்றியதோர் இளம்பிறைதான் துயரம் நீக்கித்,
தூயமுழு மதியாக வளர்ந்து, நம்மை
ஈன்றெடுத்த திராவிடத்தைத் தனிநா டாக்கி,
இன்னொளியை வீசிடவே காண்போம் வாரீர்!

சீர்திருத்தக் கொள்கைகளைக் கட்டி, வளர்த்துக், காத்துவருகிற மதம் என்பதை ஆராயமுற்பட்டிருந்தால், அது இஸ்லாம் மதம் என்பதைத்தான் கூறியிருந்திருப்பேன். அப்படித்தான் இதுவரையிலும் கூறிவந்திருக்கிறோம் என்பதையும் பலர் அறிவார்கள். அந்தக் கருத்தில் இம்மியளவும் நானோ என்போன்றோரோ இப்பொழுதும் மாறவில்லை. மத நம்பிக்கையாளர்களிலே சீரழிந்த கொள்கைகளையும், பேதம் வளர்க்கும் நெறிகளையும் பல தெய்வவணக்கத்தையும் நம்பி வாழ்வோர்க்கு அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமாக, எடுத்துக் காட்டிய மதம், இஸ்லாம் என்பதையும் பலரும் அறிவார்கள். ஆனால் நான் அன்று மதவிசாரணைபுரிய முற்படவில்லை. பொது ஒழுக்கக் கொள்கைகளைத் திறம்பட அறுதியிட்டுக்கூறும்திருக்குறளோடு, இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் கவலை செலுத்தி உபதேசம் புரியும் மதநூல்களை ஒப்பிட்டுபபார்க்கும் போது, திருக்குறளில் ஏற்பவையாகக் காணப்படும் விகிதரசாரத்தின் அளவு சிறிது மிகவாகத் தென்படுகிறது என்று கூறினேன். திருக்குறளின் தனிச்சிறப்பை எனக்கேற்ற வகையில் வெளிப்படுத்திக் காட்ட முனைந்தேன் என்று ஆகுமேயொழிய, பிறமத நூல்களை அந்தந்த மதக்காரர்களின் தனிச்சிறப்பு எண்ணங்களை இழித்துக் கூறினேன் என்பது எப்படிப் பெறப்படும்? "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாரதியார் கூறினாரென்றால், பிறமொழிகளையெல்லாம் இழித்துக் கூறினாரென்றோ, அல்லது உலகிலுள்ள மொழிகள் அத்தனையிலும் பாண்டித்யம் பெற்றுணர்ந்த பிறகே தான் அவர் அவ்வாறு கூறியிருந்திருக்கவேண்டும் என்றோ கூறுவது எங்ஙனம் பொருத்தமுடையதாகும்? "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை" என்று பாரதியார் கூறினாரென்றால், மற்ற மொழிப்புலவர்கள் அத்தனைப் பேரையும் இழித்துக் கூறினாரென்றோ அல்லது உலகப் பெரும் புலவர்கள் அத்தனைப் பேரையும் நன்கு அறிந்து முழுவதும் தெரிந்த பிறகே சொல்லியிருக்க வேண்டுமென்றோ கூறுவது எங்ஙனம் பொருந்தும்? அது போலவேதான் திருக்குறளை ஒரு குறிப்பிட்ட நிலையில் நின்று அதன் தனிச்சிறப்பை வெளிப்படுத்தவிரும்பினேன். இது குர்ஆனை இழித்துக் கூறும் நோக்கத்துக்காகவே சொல்லப் பட்டதாகும் என்று கொள்வது எங்ஙனம் பொருந்தும்?

நான் தனிப்பட்ட முறையில் குர்ஆனை எப்படி நோக்குவேன், என்னோடு குர்ஆன் எவ்விதத் தொடர்போடு இயங்கும் என்பதை, "முஸ்லிம்" ஆசிரியர் 4—9—52-ல் தான் எழுதிய 'ஆசிரியர் குறிப்பு" என்ற தலைப்பின்கீழ் "கனம் நெடுஞ்செழியன் ஒரு முஸ்லிம் ; அல்லவென்பதிலிருந்தே அவர் குர்ஆன் ஹரீபை அப்படியே ஒத்துக்கொள்ளவில்லையென்பது வெளிப்படை. ஏன் ஒத்துக்கொள்ளவில்லை என்பதுபற்றி அவர் தமது அபிப்பிராயத்தை வெளியிட உரிமையுண்டு என்பது யாவரும் அறிந்த விஷயமாகும்." என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். இப்படிப்பட்ட நிலையோடு இதுவரையில் இருந்துவந்த என் போன்றோர்க்கும்—முஸ்லிம் சமுதாயத்துக்கும், இதுவரையில் இருந்து வந்த நட்புறவு, இப்பொழுது ஏன் வெட்டிவிடப்படுகிறது; வெட்டிவிடப்படுவதற்கான முயற்சிகள் பல்வேறு வகையிலும் சிலரால் ஏன் கையாளப்படுகின்றன என்பனவற்றை திராவிட இயக்கத்தில் பற்றுக்கொண்டு பங்கெடுத்து வாழ்ந்து வரும் முஸ்லிம் தோழர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

மேலும் நான் திருவள்ளுவர் கழகத்தில் பேசிய இந்தக் கருத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல், பொருளாதார, சமுதாயக் கொள்கைகளிலோ, திட்டங்களிலோ ஒன்றல்ல. அரசியல் துறையிலே நாட்டுப்பிரிவினைக்கோரிக்கை, பொருளாதாரத் துறையிலே சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதிசெய்தல், சமுதாயத்துறையிலே பேதமற்ற, பிற்போக்குத் தன்மையற்ற முற்போக்குச் சமுகத்தை உருவாக்குவது ஆகிய கொள்கைகளுக்கும், என்னுடைய தனிப்பட்ட ஆராய்ச்சியின் பயனால் திருவள்ளுவர் கழகத்தில் கூறப்பட்ட கருத்துக்கும் பொருத்தம் கண்டுபிடிக்க முயலுவது எப்படி ஏற்றதாகும்? திராவிட முன்னேற்றக் கழகத்தில் பங்குகொண்டு பலரும் தொண்டாற்றுவது மேற்கண்ட அரசியல், பொருளாதார, சமுகக் கொள்கைகளுக்கே தவிர, என்னுடைய திருக்குறள் பற்றிய கருத்தை நிலைநாட்டுவதற்கல்ல. திருக்குறள் பற்றிய என்னுடைய கருத்தில், ஒட்டி வருபவரும் இருப்பார்கள்; சிறிது மாறுபடுபவர்களும் இருப்பார்கள்; பெரிதும் மாறுபடுபவர்களும் இருப்பார்கள்

திராவிட இயக்கத்தில் சேர்ந்துள்ள முஸ்லிம் இளைஞர்களைப் பிரிக்க, மயிலை பேச்சுப்பற்றிய வாதம் பயன் படுத்தப்படுகிறது! ஏன் என்றால், முஸ்லிம் இளைஞர்களுக்குத் திராவிட இயக்கத்தினிடத்து வெறுப்புணர்ச்சியுண்டாவதற்கான காரணங் காட்டி, அவர்களைப் பிரிக்கவேண்டிய அவசியமான கட்டத்தில் இன்றைய முஸ்லிம் லீகின் முக்கியஸ்தர்கள் சிலரும் இருக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் துரும்பு தூணாக்கப்படுகிறது!

திராவிட இயக்கத்தின் சீர்திருத்தப் பணிக்கும், முஸ்லிம் சமுதாயத்தின் வாழ்க்கை நெறிகளுக்கும், மற்றெந்த மதப் பிரிவினையைக் காட்

## எது, பொதுவுடைமையாகிறது?

"மூலதனம் பொதுச் சொத்தாக மாற்றப்படுகிறது என்றால்—சமுகத்திலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் பொதுவானதாக ஆக்கப்படுகிறது என்றால்—என்ன அர்த்தம்? தனிமனிதன் ஒருவனுடைய சொத்து, பொதுச் சொத்தாக ஆக்கப்படுகிறது என்று அர்த்தமாகாது. சமுக சக்தியே சமுகத்துக்குப் பொதுவாக்கப்படுகிறது. அதன் மூலம் சொத்தின் சமுகத் தன்மைமட்டுமே மாற்றப்படுகிறது. அதாவது, சொத்து இன்றைக்குப் பெற்றிருக்கிற 'தனி ஆதிக்க'த் தன்மையை இழந்து விடுகிறது"

—மார்க்ஸ். எங்கெல்ஸ்.

டிலும் நெருங்கிய கொள்கை ஒற்றுமை இருந்த காரணத்தால் தான், திராவிட இயக்கமும் முஸ்லிம் லீகும் உறவுள்ள இயக்கங்களாக வாழ்ந்து வந்தன. பெரும்பாலாரான முஸ்லிம்கள் வாழும் பகுதியாகிய பாகிஸ்தான் பிரிவது, அங்கு வாழும் பெரும்பான்மையினர்க்கு நலம் பயக்கவல்லதாகும் என்ற கருத்தில்தான் ஆரம்ப காலமுதல், பாக்கிஸ்தான் பிரிவினையை ஆதரித்து வந்தோம்—இன்னும் ஆதரிக்கிறோம். காங்கிரஸ் காரர்களின் ஏசலும், தூற்றலும் மாரிபோல் பொழியப்பட்ட நேரத்திலும், கொள்கை சரியென்று பட்ட காரணத்தால் முஸ்லிம் லீக் மேடைகளில் திராவிட இயக்கத்தினர் தோன்றிக் கொள்கை விளக்கம் செய்தனர். திராவிட இயக்கத்தைச் சார்ந்த பகுத்தறிவாளர்களான நம்மை இதுவரையில், நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் விழாக்களுக்கும், சீதக்காதி நினைவு நாளுக்கும், உமர் புலவர் நாளுக்கும் விரும்பி வரவழைத்தார்கள் முஸ்லிம் நண்பர்கள். சென்ற பகுத்தறிவாளர்களும் அங்கெல்லாம் நடத்தப்பட்ட பிரார்த்தனைகளை ஏற்றதில்லை; கூறப்பட்ட அற்புதங்களை ஒப்புக்கொண்டதில்லை; நபிகள் எப்படிச் சிறந்தவொரு சீர்திருத்தக்காரர் ஆவார் என்பதையும், கொள்கைகளைப் பரப்ப எவ்வாறு கஷ்ட நஷ்டங்களை ஏற்றார் என்பதையும், கள் குடியாமை, வட்டி வாங்காமை, ஆடம்பரம் அலங்காரம்செய்யாமை, விதவைக்கு மறுமணம், பெண்களுக்குச் சொத்துரிமை ஆகியவைகளை வழங்க இஸ்லாம் எவ்வாறு இடந்தந்திருக்கிறது என்பதையும் விளக்கி வந்துள்ளார்கள். அந்த விளக்கத்தில் அதே பகுத்தறிவாளர்கள் இப்பொழுது இம்மியளவும் மாறுபடவில்லை. முஸ்லிம் அல்லாத மக்களுக்கு, இஸ்லாத்தின் சிறந்த கொள்கைகளும், நபிகள் நாயகத்தின் பெருமையும்தமிழகத்தைப் பொறுத்த வரையில் பரப்பப்பட்டன என்றால், அதில் மிகப் பெரும் பங்கு திராவிடஇயக்கத்தைச்சார்ந்ததாகும். இப்படிப்பட்ட நிலையில் நீடித்து வந்த உறவை வெட்டிக் கொண்டு முஸ்லிம் இளைஞர்கள் வெளியேறி வந்துவிடவேண்டும் என்ற அழைப்பு அவ்வளவு அவசரமாகவும், அடுக்கடுக்காகவும் வெளிவருவதற்குக் காரணம், என்னுடைய பேச்சாக இருக்க முடியாது, காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்கும் ஏற்பட்டிருக்கும் புதிய உறவு!

ஆட்சிப்பீடத்தில் ஏறி இருக்கும் காங்கிரசின் அணைப்பு இருந்தால் தான், முஸ்லிம் லீகின் சில முக்கியஸ்தர்களின் எதிர்கால வாழ்வு காப்பாற்றப்படுவதாக இருக்கும் என்ற கருத்திலோ அல்லது காங்கிரசின் அந்தியகாலக்கூட்டுறவு தங்களில் சிலரை நகர மன்றங்களிலும், சட்ட மன்றங்களிலும்ஏற்றுவதற்கு வாய்ப்புடையதாக இருக்கும் என்று எண்ணிய எண்ணத்தாலோ, திராவிட இயக்கத்தில் கொள்கையின் காரணமாக நீங்காப் பற்றுக் கொண்டு விளங்கும் முஸ்லிம் இளைஞர்களை காங்கிரஸ் அணைப்பில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டிய அவசியம் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்களுக்கு ஏற்பட்டுவிட்டது போலும்!

இல்லாவிட்டால், நான் குர்ஆனை நூற்றுக்கு நூறு 1952-க்குப் பொருந்தாது என்று கூறியது போலவும், குறள்தான் நூற்றுக்கு நூறு பொருந்திவரும் என்று கூறியதுபோலவும்; பழக்க வழக்கம் எப்படி மூடப் பழக்கமாக மாறிவிடுகிறது என்பதற்கு உதாரணங்கள் கொடுத்துவருகையில் கூறப்பட்ட அரபிநாட்டுப் பழக்கத்தை, குர்ஆனில் இருப்பதாக நான் கருதிக் கொண்டு, ஆகவே குர்ஆன் பொருந்தாது என்ற முடிவுக்கு வந்துவிட்டது போலவும், அவரவர் கருத்தை மக்களிடத்தில் தனித் தனியே எடுத்துக் கூறி மக்களின் ஆதரவைப் பெறுவதே நல்லது என்னும் கருத்துப்பட கூறிய கூற்றை நான் முஸ்லிம் சமுதாயத்தையே சவாலுக்கு அழைத்ததுபோலவும் திரித்துக் கூறிக்கொள்ளவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காதே!

இஸ்லாம் பொறுத்த எனது முன்பின் கூறியவைகளையும், மயிலையில் பேசிய பேச்சின் உண்மை நிலையையும், அதன் நோக்கத்தையும் ஒருசேர வைத்துப் பார்த்தால், முஸ்லிம் தோழர்களைப் புண்படுத்தும் நிலையிலேயோ, நோக்கத்தோடோ எனது கருத்து வெளியிடப்பட்டது அல்ல என்பதை யாரும் நன்கு உணர்வர்.


## அண்ணாவின் அரிய நூல்கள்

| | |
|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2-4-0 |
| கம்பரசம் | 1-8-0 |
| கபோதிபுரக் காதல் | 1-4-0 |
| குமரிக் கோட்டம் | 1-0-0 |
| பணத் தோட்டம் | 1-0-0 |
| உலகப் பெரியார் காந்தி | 1-0-0 |
| கற்பனைச் சித்திரம் | 1-0-0 |
| சிறு கதைகள் | 1-0-0 |
| தீ பரவட்டும் | 1-0-0 |
| ஆறு கதைகள் | 1-0-0 |
| 1858—1948 | 1-0-0 |
| இலட்சிய வரலாறு | 1-0-0 |
| ஆரியமாயை | 1-0-0 |
| அறப்போர் | 1-0-0 |
| வர்ணாஸ்ரமம் | 0-12-0 |
| நிலையும் நினைப்பும் | 0-12-0 |
| மே தினம் | 0-5-0 |
| அவர்கள் சந்திப்பு | 0-3-0 |

**அரங்கண்ணல்**

| | |
|---|---|
| இதயகீதம் | 0-12-0 |
| ரஸ்புடீன் | 1-8-0 |
| ரோம் | 1-8-0 |

**மு. கருணாநிதி**

| | |
|---|---|
| விடுதலைக் கிளர்ச்சி | 1-0-0 |
| பூந்தோட்டம் | 0-4-0 |

**சி. பி. சிற்றரசு**

| | |
|---|---|
| கொலம்பஸ் | 1-0-0 |

**மதியழகன்**

| | |
|---|---|
| அறிவின் தூதர்கள் | 0-12-0 |
| நன்றி யாருக்கு? | 1-0-0 |

**தில்லை-வில்லாளன்**

| | |
|---|---|
| இருளும் ஒளியும் | 1-8-0 |

**வாணன்**

| | |
|---|---|
| ரஷ்ய இலக்கியம் | 1-8-0 |

கிடைக்குமிடம்;—

**திராவிடப் பண்ணை,**

தெப்பக் குளம், : : திருச்சி.

# புது வாழ்வு, காண்போம்!

[ நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி ]

புதுயுகம் மலர்ந்துவிட்டது. புது எண்ணங்கள் மலர்ந்துகொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் புதுமை! எதைக் கண்டாலும் புதுமை! இத்தகைய புது வாழ்வு வேண்டும் என்கிற ஆசை, நாட்டில் எதிர்பாராத அளவுக்கு மலர்ந்திருக்கிறது.

"என்னைக் காட்டிலும் அறிவிலும், ஆற்றலிலும் மிக்க பலர் இருக்க, சாதாரண நடிகனாகிய எனது கருத்துக்களை தெரிவிக்க சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்......" என்று நான் என் கட்டுரையைத் துவக்க விரும்பவில்லை. எனது கருத்துக்களை வாசகர்களாகிய உங்கள்முன் தெரிவிக்கும், ஒரு நல்ல வாய்ப்பாகவே நான் கருதுகிறேன் — மகிழ்கிறேன். ஆனால், பற்பலர் என்மீது சோபாக்கினியை, வீசிக்கொண்டிருக்கவே செய்வர்.

"ராமசாமியா — அவனா இப்படி எழுதுகிறான்?"

"நடிகனுக்கும் பொது வாழ்வுக்கும் என்ன சம்பந்தம்?"

"வேஷம் தடவுபவன் பொது மேடையில் பேசுவதா? பத்திரிகையில் எழுதுவதா?"

இப்படியெல்லாம், சிலர் சீறிக்கொண்டுதானிருப்பர். ஏனெனில், நாடகக்காரர்கள், சினிமா நடிகர்கள் என்றால், அவர்கள் ஏதோ, எங்கிருந்தோ வந்துவிட்டவர்கள்—அவர்களுக்கும், சமுதாயத்துக்கும் சம்பந்தம் இருக்கக்கூடாது என்றே கருதுகின்றனர். நடிகர்கள் என்றால் அவர்களும் மனித சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தானே, அவர்களுக்கும் தம் தாய் நாட்டுக்குச் சேவை செய்யவேண்டும் என்கிற ஆசை இருக்காதா என்றெல்லாம்எண்ணிப் பார்ப்பதில்லை.

சீர்திருத்தம் என்ற சொல்லை அறியாதார், தமிழ்நாட்டில் யாருமில்லை. வீடு இடிந்துபோய்க் கிடக்கிறது—அதைக் காண்போர் கேட்பர், 'ஏன், இந்த வீட்டைச் சீர் செய்யக்கூடாது?' என்று. எழுதும் பேனாவின் முள் ஒடிந்து போயிருக்கும்; அதை நாம் கடையில் கொடுத்து 'சீர் செய்து கொடுங்கள்' என்றே கேட்கிறோம். சாக்கடை, நாற்றம் வீசுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; 'இதை யெல்லாம் சீர்திருத்தக்கூட முனிசிபாலிடிக்குத் தெரியவில்லை' என்று சொல்வோம். ஆகவே, சீர்திருத்தம் என்பது, கெட்டுப்போன ஒன்றை, மறுபடியும் நல்லதாக ஆக்குவது—புதுப்பிப்பது.

அருமையான ரோஜா. நேற்று அது செடியிலே கூத்தாடிற்று. நம் கண்களையும் கருத்தையும் அதன் ஆட்டமும் மணமும் அள்ளின. ஆனால், அதற்கு முதல் நாளோ, அது அரும்பு—நேற்று மலர். இன்றோ, மலர் வாடி மண்ணிலே வீழ்ந்துவிடுகிறது. இதழ்கள், காற்றால் எங்கெங்கோ அடித்துப் போகப்படுகின்றன. நேற்று அது அழகான ரோஜா! இன்றோ வாடிய ரோஜா! நாளை அது இருந்த இடத்தில் இன்னொரு ரோஜா மலர்ந்தால்தான் நாம் மகிழமுடியும்.

பத்து வருடங்களுக்கு முன்பெல்லாம் நீங்கள் 'நல்லதங்காள்' 'நளாயினி' 'திரௌபதைவஸ்திராபரணம்' இதுபோன்ற படங்களைத்தான் பார்த்தீர்கள். ஆனால், இப்போதோ, உங்கள் உள்ளங்களைக் கவரப் புதுப் புதுப் படங்கள் தேவைப்படுகின்றன. பழைய படத்தைக் கொண்டுவந்து உங்கள் ஊர் சினிமா கொட்டகைக்காரர் போட்டால், அவர் பெட்டியும் நிறையாது —நீங்களும் அந்தப் பக்கம் திரும்ப மாட்டீர்கள்!

காரணம், மனிதன் புதுமையை விரும்புகிறான். வாடிய ரோஜாவை அவன் விரும்பமாட்டான். கெட்டுப்போன பலகாரத்தைத் தின்றால் வாய்கூசும்-வயிறு வலிக்கும். பழைய படம் — எவருக்கும் பிடிப்பதில்லை. ஆகவே, தன்னுடைய நடை உடை பாவனைகளில், வாழ்க்கையில்,மனித சமுதாயம் புதுமை காண ஆசைப்படுகிறது. பழமையை வெறுக்கிறது. ஆகாயத்திலே அதோ வட்டமிட்டுப் பறக்கிறது, விமானம்! நீரைக் கிழித்துக்கொண்டு கடலிலே கப்பல் செல்கிறது. பல்லாயிரம் மைல்களுக்கப்பால் ஒருவர் பேசினால், அதை நம்வீட்டில் உட்கார்ந்தபடியே கேட்க 'ரேடியோ!' மனிதன், இவ்வளவு புதுமைகளைக் கண்டுகொண்டேயிருக்கிறான். அவனைச் சுற்றி, புதிது புதிதாக, பற்பல சாதனங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. கட்டை வண்டிக்காலம் மறைந்துவிட்டது—கார்கள் பலப்பல விதமாகத் தோன்றிவிட்டன! காலையில் எழுந்ததும் நீர் போட்ட சோறு நாம் சாப்பிடுவதில்லை—'இட்லி'யைத் தேடுகிறோம்! குடுமி மறைந்துபோய் 'கிராப்' எங்கு பார்த்தாலும்! —இந்த மாறுதல்களை யாரும் சாதாரணமாகக் கருதக்கூடாது. எவ்வளவு பெரிய மாறுதல்கள்! எத்தகைய புதுமைகள்! எவ்வளவு அருமையான விஞ்ஞான ஆராய்ச்சிகள்! இதையெல்லாம் நாம் அனுபவிக்கிறோம். அதனால் பெரும்பயன் அடைகிறோம். காரோ, ரயிலோ இரண்டு நாட்கள் ஓடவில்லையென்றால், நாம் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல.

ஆகவே, முன்பிருந்த நிலைக்கும், இப்போது நாம் வாழும் நிலைக்கும் இடையே பல புதுமைகள் ஏற்பட்டுவிட்டன. அப் புதுமைகளை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்,, இந்த உண்மையை நான் ஏன் இவ்வளவு தூரம் எடுத்துக் காட்டுகிறேன் என்றால், இவ்வளவு புதுமைகள் ஏற்பட்டிருந்தும், நமது சமுதாய அமைப்பில் அதன் வாடை வீசியிருக்கிறதா? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வகுத்துத்

தரப்பட்ட நமது சமூக அமைப்பு—ஜாதிப் பிரிவுகள், வர்ணாச்சிரம தர்மம், வாழ்க்கை முறைகள் — இவைகளில் புதுமை ஏற்பட்டிருக்கிறதா? இரயிலில் பலர் ஏறுகிறார்கள்—உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு, 'ஐயா, நீங்கள் என்ன ஜாதி?' என்று கேளுங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஜாதியைப்பற்றிச் சொல்வார்கள்! நமக்கேகூட ஆச்சரியமாயிருக்கும். ஓடுவது ரயில்—உட்கார்ந்திருப்பது மனிதர்கள்—அவர்களுக்குள்ளே இத்தனை ஜாதிகளா என்று? நமது சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் ஜாதிப் பாகுபாடுகள் ஒன்றிரண்டா? விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு உள்ளவையா?

வேதனை ஊட்டக்கூடிய செய்தி இது! மனிதன் ஆரம்பத்தில் காடுகளிலே அலைந்தான் — மரங்கள் அவன் வீடுகளாயிருந்தன. கிளைகளிலே தாவிப்பழங்களைப்பறித்துத் தன் வாழ்நாளைக் கடத்தினான். பிறகு சிறிது நாகரிகம் அடைந்தான். பூமியையும், புல் பூண்டுகளையும் கண்டான்; தன்னைச் சுற்றி நீரோடுவதைப் பார்த்தான், நீரால் புல் பூண்டு வளர்வதை உணர்ந்தான். அந்தப் புல் பூண்டுகள் மூலம் தன் பசியைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று தெரிந்துகொண்டான். வயல்கள் தோன்றின. மாடுகள் பழக்கப்பட்டன. ஏர், ஏற்பட்டது. நெல் விளைந்தது — மனிதன் வளர்ந்தான். இப்போது வளர்ந்துவிட்டான். இனியும் வளர்ந்துகொண்டே இருப்பான்!

காடுகளிலும் குகைகளிலும் கோவணாண்டிகளாய் அலைந்து திரிந்த மனிதவர்க்கம் இன்று வளர்ந்திருக்கும் நிலை சாமான்யமானதல்ல. ஆனால், இந்த நிலைக்கு வர அவன் பட்ட கஷ்ட நஷ்டங்களும் கொஞ்சநஞ்சமல்ல.

ஆனால், இவ்வளவு கஷ்ட நஷ்டத்துக்கிடையே வளர்ந்த மனித சமுதாயம், இன்று ஒன்றாக இல்லை. எல்லோரும் மனிதர்கள்தான் என்ற சமரச உணர்ச்சியில்லை. யாவரும் வாழப்பிறந்தவர்கள்தான் என்ற நல்லெண்ணம் இல்லை.

ஒருபுறம் மாடமாளிகைகள்—மற்றோர்புறம் கீற்றுக்குடிசைகள், ஓரிடத்திலே பட்டுச்சேலை — மற்றோரிடத்திலே கந்தல் துணி; ஒரு பக்கம் உல்லாசம்—இன்னொரு பக்கம் வேதனை. ஓரிடத்திலே என்ன உலகமடா! ஏழைக்கே நரகமடா! என்ற வேதனைக் கீதம். இன்னொரு பக்கத்திலே, 'கண்ணாளன் வருவார்! வைரத்தோடு வாங்கிவருவார்!!' என்ற குதூகலப் பாட்டு.

இந்த வெட்கக்கேடான நிலையிலே நமது மனித சமுதாயம் இருக்கிறது. எவ்வளவு பரிதாபகரமான காட்சி! எவ்வளவு வேதனையான காட்சி!

“டேய்!” என்று கூப்பிடுகிறார் ஒருவர்—நாற்காலியில் உட்கார்ந்தபடி.

கீழே, கைகட்டி, வாய்பொத்திய வண்ணம் நின்றுகொண்டு 'ஏன், சாமி!' என்று பயத்தோடு பதில் சொல்லுகிறான்.

அவனும் மனிதன்: இவனும் மனிதன்.

ஆனால், அவன் எஜமான்: இவன் அடிமை!

இந்த வேற்றுமை மட்டுமா? அதோ, தலையிலே கூடை, முகத்திலே களைப்பு, வயிற்றிலே பசியோடு தள்ளாடிச் செல்கிறான் ஒருவன்.

அவனெதிரே, நெற்றியிலே, நீறு, கையிலே தடி, வயிற்றிலே சந்தனம், தலைக்குமேலே குடையுடன் நடந்து வருகிறான் இன்னொருவன். சிறு நூல் ஒன்று இவனது மார்பிலே குறுக்கும் நெடுக்குமாகக் கிடப்பதைத்தவிர, இருவருக்குமிடையிலே வித்தியாசம் இல்லை. இருவரும் மனிதர்கள்தான்.

ஆனால்?

நூல் போட்டவன், நூறு அடிக்கு அப்பால் வரும்போதே, நூல் போடாதவன் ஒதுங்குகிறான். 'ஐயா, சாமி!' என்று அவனைப் பார்த்துக் கும்பிடுகிறான். புலியைக் கண்டு நடுங்கும் பசுப்போல இருக்கிறது அவனைப் பார்க்கும்போது.

இருவரும் மனித இனம்தான்.

ஒன்று பசு—மற்றொன்று புலி.

எவ்வளவு வேதனையும் விசித்திரமும் நிரம்பிய காட்சி இது. இருவரும் மனிதர்கள்தானே! ஏன் இவர்களுக்குள் ஒருவன் புலியாகவும், இன்னொருவன் பசுவாகவும் இருக்கவேண்டும்? ஒருவன் வாடவும், இன்னொருவன் வாழவுமான பேதம் நீடிக்கவேண்டும்? ஒருவன் உயர்ந்தவன், இன்னொருவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசம் இருக்கவேண்டும்? உயர்ந்தவன் சுகமாக வாழ்பவன்; தாழ்ந்தவன் சுகத்தையே காணாது மடிபவன் என்ற சூழ்நிலை ஏன் வளரவேண்டும்?

இந்தக் கேள்விகளையெல்லாம், நாம் கேட்கும்போதுதான் நமது கண்ணுக்கெதிரே, இன்றுள்ள சமுதாயம் காட்சி தருகிறது.

இன்றைய சமுதாயம், ஒரு சாக்கடை! உடைந்த கண்ணாடி! சின்னாபின்னப்பட்ட கோட்டை! இடிந்துகொண்டிருக்கும் வீடு!

இந்தச் சமுதாயத்தின் அமைப்பு ஆரம்பத்தில் எப்படியிருந்ததோ, அப்படியேதான் இருக்கிறது. உலகில் பற்பல புதுமைகள் ஏற்பட்டிருந்தும், அந்தப் புதுமை எதுவும் நமது சமூக அடிப்படையை மாற்றவுமில்லை; புதிதாக்கவுமில்லை.

நமது சமுதாயத்தை ஒரு சாக்கடையென்று குறிப்பிட்டேன்—அதுவும் சாதாரணமான சாக்கடையல்ல! மூட நம்பிக்கையென்கிற நாற்றம் நிரம்பியது அது. பழைமையென்கிற புழுக்கள் நெளிகின்றன அங்கே; புராணச் சேறு; மதம் என்ற கழுநீர்; பொய்கள்! கட்டுக்கதைகள்! காட்டுமிராண்டித்தனமான கற்பனைகள்! — இத்தனையும் அங்கே கொட்டமடிக்கின்றன. இவை யாவையும் அகற்றினாலன்றி, நமது சமூகம் எப்படி முன்னேற முடியும்?

நமது சமூக அமைப்பிலே புலியாக ஒருவனும் பசுவாக ஒருவனும், அய்யனாக ஒரு பிம்பமும் பன்றபனாக இன்னொரு உருவமும், ஆண்டானாக ஒரு ஆசாமியும், அடிமையாக ஒரு மனிதனும் இருக்கும் நிலைமைக்குக் காரணம் என்ன? வாழப்பிறந்த மனித சமூகத்திலே இத்தகைய வேற்றுமைகள் முளைத்தது எவ்விதம்?

இதற்குப் பலர் பலவித காரணங்கள் காட்டுவர். ஆனால் நான் கூறும்

காரணம், நமது சமூக அமைப்பில் இவ்வளவு கேடுபாடுகளும், பேதமும் பிளவும் உண்டானதற்கு நமது மதமும், அதன் அடிப்படையிலே முளைத்த ஜாதிப் பாகுபாடுகளும், அவைகளைக் கட்டுப்படுத்த சிருஷ்டிக்கப்பட்ட விதி, மோட்சம், நரகம் என்ற புளுசுருட்டுகளும் தான்.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று வாழ்ந்த திராவிட சமுதாயத்திலே, இந்துமத வாடை புகுந்த பின்னர் ஏற்பட்ட மாறுதல்கள் எவ்வளவு!

சைவ மதம்—விஷ்ணுமதம் என இரண்டு பிரிவுகள். இரண்டுக்கும் தனித்தனியே இரண்டு கடவுள்கள்! ஒரு கடவுள் சிவன்—பிச்சாண்டி என்ற பெயர்! இன்னொரு கடவுள் விஷ்ணு—கபடநாடக சூத்ரதாரி என்ற வர்ணனை! இந்த இரு கடவுள்களின் பெருமைகளைப்பற்றி ஏராளமான புராணங்கள். இவர்களது திருவிளையாடல்களைப்பற்றி அவர்களது சிஷ்ய கோடிகள் உண்டாக்கிய புராண மூட்டைகள்!

ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் மதமேஉயர்ந்ததுஎன்பதைக்காட்ட, தத்தமது கடவுள்களின் பெருமைகளைக் காட்ட, புராணங்களை உற்பத்தி செய்தனர்.

அவைகளை நம்பவேண்டும், நம்பினோருக்கு சுவர்க்கவாசல் திறக்கும்; நம்பாதோருக்கு நரகம்தான் என்று பயமுறுத்தினர்.

பஞ்சமனாக ஒருவனும் பார்ப்பானாக இன்னொருவனும் பிறந்தது அவரவர் தலைவிதி என்றனர். முற்பிறப்பில் செய்த வினையின் பலன் என்று கூறினர். 'விதி, விதி' என்று, அவர்கள் இட்டுக் கட்டிச் செய்த சதி, இன்று நம்மை மக்கதியற்றவர்களாக்கிவிட்டது! அறிவியலிலும், பொருளியலிலும், அரசியலிலும் உயர்ந்த ஜாதிக்காரனே அமர்ந்து நம்மை ஆட்டுவிக்கும்படியான கேட்டை உண்டாக்கிவிட்டது.

மக்களை மூடநம்பிக்கைக்குழியில் தள்ளி உயர்ந்த ஜாதிக்காரர்கள் தங்களை உயர்த்திக் கொள்வதற்குச் செய்துகொண்ட சாதனங்களில் கதாகாலட்சேபமும், நாடகங்களும் இன்றியமையாதவைகளாகும்.

கிருஷ்ணன் பெருமையைப்பற்றி ஒரு நாடகம், முருகன் வள்ளியை மயக்கியதுபற்றி இன்னொரு நாடகம்......இதுபோல கடவுள் பெருமைகளை நாடகங்கள்மூலம் மக்களிடையே பரப்பினர் — பரப்பியதை வளர்த்தனர்.

ஆனால் இன்றோ! நமது சமுதாயத்தில் வளர்ந்துள்ள புதுமை ஆசை பழைய 'கிருஷ்ண லீலா'வையோ 'சிவலீலா'வையோ விரும்புவதில்லை. சீர்திருத்த நாடகங்களையே மக்கள் விரும்புகின்றனர். இது, நமது சமுதாய முன்னேற்றத்தின் வெற்றிக் காட்சி!

பழைமையும் மூடநம்பிக்கையும் நிறைந்து கிடக்கும் நமது சமுதாயத்தைச் சீர்திருத்த நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன. சுயமரியாதைக்காரர்களாகிய நாம், நம்முடைய மகத்தானசேவை மூலம், நமது நாட்டிலே ஒரு புது மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம். இதற்காக நாம் பட்டுவரும் கஷ்டங்கள், தாங்கிவரும் அம்புகள், அடக்குமுறைப்பாணங்கள் கொஞ்சநஞ்சமல்ல! ஆயினும் நாம்தளரோம்! உலகில் பழைமையை எதிர்த்துப் போராடிய எவரும் பட்டுமெத்தையில் வாழ்ந்தவர்களல்ல: பஞ்சாமிர்தம் உண்டு கிடந்தவர்களல்ல. படாடோபத்துடன் வாழ்ந்தவர்களுமல்ல.

மதத்தை மண்ணென மதித்து மக்களைப் பழைமையினின்றும் மீட்கப்போராடிய 'பொஹீமியா' தேசச் சிங்கம் ஜான்ஹஸ் உயிரோடுதான் கொளுத்தப்பட்டான்! இத்தாலி தேசத்தை அறிவின் இருப்பிடமாக மாற்றப் போரிட்ட மன்னாதி மன்னன் ஸ்வோனரலாவுக்குத் தூக்குத் தண்டனைதான் பரிசாகத் தரப்பட்டது! "நியாயமற்ற கொள்கைகளை மறுப்பேன். என் மனதிலே தோன்றுவதை மறைக்கமாட்டேன்" என்று சங்கநாதம் செய்த ப்ரூனோவை உயிரோடு கட்டி வைத்து தீக்கு இரையாக்கினர்! "மனித சமூகமே எனது கடவுள், அதன் தொண்டே எனது மதம்" என்று வீரமுழக்கமிட்ட சாக்ரடீஸ் பெற்றது ஒரு கோப்பை நஞ்சு!

"இருப்பதும் நாட்டிற்கு, நான் இறக்கப்போவதும் நாட்டிற்கு" என்று கூறிய மாஸ்வினியை இருட்டறையிலே தள்ளி, உண்ண உணவோ, குடிக்க நீரோ தராது கொன்றது வைதிகபுரி! 'நீக்ரோவும் மனிதன் தான்" என்று மனித உரிமைக்காகப் போராடினான் மாவீரன் ஆபிரகாம்லிங்கன். ஆனால், அவனுக்கு நாடகக் கொட்டகையிலே துப்பாக்கிக் குண்டுகள்தான் பரிசாகக் கிடைத்தன! "நமதே ராஜ்யம், அடைந்தே தீருவோம்" என்று முரசொலி முழக்கி, ஆங்கிலேயரிடமிருந்து அயர்லாந்தை மீட்கப் போராடிய மைக்கேல்காலின் ஸுக்கு மலர்மாலை அல்ல கிடைத்தது. மரணம்! துப்பாக்கிமூலம் சாவு!!

ஆகவே, பழைமையை எதிர்த்துப்போராடிய மாவீரர்களெல்லாம், வைதிக வெறியால் தூக்குமேடைக்கும் துப்பாக்கிக்கும் தீக்கும்தான் இரையாகினர்.

எனவே, நம்மீது அடக்குமுறைகளும், அம்புவீச்சுகளும் எவ்வளவு தாக்கினும் நாம் அஞ்சியோடஆமைகளுமல்ல, பூனைகளுமல்ல.

நமது சமுதாயம் சீர்பட, நமது இரத்தம்தான் தேவையென்றால், கொட்டத் தயங்கோம்! தலைகள் தான் வேண்டுமென்றால், தந்தே தீருவோம்! நரம்புகள் ஒடிந்தாலும் எலும்புகள் முறிந்தாலும் கவலை இல்லை. நமது பணி மிகப் பெரிது—அதைச் செய்வோம். எது வரினும் இதயங்கலங்கா வீரர்கள் நாம்! நமது வாழ்நாளிலேயே நமது சமுதாயத்தில் புதுவாழ்வைக் காண்போம்!

★

## குற்றவாளிகளே!

"பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை சுரண்டுவதை நாங்கள் தடுக்க விரும்புகிறோம் என்று எங்கள்மீது நீ குற்றம் சாட்டுகிறாயா? அது குற்றமானால், நாங்கள் குற்றவாளிகளே."

—மார்க்ஸ் எங்கல்ஸ்.

# காடு, கழனியாகிறது!

## 'கருதுவதை' முடிப்போம்!!

—[ வண்டு ]—

"கடந்த சில மாதங்களுக்கு முன் டில்லிமா நகரில் கலவரம் ஒன்று நடந்ததே ஞாபகம் இருக்கிறதா?"

"எது, அந்தக் கலியாண விவகாரமா...!"

"விவகாரம் என்று லேசாகச் சொல்கிறாய். அந்த விவாக விஷயம் காட்டும் பாடத்தை உணர்ந்தாயா..."

"ஜாதி வெறி — மத நம்பிக்கை, இரு இளம் இதயங்களைத் துண்டித்து விட்டது. மனம் ஒன்றியும், மதம் குறுக்கிட்டதால், பூத்த மலர்கள் புழுதி மேட்டுக்குள் போயின..."

"வேதனையோடு சொல்கிறாய். ஆனால் அது விளக்கும் பாடம் என்ன?"

"இதில் என்ன பாடம் இருக்கிறது? பரிதாபத்தைத் தவிர!"

"சரி...காதல் மணம், 'கலப்பு மணம், சீர்திருத்தத் திருமணம், விதவா விவாகம், மறுமணம், இவ்விதமெல்லாம் நமது பக்கத்தில் நடக்கிறதல்லவா?"

"ஒன்று, இரண்டா! ஏராளமாக நடக்கிறதே. அடிக்கடி இதுபோன்ற திருமணங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றி வருவது பெரிய வேலையாகி விட்டதே!"

"அதாவது, சர்வசாதாரணமாகி விட்டதென்கிறாய்?"

"அதிலும் சந்தேகமா! ஆதித் திராவிட வாலிபனும் பார்ப்பன குலநங்கையும் காதலித்துக் கலியாணம் செய்துகொண்டது எத்தனையெத்தனை காட்டவேண்டும்?"

"உண்மைதான்...ஆனால் இது போன்ற கலியாணம் நடைபெறுவதில். ஏதாவது கலவரங்கள் நடைபெற்றதுண்டா?"

"கிடையாது!"

"சர்க்கார் தலையிட்டு, துப்பாக்கிப்பிரயோகம் செய்யுமளவுக்கு ஏதாவது......?"

"கிடையவே, கிடையாது!"

"அப்படியானால் மணத்தம்பதிகளின் பெற்றோர், பூரண ஆசையோடு வந்திருந்துதான் கலியாணத்தை நடத்திவைக்கிறார்கள். அப்படித்தானே?"

"இதென்னப்பா! ஒன்றும் தெரியாதவனைப்போல் கேள்விக் கணைகளைப் பூட்டுகிறாய்?"

"காரணமாகத்தான்; எல்லாப் பெற்றோர்களும் இதுபோன்ற திருமணங்களை ஆர்வத்தோடு செய்விக்கிறார்கள்—அப்படித்தானே!"

"சில இடங்களில் முணுமுணுப்பு, இன்னும் சில வீடுகளில் மிரட்டல், இல்லாமலில்லை."

"இவைதானேயொழிய, கலவரம் எங்கும் நடந்ததில்லையே....."

"ஊம்—ஹீ—ம்."

"இங்கேயில்லை—ஆனால் டில்லியில் மட்டும் நடைபெற்றதேன்?"

"வடக்கு அப்படியிருக்கிறது. ஜாதிவெறி சதிராடுகிறது! பழமை கோலோச்சுகிறது. ஆனால் தெற்கில் அப்படியில்லை"

"என்ன காரணம்?"

"தெற்கில், முற்போக்கு எண்ணங்கள் வேகமாக வேரூன்றி வருகின்றன. வாலிபர்களை வசீகரித்து விட்டன. கட்டாந்தரை கழனியாகி வருகிறது"

*

வகுப்புக் கலவரம்.

இந்துமகாசபை

சஹகமன வழக்கு

கலியாணக்கலவரம்

இதுபோல எண்ணற்ற செய்திகளை வடக்கிலிருந்து நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். வேடிக்கையான சம்பவங்களாக அவை நம் மனக்கண் முன்பு தென்படுகின்றன! பருவமங்கையை, பர்த்தாவின் பிணத்தோடு பாடையில் சேர்த்துக் கட்டிச்சென்று சுடுகாட்டில் சுட்டெரித்தனர் எனும் சோகச் செய்திகள் நமக்கு 'கதைகள்' போலக் காட்சி தருகின்றன! ஆனாலும், அங்கே நடக்கிறது. மதவெறி, காரணமாக மயிர்க்கூச்செறியும் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. அந்த அளவுக்குத் தெற்கில் எதுவும் இல்லாதது ஏன்?— சாதாரணமான கேள்விதான். ஆனால், அது தாங்கியிருக்கும் கருத்து ஊன்றிக் கவனிக்கத்தக்கதாகும். கலப்பு மணம் என்ற பெயரால் செல்வாக்கும் செல்வமும் மிகுந்த 'அம்பேத்கார்' திருமணங்களைத்தான் நாம் அங்கே காண முடிகிறது! ஆனால் இங்கே ஏழையுலகில், நடைபெறுகின்றன! கலியாண வீட்டில் கலவரம் அங்கே! இங்கே அது இல்லை!—என்ன காரணம் இதற்கு? எங்கெந்தக் கடவுள்களின் பெயர்கள் இங்கு நடமாடுகின்றனவோ அதேகடவுள்கள்தான் வடக்கிலும் இருக்கின்றன. காசியிலிருந்து ராமேஸ்வரத்துக்கு வராதோர் இல்லை! கிருஷ்ணபரமாத்மாவும், ராம நாமமும், பரமசிவன் துதியும், காளி தோத்திரமும் 'அகண்ட இந்துஸ்தானம்' முழுமையும் தான் உள்ளன. இவைகளைப் பெற்றெடுத்த 'இந்து' மதம் தான் எங்கும் நிலவியிருக்கிறது; இருந்தாலும் வடக்கில் மதவெறி அதிகம் இருப்பானேன்—தெற்கில் குறைவாக இருப்பானேன்? 'ராமலீலா' என்ற பெயரால் நடைபெறும் கோணங்கிக்கூத்துக்களை வடக்கில்தான் கேள்விப்படுகிறோம்! 'ராதா கிருஷ்ணமுராரே!' என்று கூத்தாடும்கும்பல்கள்நமதுவீதிகளில்அங்கிருந்துவந்தே அதிகமாகக் குவிகின்றன! சாதாரண நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மாபெரும் சண்டைகள் ஏற்பட்டு, மண்டைகள் உடைபடவும், துப்பாக்கி அலறவுமானசூழ்நிலையை வடக்கேதான் காணமுடிகிறது. வடக்கிலிருப்போரும் இந்து மதத்தவர்கள்தான்! தெற்கேயிருப்போரும் இந்துமதத்தைச்சார்ந்தவர்கள்தான்! நான்குவேதம் இருவருக்

கும் தெரியும். முப்பத்துமுக்கோடி தேவரை, இருவரும் ஒப்புக்கொள்கிறார்கள். புராணக்கதைகள், எல்லோரும் புகழ்வது என்றாலும் வடக்கிலே தீ! தெற்கிலே தென்றல்!!—என்ன காரணம் இதற்கு?

*

சமுதாயத்துறையிலே, வடக்கில் வாடையும், தெற்கில் தென்றலும் வீசுவதற்குள்ள காரணங்களை நாம் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். "திதியாவது! திவசமாவது!" என்று, சர்வசாதாரணமாக நாம் கேலி செய்து விடுகிறோம். ஆனால், வைகுந்தத்தையும் கைலாசத்தையும் குறித்துக் கேலி செய்து வடக்கில் போய் பேசுவதென்பது அவ்வளவு எளிதல்ல! 'சூரத்'திலிருந்து வந்திருந்த நண்பர் ஒருவரிடம் வேடிக்கையாக இதுபோல் சில விஷயங்களைப் பேசும்படி நேர்ந்தது. என்ன ஆத்திரம் வந்தது தெரியுமா, அவருக்கு? அந்த அளவுக்குவெறி! அது இன்னும்தணியவில்லை! 'இந்து மதப் பெருமையைக் காப்பதில் போட்டி போட்டுக்கொண்டு வேலைசெய்கிறார்கள். டால்மியா மிகப் பெரிய பணக்காரர். தினசரி, பசுக்களைப் போற்றி கூட தீப நைவேத்யம் செய்து காப்பாற்ற வேண்டுமென்பது அவருடையதிட்டமாம்! அது, இந்துமதத்தைப்போற்றும் மகத்தான காரியம் என்று, ஏராளமான பணத்தை ஒதுக்கி வைத்துள்ளாராம். இங்கும்தான், அவரைப்போன்ற பல பணக்காரர்கள் இருக்கிறார்கள், காளியம்மனுக்கும் திருப்பதியானுக்கும் 'சேவை' செய்யத் தவறாதவர்கள். ஆனால், எவரும் டால்மியாவைப் போலச் செய்வதில்லை. அதுமட்டுமல்ல, அவர்களே, 'இதென்னப்பா, பைத்யகாரத்தனம்' என்றே சொல்வார்கள். என்ன பொருள் இதற்கு? வடக்கிலும் தெற்கிலும் வாழ்வோர் இந்து மதத்தவர் தான். இரண்டு இடத்திலுமிருப்போருக்கு பக்தியிருக்கிறது—பகவான் மீது பாசம் இருக்கிறது. ஆனால் ஒருவர் செய்யும் முறையை 'சுத்த கர்நாடகம்' என்று மற்றொருவர் துணிந்து சொல்கிறார்! இறந்த கணவனோடு உடன் கட்டையேறுமாறு ஒரு இளமங்கையை வைதீகர்கள் துன்புறுத்தினர்—தகவல் எட்டியதும் "போலீசார் போயினர்—வழக்கு நடக்கிறது" எனும் செய்தியைத் கேள்வியுறும் போது, இங்கேயிருக்கும் பக்தசிகாமணி கூட, கண்டிக்கிறார் அந்நிகழ்ச்சியை! வடக்கில் நடைபெறுவது, மதம் கூறும் முறைதான். ஆனால் அதை, அதே மதத்தைப் போற்றுபவர், கேவலமாக நினைக்கிறார்! புது உள்ளங்கொண்ட வாலிபர்கள், கண்டிப்பதில் எதுவும் விசேஷமில்லை. ஆனால் புராணீகரே, அந்த நிகழ்ச்சியைக் கண்டிக்கிறார். எப்படியேற்பட்டது இந்த மனமாற்றம்? கோயிலுக்குப் போகாதவரல்ல, காணிக்கை செலுத்தாதவரல்ல, ஆனாலும் வடக்கில் நடைபெறும் காட்சிகள் இங்குள்ள 'பக்தசிரோன்மணி'களையும் பதறச் செய்கிறது! இந்த மனநிலை, ஒரே மதத்தைச் சார்ந்தவரிடத்தில் ஏற்படுதல் என்பது சாமான்யமா? எப்படி, இந்த மனோபாவம், தெற்கில் மட்டும் காணமுடிகிறது? பிள்ளையைக் கறியாகச் சமைத்த கதை, மனைவியைத் தத்தம் செய்த வரலாறு, குடும்பத்தாரைக் கொலைசெய்த பக்தர் புராணம் இங்கே அப்படியே இருக்கிறது! ஆனால் அதுபோல, எந்தப் 'பக்தரும்' இன்று, பகவான் அருளுக்காகச் செய்ததாக நாம் கேள்விப்பட்டதுகூடக் கிடையாது. ஆனால் வடக்கில்! மத சம்பிரதாயங்கள், இன்னும் கோலேந்தி வாழ்கின்றன. காளிகாதேவிக்காகப் பதினெட்டுமாதக் குழந்தையைக்கொலை செய்த 'செய்தி'யைக் காண்கிறோம்! 'நவநீத கிருஷ்ணன்' என, யாரோ ஒரு நாடோடியைக் கும்பிட்டு, ஏமாந்த தகவல்களைப்பெறுகிறோம். சாதாரண காரியங்களுக்காக, இந்துக்கள் பிறர்மீது, மோதிடும் நிகழ்ச்சிகளும் இரத்தம் சிந்தும் சம்பவங்களும் அடிக்கடி நடக்கின்றன. இந்த அளவுக்கு, வடக்கில் மட்டும் வெறி சதிராடுவானேன்! தெற்கில், அந்த அளவுக்கு இல்லாமலிருப்பானேன்?

## 2

"இந்திய உபகண்டத்திலேயே காங்கிரஸ் தோல்விகண்ட இடம் எது?"

"சந்தேகமா! சென்னையில் தான்!!"

"ஏராளமான கம்யூனிஸ்டுகளும் முற்போக்காளர்களும் சட்டசபையில் இருக்கும் இடம் எது?"

"இங்குதான்!"

"அது தரும் தகவல் என்ன?"

"முற்போக்கு எண்ணங்கள் வளரும் வகையில் சென்னை மாநிலம் பண்படுத்தப்பட்டு வருவதைத் தான் சுட்டிக்காட்டுகிறது"

இவ்விதம், ஒரு உரையாடல் நடைபெற்றால், முடிவில், கடைசியாகக் கூறியபதில்தான் கிடைக்கும். இந்திய உபகண்டத்தின், இன்றைய அரசியல் நிலையை கூர்ந்து கவனித்தால், தெற்கின்நிலை தெளிவாக விளங்கும். வங்கம், பஞ்சாப், பம்பாய், ஐக்கிய மாகாணங்கள் எங்கும் இலலாத அளவு, இங்கு, முற்போக்கு எண்ணங்கள் வளர்ந்துள்ளன. பம்பாயைத் 'தலை இடமாக' வைத்துக்கொண்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சியினரும், தமது அலுவலகத்தை தெற்குக்கே கொண்டுவந்திருக்கின்றனர். டில்லி பார்லிமெண்டில், தெற்கின் சங்கநாதமே ஒலிக்கிறது! திருவாங்கூரும், மைசூரும், சென்னையும் புயலைக் கிளப்புகின்றன அங்கே!! வடநாட்டு இந்துமகாசபையும், சோஷியலிஸ்டும், எழுப்புவதைவிட, இங்கிருந்து சென்றோரின் குரலே, அதிகமாகவும், ஆத்திரமாகவும் கேட்கிறது. வங்கம், சிறந்த சிந்தனையாளர்கள்வளர்ந்த பூமி! அங்கேஇல்லாதது இங்கே!! என்ன காரணம் இதற்கு? அரசியல் துறையில், சிறந்த முன்னேற்றப் பூந்தோட்டமாக, தென்னாடு விளங்குவதன் காரணம்என்ன? காங்கிரஸ் வடக்கே கொடி கட்டிப் பறக்கிறது! தெற்கே, இடிந்து போய்க்கொண்டிருக்கிறது!! முதலாளித்துவம் மோகனப் புன்னகையோடு வடக்கிலிருந்து சிரிக்கிறது! தெற்கே, ஏழையர் உலகு, எரிச்சலோடு பார்க்கிறது!!

## 3

என்ன காரணம் இதற்கு? இந்த மாறுதலை, மக்களின் உளநூல் உணர்ந்தோர், கூர்ந்து சிந்தித்தால் தெற்கில் வளர்ந்திருக்கும் மனப்புரட்சியின் அளவை உணரமுடியும். வடக்குக்கும் தெற்குக்குமிடையே, ஏற்பட்டிருக்கும் மனமாற்றம், சாதாரணமானதல்ல. அலட்சியமாக

(8-ம் பக்கம் பார்க்க)

[சரிதச் சித்ரம்]

# "ஐயங்குளம்"

[அரங்கண்ணல்]

தஞ்சையில் ஒருநாள், தோழர்களுடன் உலவச் சென்றேன்.

'ஐயங்கடைத்தெரு'—பற்றிய விவாதம் ஒன்று வந்தது.

அதுபோன்ற பெயர்களை, திருச்சி, திருவண்ணாமலையிலும் கேட்டேன்.

"யார், இந்த ஐயன்?"—இது நெடுநாளைய ஆராய்ச்சி.

அதுவே, இது.

எம். எஸ். சுப்பிரமண்ய அய்யர் தீட்டியிருக்கும், 'சிறு குறிப்பு' ஒன்றே, இந்த ஆராய்ச்சிக்குத் திறவுகோல்.

சோழ மண்டலம், 'ஐயங்குளம்' ஆகி, 'அவாள்' நீந்தி வாழும் இடமானதை இந்தச் சித்ரம், விளக்கும்.

"ஸ்ரீரங்கநாதரைத் தூக்கிக்கொண்டு பிள்ளை யோகாசார்யர் ஓட்டம் எடுத்தார்.

வேதாந்த தேசிகர் விரைந்தேகினார், மைசூர்.

சுதர்சனப்பட்டர், ரங்கநாதன் சந்நிதியில் வெட்டுண்டு வீழ்ந்தார்."

*

"காஞ்சி கோயில்கள் இடிபட்டன. ஸ்ரீரங்கத்தில் கர்ப்பக்கிருகம் தான் மிச்சம்.

திருவானைக்காவல் திண்டாடிற்று. திருச்சி கோயில்கள் மூடப்பட்டன, மதுரை மீனாட்சிக்கு பூஜை கிடையாது. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் தவித்தது"

*

"சிற்றரசுகள் சிதறின.

விந்திய மலையைத்தாண்டி வெளிநாட்டார் புகுந்தனர்.

தேவகிரி யாதவராஜ்யம்போயிற்று. ஓரங்கல் அதிபதி பிரதாபருத்திரன் தோற்றான்.

கர்நாடக (தேவ சமுத்திரம்) வல்லாள வேந்தன் சிறைப்பட்டான்."

*

"தலைநகரங்கள் தரைமட்டமாயின.

மாடமாளிகைகள் மண்ணாயின.

தேவாலயங்களிலே இரத்தாபிஷேகம்!

அக்கிரகாரங்கள் தூள்தூளாயின.

அச்சம்! பயம்! ஆர்யாள், இடம் தேடி ஓடினர்."

*

"தமிழகம் சிதைந்தது.

தமிழகத்திலே பேரரசு காண முயன்ற வல்லாள ராஜாக்கள் வீழ்ந்தனர்.

அவர்களுக்கு உட்பட்ட சோழரும் பாண்டியரும் சிதறினர்.

வல்லாளன் திருத்தலம் திருவண்ணாமலை போயிற்று."

*

"5000, யானைகள்,
20,000 குதிரைகள்,
96,000 மணங்கு தங்கம்,
கோடிக்கணக்கான அணிமணிகள், கொண்டுசெல்லப்பட்டன!"

*

"கி. பி. 1302-க்குப் பின்னர்! அந்தகாரம் தோன்றி நாலுபக்கமும் சூழ்ந்து கொண்டது. தர்மம் நசித்தது. அதர்மம் தலைதூக்கிற்று. அனர்யா பெருகிட்டா! தேவாலயங்களிலுள்ள தெய்வ விக்கிரகங்கள் தெருவீதிக்கு வந்தன. வேதப்பிராமணாளும், கோயில் பட்டாச்சாரிகளும் அக்கிரகாரங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். அக்கிரமம்! அநீதி! அடாதசெயல்! ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனாலும் முடியாதடா இந்த அக்கிரமங்களை விவரித்துக்கூற!!" என்று, ஆயாசத்தோடு, பெருமூச்சு விட்டார், வேதியர்.

"கட்டேலேபோறவன்!"—என்று தனது எரிச்சலைத் தெரிவித்தாள், வேதம்—அவர் மகள்.

"மாலிகாபூரை எதிர்த்து இங்கிருந்த மன்னாதி மன்னர்கள் எதுவும் செய்யவில்லையோ, மாமா!" — என்றான், கோவிந்த தீட்சிதர்.

"இவாதான் குடுமிபிடிச்சண்டு இருந்தாளேடா! 'எவன் பெரியவன்?' என்கிற களேபரமே பெரிசாப்போச்சு. பாண்டிய நாட்டிலே, பதவிப் போராட்டம். சோழமண்டலம் தவித்திருந்தகோம். வல்லாளன் எனும் பக்தன் ஒருவன்தான் கொஞ்சம், மிடுக்கோடு இருந்தான். ஒற்றுமையில்லாமல் எதுவும் முடியுமோ, கோந்து!"

கோவிந்து, மௌனமானான். வேதம், கேட்டாள். "ஏன், அப்பா! சைவ—வைஷ்ணவ சச்சரவும், அப்ப, இருந்தது, அல்லவா?"

"இருந்தது! இருந்தது!!" என்று மனமுடைந்தவண்ணம், செப்பினார் வயோதிக வேதியர்.

"ஏன், மாமா! டில்லியிலே இருந்தவா, ராஜ்யம் பிடிப்பதற்காகத் தெற்கே வந்தா. அது சரி. ராஜ்யம் பிடிக்கவந்தவன் கோயிலையும், அக்கிரகாரத்தையும் கொள்ளையிடுவானேன்?"

"கோந்து! ராஜாதி ராஜாக்கள், பிரபுக்கள் வழங்கிய செல்வம் கொட்டிக் கிடந்தது கோயில்களில் தானேடா. அரண்மனைகளைவிட ஆலயங்களில்தானடா செல்வம் இருந்தது. அதனாலே கொள்ளையடிச்சான். இவைகளைக் காத்து இருப்பது நம்மளவா. அதனால், நம்மை அதட்டினா, இருக்குமிடத்தைக் காண்பிப்போம்னு நினைச்சான். செஞ்சான். அதனாலே தாண்டா இந்த அவதி."

"வேதியாளை விரட்டி விரட்டியடிச்சான்னேளே! அவா, எங்கே போனா?"

"கிடைத்த இடம் நோக்கிச் சிதறி ஓடினா! நாம்ப இருக்கிறது, வேலூர். ஆனா நம்ப பாட்டனார், முப்பாட்டனாரெல்லாம் இருந்தது காவிரிக் கரையிலேடா. அந்த செழிப்பானபூமியைப்பத்தித் தினம் தினம் சொல்வாரடா, என் தாத்தா.

அந்த நெல்லும், காவிரி ஜலமும், அடடா........" என்று சொல்லி விட்டு வருந்தினர், வேதியர்.

"தெய்வம்! தேசம்!! தர்மம்!! எல்லாம் நாசமாயிற்று, கோந்து. அந்தக் கதைகளைத் தாத்தா சொல்லுவார், நான் சிறுவனாயிருக்கச்சே! அப்படி வாழ்ந்தாளாம், நம்மளவா. ராஜதிராஜனெல்லாம் தண்டனிடுவானும். சுகமா, வாழ்ந்தா. அதைத் தொலைச்சாடா, துருக்கா! இதைச் சொல்றப்போ, அவர் கண்ணில் ஜலம்புரளும். நம்மளவா பட்டபாடு நரகவேதனை, கோந்து! இந்துக்கள் கலங்கினர். தவித்தா. நல்லவேளையா, வித்யாரண்யர் தோன்றினர். ஹரிகர புக்கன் எனும் பசங்களைக்கொண்டு விஜயநகர சாம்ராஜ்யம் அமைச்சார். கொஞ்சமாவது மிஞ்சினோம்! 1370-லே, விஜயநகர சாம்ராஜ்யாதிபதி கம்பன்னஉடையான், வந்தான். மதுரையை மீட்டான்!"

*

இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முன்னால்! பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பநேரத்தில்! ஒரு நாள்! வேலூர்(வ. ஆ.) நகரத்து அக்கிரகாரம் ஒன்றிலே அந்தி நேரத்து சந்தியாவந்தனத்துக்குப்பின், அழகானதொரு சிறு வீட்டின் திண்ணையில், வேதியரும், மகள் வேதமும், கோவிந்தனும் உரையாடிக் கொண்டிருந்தனர். கோவிந்தன் வாலிப வயதுள்ளவன். தீட்சிதர் குலம். நேம நிஷ்டை தவறாமல், கிரியாதிகளைக் கவனித்துக் கொண்டும், நிரீசுரவாதிகள் பக்கம் திரும்பாமலும், தானுண்டு தன் வேலையுண்டு என்றும இருந்து வந்தான். நேரம் கிடைத்தபோது, வேத விளக்கத்துக்காகவும், பாஷ்யங்களுக்கு வியாக்யானம் தெரிந்து கொள்ளவும். வேதத்தைக் கண்டு வரவும, வேதியர் வீட்டுக்கு வருவான். வேதியர் தஞ்சையிலிருந்து விரண்டோடி வந்ததைத் தாத்தா சொல்லக் கேட்டவர்! சோழ மண்டலத்தின் வயல்களையும், தென்னந் தோப்புகளையும், தோட்டங்களையும் குறித்துக் கேட்ட நாள் முதல், அந்த இடம் போய் ராஜபோகத்தோடு வாழவேண்டுமெனும் ஆசையால் தவித்தவர். "நம்மளவனுக்கு ஏற்ற இடம். கோயில்களும், தர்ம காரியங்களும் நிறைய உண்டு" என்று சொல்வார், அடிக்கடி. அங்குபோய் தாமும் தம்மவரும் வாழவேண்டுமெனும் தணியா ஆவல் கொண்டிருந்தார்! அந்த ஆவலைக் கோவிந்த தீட்சிதருக்குப் புகட்டிக் கொண்டிருந்தார். கோவிந்த தீட்சிதரின் சாதுர்யத்தின் மீது நம்பிக்கை உண்டு. அவனால் தம்மவருக்கு நல்வாழ்வு மலரலாம் எனும் பேராவல். அவனும் முன்னுக்கு வரவேண்டும் என்றோர் தனி ஆர்வம். அது, வேதத்தால், வந்தது!

"முகத்திலே பிரம்ம தேஜஸ் ஜொலிக்கிறது! கண்களிலே கருணை சொட்டறது! சந்தியா வந்தனம்—வேளைக்கு ஆயிரத்தெட்டு காயத்ரி ஜபம். பகலிலே கிரமப்படி பூஜை. மாலையிலே தேவாலய தரிசனம். உன் குணம் தங்கம்டா! உனக்கு ராஜயோகம் அடிக்கும்டா! நீ, ரொம்ப முன்னுக்குவர வேண்டியவன்!!" என்று, ஆர்வப்பால் ஊட்டாத நாளிருந்தது கிடையாது.

"வேலூரிலே உட்கார்ந்துண்டு வீணா காலத்தைக் கழிக்காதடா! விஜயநகரம் போ. நம்மளவாளுக்குச் செல்வாக்கு அதிகம் ராஜசபையிலே. எப்படியாவது ராஜனுடைய தயைக்குப் பாத்திரனாகி, செல்வாக்குப் பெறு. செல்வாக்கு வந்ததும் மறந்துடாதே! தெலுங்கா தேசமே பெரிசுன்னு நினைச்சு இருந்துடாதே. தஞ்சையை நினைச்சுக்கோ! எப்படியாவது கீர்த்தியோடு வா மூர்த்தி பெறு" என்று, தூண்டியவாறே, இருந்தார். அதற்குத் தூபமிடுவது போலவே, 'அந்நியாள் படையெடுப்பால் தம்மவருக்கு, நேர்ந்த சம்பவங்களைச் சொல்வார். அவனும் சிந்தையில தேள் கொட்டியவன் போலானான்!

* * *

13ம் நூற்றாண்டின் இறுதி! மாலிகாபூர் எனும் முகம்மதிய வீரன், தென்னாட்டின் மீது பாய்ந்தான். விந்தியத்தைத் தாண்டினான், முதன் முதலாக! மதச் சண்டைகளாலும், மார்க்க போதகர்களின் வசம் தண்டனிட்ட மன்னர்களால், சின்னாபின்னமாகியும் கிடந்த, தென்னாட்டுச் சிற்றரசுகள் வீழ்ந்தன. சோழனும், பாண்டியனும், வேதமோதிகளின் விளையாட்டுக் கருவியாகியதால், எழும்பிய தேவாலயங்களில் திரண்டிருந்த செல்வம், மாலிகாபூரின் கருத்தை இழுத்தது. அலாவுதீன் கில்ஜியால் அனுப்பப்பட்ட அவனது வீரர்களின் காலடி, பலப்பல கோயில்களையும், சிலைகளையும், தரைக்கு 'தானம்' செய்தது. இந்த நிகழ்ச்சி, வேதியர் கூட்டத்தின் வாழ்க்கையில் புயல் புகச் செய்தது! வேதமோதிகள், அப்போது சாதாரணமாகவா, வாழ்ந்தனர்? தெய்வம்! தேசம்!! தர்மம்!!!—என்று உச்சரித்த வண்ணம், ஊராள்வோரையும், மன்னாதி மன்னர்களையும் ஆட்டிப் படைத்தனர்! தோள் வலியும், மனஉறுதியும் கொண்ட வீரர் பரம்பரை சோரம் போன நேரம்! விற்கொடி தாழ்ந்த காலம்! மீனக் கொடியின் சிறப்பில் 'வேதியர்' சின்னம் வீழ்ந்த நேரம்! ஒற்றுமையில்லை எங்கும்! மதச் சண்டைகள்! சைவமும் வைணவமும் மோதிக்கொண்டிருந்தன. இதனால், மன்னர்களுக்குள்ளேயே போட்டி—போர். இந்த நேரத்தில், மதுரையம்பதி வாழ்ந்த பாண்டிய மன்னவனின் கெடுமதியால், பாய்ந்து வந்தான் மாலிகாபூர். மாளிகைகள் தூள் தூளாயின! கோட்டை கொத்தளங்கள் இடிந்தன! நகரங்கள் நாசமாயின! எங்கும் கலக்கம், பீதி. வேதியர்கள் இதயங்களிலே விசாரம்! விபரீதம் வந்துவிட்டது, எனும் குரல் ஒலிக்காத இடமில்லை 'தக்காணம் தரைமட்டமாயிற்று'! என்று கர்ஜித்தான், மாலிகாபூர். 'பேத வெறியால் என் மண்ணில் இரத்தம் ஓடுகிறது' என்று, மத போதகர்களைப் பார்த்துச் சோகித்தாள், தமிழ்த் தாய். மார் தட்டினான் மாலிகாபூர். தீரத்தைப் வையையும் சாகசத்தையும காட்டினர் இந்துமதக் காவலர்கள்! — இரண்டுக்குமிடையிலே, தென்னாடு தவித்தது. ஓடினோர் — இடம் பெயர்ந்து சென்றோர்—வீடிழந்து வாடினோர்—இவ்விதமாக ஆயினர் பிராம்ம குலத்தவர் எதிர்பாராத நாசம்! ஈசனும் சிவகாமி நேசனும் வைகுந்த வாசனும், முப்பத்து முக்கோடி தேவர்களும், அவர்கள் கையில் சக்ராயுதமும் தனுசும், இருந்தன — வேதங்களிலும் புராணங்களிலும். ஆனால்: வீரர்கள் இருந்தனர் மாலிக்காபூரிடம்! இந்து மதக் காவலரிடம்

நான்கு வர்ணங்களும் நானுவிதச் சாதிகளும் நிரம்ப இருந்தன. மாலிக்காபூர் வீரரிடம் ஒற்றுமை இருந்தது. 'பாழ்! பாழ்!! பாழ்!!! பாழாயிற்று நமது மனக்கோட்டை என்று பதறினர், பிராமண குலத்தவர். "சிதைத்தேன், அந்தச் சிதறிய மனிதர்களை" என்றான், பேதம் பிளவறியா சமரச மதம் கொண்ட, மாவீரன். இந்தப்புயல் வீசியநேரம்! 1307—1311 நான்கு ஆண்டுகள் சோகமான கட்டம் வேதம் பிராமணுளுக்கு. டில்லி, தக்காணத்தை வளைத்தது. தளபதிகளை, கவர்னர்களாக அனுப்பிற்று! அது முதல், விஜயநகர சாம்ராஜ்யம் உதயமாகும் வரை, அடிக்கடி தக்காணத்தில் போராட்டங்கள் இருந்துகொண்டேயிருந்தன. டில்லியின் தூதுவர்களாக வந்தோர், பாமணி ராஜ்யம் ஒன்றை, நிறுவினர். (1351).

தமது சாகசமும் சூழ்ச்சியும், வீராவேசமும் ஒற்றுமையும்கொண்டோர் முன்னர் தரைமட்டமாகியதைஎண்ணிஎண்ணி ஏங்கியபுரோகித குலத்துக்கு, அபயம் அளிப்பதுபோல, ஹரிகரபுக்கன் எனும் இருசகோதரர்கள் கிடைத்தனர். துங்கபத்திரா நதிதீரத்தில் கி. பி. 1336ல் விஜயநகரத்தை ஸ்தாபித்தனர். இதற்குக் காரணகர்த்தா மாதவர் எனும் பிராமணர்! வித்யாரண்யர் எனவும் அழைப்பர்!! சந்திரகுப்தனுக்குக் கிடைத்த, சாணக்கியர் போல, இவர்களுக்கு மாதவர் கிடைத்தார். "இந்த சாம்ராஜ்யத்தை நிறுவுவது" — என்பதே, இவர்களது இலட்சியமாகும். இந்த சாம்ராஜ்யத்துக்கும் தமிழக வாழ்வுக்குமிடையே நிரம்பத் தொடர்பு உண்டு. மாலிகாபூரின் வருகைக்குப் பின் நலங்கிச் சீரழிந்த வேதமோதிகளைச் செழிப்புறச் செய்தது, விஜயநகரம். அக்கிரகாரங்கள் ஆதரிக்கப்பட்டன! வேதபாராயணங்கள் துவங்கின! காஞ்சி! திருவரங்கம்! மதுரை!—எங்கும், அவர்கள் வெள்ளம். புனர்ஜென்மம் எடுத்தது, இந்த மதம்! ஹரிகரன்—இரண்டாவது ஹரிஹரன் — தேவராயன் — இரண்டாவது தேவராயன்-கிருஷ்ண தேவராயன்—முதலியோருக்குப்பின் அச்சுத தேவராயன் ஆண்டுகொண்டிருக்கிறான்.

1336—1530!

விஜயநகரம் நகரம் உருவாகி, 194 ஆண்டுகள் ஓடிவிட்டன.

இந்து மதமும் வேதமோதிகளும் செல்வாக்கோடு உலவுகின்றனர்!

குமரிமுனைவரை, விஜயநகரத்தார் கொடி பறக்கிறது!

தமிழ் மண்ணில் வாழ்ந்த சின்னஞ்சிறு அரசுகள் யாவும், 'துங்கபத்திரா நதிக்கரைக்கு' அடிபணியலாயின.

"இந்துமதம் செழிக்கவேண்டும்!"

"எம்மை எதிர்க்காதீர்!"

இத்தகைய கோஷங்களால்,எளிதில், தமிழ் நிலத்தை வளைத்தனர், விஜயநகரத்தார். இதற்கு வேதமோதிகளும் துணைபாயினர். பதவிபெற்றனர்! செஞ்சி — தஞ்சை–மதுரை விஜயநகரத்தின் ராஜப் பிரதிநிதிகளின் கோட்டைகளாயிற்று. அவர்களை அண்டி, போக போக்கியங்களோடு, வேதியர் வாழலாயினர். புதுப் புதுக் கும்பலும், தெலுங்கு மொழியோடு, புகுந்தனர்! தழைத்தனர்!!

இந்த நேரத்தில்தான், கோவிந்த தீட்சிதரை விஜய நகரத்துக்கு விரட்டினர், வேலூர் வேதியர் — 'கீர்த்தியோடு வா!' என்று.

* * *

"சகல சாஸ்திரம் கற்றவர்"

"சகல கலாவல்லபர்"

"ஆசாரசீலன்! மகாமேதை!!"

"இளம் வயதுதான். ஆனுலும் எவ்வளவு புத்தி கூர்மை, தெரியுமோ?"

"மலர்ந்த முகத்துடன் வரவேற்கிறார்! களித்த மனத்துடன் பேசுகிறார்!"

"கர்மயோகி! கருதிப்போவதைச் சாதித்துத் தருகிறார்!!"

விஜயநகரம் சென்ற, சின்னுட்களுக்கெல்லாம், கோவிந்ததீட்சிதர் பெற்ற விருதுகள் இவை. பாமரர் பாராட்டினர்! தெய்வகுலமல்லவா? தினந்தினம் கூடும் கூட்டம் அதிகமாக வளர்ந்தது. முகம் தெரியாதவர்! ஆகவே, மோகனப் புன்னகையும், தந்திரோபாயமுமே, தீட்சிதரின் ஆயுதங்களாயின. எவராயினும் இன்முகம் காட்டிப் பேசினர்! எப்போதும் உரையாடிக்கொண்டிருப்பார்!!—ஆனுல் இது எதுவும், அவரது சகதர்மிணிக்குப் பிடிக்கவில்லை.

"ராஜனைப் போய்ப்பார்த்து,ஏதாவது உத்யோகம் பெற்று வராமல், இப்படியெல்லாம் செய்கிறீர்களே!" என்பாள்.

"போடி, அசடு, ராஜனை, நான் தேடிப்போனு, எனக்கு எப்படியடி கௌரவம் வரும். ராஜனே, என் வீடு தேடியல்லவோவரவேண்டும்!" என்பார்.

விஜயநகரத்து மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சிறுவன் ஒருவன். பெயர்செவ்வப்பன். அவனைதற்செயலாகச் சந்தித்தார், தீட்சிதர். மூளை, வேலை செய்தது! அவனைஅழைத்து தனது வீட்டிலே வைத்துக்கொண்டார். இட்ட வேலைகளைச் செய்வதும், எடுபிடியாக இருப்பதுமே அவனது வேலை. தீட்சிதர் புகட்டிய ஆசையால் அவன்பம்பரம் போல் சுற்றினுன்!

"பையா — என்னை நம்பு. இறுமாப்புக்கொள்ளாமல், எதையிட்டாலும் செய். வேதியன் நான். உன்னை மன்னனுக்குகிறேன்." என்று, சொன்னுர்.

'மன்னனை' யாராவது அதிகாரிகள் வந்தால் 'மாட்டுக்காரப்பையா!' என்றே, அழைப்பர். அவனும் அடிபணிந்து நிற்பான்!

இந்நிலையில், அச்சுததேவராயனுக்கு, கோவிந்ததீட்சிதரின் பெயர் —அவனது அதிகாரிகள்மூலம் எட்டவே, அவரைச் சபைக்கு அழைத்தான்! ஆஸ்தான பண்டிதராக அமர்த்திக் கொண்டான்!! அது முதல், அவரதுமூளை, வெகுவேகமாக வேலை செய்தது. அச்சுத தேவராயனின் மனைவி திருமலையம்மாவுக்கு மூர்த்தியம்மா என்றொரு தங்கை! சிறுமி!! அவளைப் பார்க்கும் போதெல்லாம் அய்யருக்கு, பல ஆலோசனைகள் வரும்.

அதனுல், அரண்மனைக்குச் செல்லும்போதெல்லாம், செவ்வப்பனை அழைத்துக்கொண்டுபோகத்தவறுவதில்லை.

"செவ்வப்பா! சிறு குழந்தை மூர்த்தியிடம் அன்பாயிரு. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்! தெரியுமா?" என்று போதித்தார். அவனும் அரண்மனைக்

# ★ பிறந்தது ★

[அல்லி]

"இந்திரனோ, சந்திரனோ—
அவன்
என்மனம் கொள்ளை கொள்ள
வந்தவனோ!
கந்தனோ? கண்ணனோ? மன்
மதனோ—இந்தக்
கட்டழகன் சோமசுந்தரனோ?"

*

அஞ்சுகம் 'ஆராரோ' பாட்டு களைத் தயார் செய்துகொண்டிருந்தாள்! ஆலாலசுந்தரப் பாவலர் கலகலவெனச் சிரித்தார். கைத்தடியையும் மேல்துண்டையும் போட்டு விட்டு, ஊஞ்சலில் அமர்ந்தார். கணவனின் காலடி கேட்ட கர்ப்பிணி தனது 'ஒத்திகை'யை நிறுத்தினாள்.

"அஞ்சுகம்! என் பஞ்சணைக் கிளியே — பிஞ்சுகடீ, உன் குரல் குயிலினையும்......" என்று ஆரம்பித்துக்கொண்டே—அவளை நோக்கிச் சென்றார்.

"அதையெல்லாம் பிரசங்கம் செய்யற இடத்திலே, கொட்டுங்கோ!" என்று, சொல்லிக் கொண்டே எழுந்தாள் அவள். "சேச்சே! வீணா, உடம்பை அலட்டிக்காதே" என்று கூறிவிட்டு, அவளை உட்காரவைத்து, தானும் கீழே அமர்ந்தார். அவளைக் காணும் போது, இப்போதெல்லாம் அவருக்கு ஒரு தனியான பூரிப்பு! ஆனந்தம்!! அதனால்.........

"என்னங்க இது? பையன் வந்துடா, இதெல்லாம் முடியாது... தெரியுமா!" என்று, சொல்லிய வண்ணம, அவரது சேட்டைகளுக்கு, முற்றுப்புள்ளி வைத்தாள். அஞ்சுகத்தின் பொய்க் கோபம் அவரை பரவசத்திலாழ்த்திற்று! அவளை, கண்ணாரக் கண்டு களித்தார். 'தானும் ஒரு தந்தையாகப் போகிறோம்' எனும் எண்ணம் தரும் இன்பத்துக்கு ஈடு ஏது? அதிலும் பட்டமரத்தில் பச்சைத் தளிர் என்றால்! பாவலரைப் பட்டமரம், என்றே ஊரார் சொல்லினர். இந்தப் 'பழியைப்' போக்கிக் கொள்ள அவரும் அவளும் சுற்றிய கோயில்கள், செய்த அர்ச்சனைகள், தந்த அபிஷேகங்கள் கொஞ்சநஞ்சமா! அதிலும் வயது 35-க்குமேல் —கர்ப்பம். இன்னும் இரண்டே மாதம். பிறகு... அவருக்கு இப்படி நினைக்கும்போதே ஆனந்தம் தாங்கவில்லை.

"அஞ்சு! அதுக்குள் பையன் என்று எப்படீடி கண்டுபிடிச்சே ......"

"ஆலமரத்தடி ஜோசியர் சொன்னாருன்னீங்களே......"

"சொன்னாரு. ஒரு வேளை, ஆணு இல்லாமெ, பெண்ணு பிறந்துட்டா ......"

"என்னவாம்! பூவுக்குப் பதில் பொன்—"

"அப்ப 'ரெடிமேடா', அதுக்கும் ஒரு ஆராரோ தயார்பண்ணிக்கோ!"

கணவனின் பேச்சு கேட்டுச்சிரித்தாள், அஞ்சுகம். நிறைகுடம் ததும்புவது போலிருந்த அந்தக் காட்சியை அள்ளிப் பருகினார்—ஆலாலசுந்தரர்.

*

ஆலாலசுந்தரரை அறியாதார் இருக்கமுடியாது. 'முட்டையும் குட்டையும்', 'அப்பமும் அவலும்' 'முருகும் திருகும்'—இதுபோன்ற தலைப்புகளில், தமிழையும் அதோடு பக்தி சக்தியையும் கலந்து 'பக்தாளுக்கு'ப் போதிக்கும் பிரசங்க பூஷணம் அவர். கடந்த இருபது ஆண்டுகளில் அவர் செய்திருக்கும் பிரசங்கத் தலைப்புகளைக் குறித்தால் மிகமிக வேடிக்கையாகயிருக்கும். தனது பிரசங்கத்துக்கு அவர் கையாளும் முக்கிய முறை இது! தலைப்புக்கும் பேச்சுக்கும் சம்பந்திருக்குமோ, என்னவோ, பேச்சுக்கும் காசுக்குமிடையே நெருங்கிய சம்பந்தம் உண்டு. அனுதினமும் ஐயன் திருப்பெயர் பாடியதால், மோட்சலோகக் கதவு திறந்ததா, இல்லையா, என்பது தெரியாது. ஆனால், புதிய மாடி வீட்டுக்கதவு ஒன்றைத் திறக்கும் 'பாக்கியத்தை'ப் பெற்றார். அதற்குப் பக்கத்தில் பிள்ளையார் கோயில் ஒன்றும், எதிரில் அனுமார் கோயில் ஒன்றும் அமைத்தார். முருகனையும் பரமனையும், பிரசங்கப் பொருளாகவைத்துக்கொண்டிருக்கும் அவருக்கு ஆஞ்சநேயர்மீது அபார பக்தி விழுந்ததன் ரகசியம் பலருக்குத் தெரியாது. அஞ்சுகத்துக்கும் அவருக்கும்தான் தெரியும். அவளுக்கு குழந்தை பிறக்கப்போவது 'ஆஞ்சநேயரால்'தானே! 'ஆஞ்சநேயர்' அனுக்கிரகம் அவளுக்குக்கிடைக்குமாறு செய்தவன், கர்ப்பம் தரித்ததும் ஒரு கோயில் கட்டவேண்டுமென்று சொன்னானாம். அவன் செய்த 'அனுக்கிரகம்' என்னவென்று அஞ்சுகத்துக்குத்தான் தெரியும்! 'என்ன அனுக்கிரகம்' என்பதை, ஆலாலசுந்தரர், அறிந்தாரா, இல்லையா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அஞ்சுகம் மட்டும் நிச்சயம் சொல்லியிருக்கமாட்டாள்! அவருக்குத் தேவையானது ஒரு குழந்தை! ஒன்று இருந்துவிட்டால் ஊர்ப்பசங்க வாயை மட்டந்தட்டலாமல்லவா? ஊர்க்காளைகள் அவரைப் பார்த்து வீசியவார்த்தைகள்தான் அப்பப்பா!

"போகிறார் டோய்! புண்யப் பிரசங்கி. பிள்ளை இல்லாதவன்"

"படிக்கிறான் பரமன் கதை. வீட்டிலே ஒரு குழந்தை இல்லே! கடவுள் ஏண்டா இக்கப் காட்டலே?"

> ஒன்றுசேர் உயர்வு செய்,
> உன் இனத்தை!
>
> ஒன்று நொடு விரோதிகளின்
> உரத்தின்மேலே!
>
> நன்று செய்! அஞ்சாதே!
> வெற்றி நோக்கி,
>
> நடத்து! முன்வைத்த கால்
> பின்வைக்காதே!!
>
> —புரட்சிக் கவிஞர்.

"ஏன் சுவாமி! பிள்ளையில்லாதவங்களுக்கு 'புத்' என்னும் நரகம் இருக்குதாமே......"

இந்தக் கேள்விகள் மனதைத் துளைப்பதோடு மட்டும் நின்றுவிட்டால் போதுமே! மகாத்மியத்தையும், 'பணப்பை'யையும் அல்லவா பாதிக்கத் துவங்கிவிட்டன.

"அப்பா! இனி எவனும் இதைப் பற்றிப் பேசமுடியாது" — என்று எண்ணியவாறு, பெருமூச்சு விட்டார் பிரசங்க பூஷணம். ஒருமுறை தனது இஷ்டதெய்வங்களை யெல்லாம் நாவாரத் துதித்தார்.

'கஜமுகதேவா!'

'ஆஞ்சநேயப்பெருமானே......'

*

"அடிவருடி"—என்ற விசித்திரத் தலைப்பில், அன்று கலியாண மண்டபத்தில், கனஜோராகப் பிரசங்கம் நிகழ்த்த ஆரம்பித்தார். அஞ்சுகத்தையும் அழைத்துப் போயிருந்ததால், பிரசங்கத்தின் ஆவக்கம் பிரமாதமாகவே இருந்தது. 'விநாயகர் ஸ்தோத்திரம்' மட்டுமே முடிய, அரைமணி நேரம் ஆயிற்று. "ஏரிமுகன்.......கயமுகன்.......கருமுகன்......சுணமுகன்......என்று விநயகருக்கு அவர் வீசிய வார்த்தைகளும், 'ஐந்து அட்சரங்களையும்' ஒவ்வொன்றையும் வர்ணித்து அவர் தந்த விளக்கமும், பக்தர்களைப் பரவசத்திலாழ்த்திற்று! யானைமுகத்தை அவர் வர்ணித்ததும், அந்த முகத்தின் அழகை அவர் விளக்கிய தோரணையும்...... அஞ்சுகமே மெய் மறந்திருந்தாள். பிரசங்கம் முழுமையும் அனுமார் எப்படி ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கு 'அடிவருடியாக' ஆனார் என்பது தான்.. அதை விளக்கும் அருமையான படம் ஒன்றும் அங்கு மாட்டப்பட்டிருந்தது. சகோதரர் மூவரும் சூழ்ந்திருக்க, சானகி பக்கத்திலே இருக்க, ராமனின் காலைத் தாங்கிக்கொண்டு அனுமனிருக்க, அழகான 'ஆர்ட்' காகிதத்தில் 'ஜெர்மனி'யில் 'பிரிண்ட்' செய்த அந்தப்படம் வெகு ஜோராகயிருந்தது! அதற்குத் தூபதீப நைவேத்யங்கள் யாவும் சம்பிரதாயத்தோடு நடைபெறத் தவறவில்லை. அந்தப் படத்தை அஞ்சுகமும், வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு அந்தப்படத்திலிருந்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைப்போலத் தனக்குப் பிறக்கும் குழந்தை இருக்க வேண்டுமென்ற ஆசை! வீட்டிற்குவந்ததும் அதைப் பற்றியே அவரிடம் சொன்னாள்.

"ஏங்க! ராமபிரான் முகதேஜசே தேஜஸ். நம்ம குழந்தை அப்படி இருக்கணுமுங்க......"

"பெண்ணாயிருந்துட்டா:......?"

"சீதையாட்டமா இருக்கணும்"

"சீதை—ன்னே, பேர் வைச்சிடுவாயோ?"

"சே! சுந்த காண்டமாக இருக்கும். சினிமா பேரத்தான் வைப்பேன்"

"சீதையாட்டம் பிறக்கணும்ன்யே—சீதை கதை தெரியுமிலலே, கானகவாசம்,கைபிடித்தவனைவிட்டு இராவணன் வீட்டுவாசம், பிறகு அக்னிப் பிரவேசம்......"

இதுபோல, நீண்டநேரம் உரையாடிக்கிடந்தனர். சதிபதிகள் பேச்சுக்கு முடிவேது? அதிலும் இரவு நேரத்தில.........!

*

எதிர்பார்த்த நாள் வந்துவிட்டது......பிரசவ வேதனை...... நர்சுவாகை...டாக்டர் சோதனை...

குழந்தைகள் பிறந்துவிட்டன... இரட்டைக் குழந்தைகள்!

வெளியேகாத்துநின்ற, பாவலர், செய்தி கேட்டதும் 'கஜமுகா! கஜமுகா! ஆஞ்சநேயப் பெருமானே!' என்று, ஆரவாரித்தார். தேங்காய் உடைபட்டது. வந்தோருக்கெல்லாம் தித்திப்பு வழங்கப்பட்டது. ஆனந்தத்தோடு உலவுகிறார் அவர். பிரசவ அறையில் கிடந்த அஞ்சுகத்தின் காதுகளில், வெளியில் நடக்கும் ஆர்பாட்டம், கேட்கிறது. வேதனையிலும் இன்பம்! பெரிய சுமை யொன்று போய்விட்டது போன்ற மனநிலை. மெதுவாகக் கண்களைத் திறந்தாள். பக்கத்திலே கிடந்த குழந்தைகளைப் பார்த்தாள். ஆயிரம் தேள் கொட்டியதைப் போலிருந்தது முதல் குழந்தையைக் கண்டதும். திடுக்கிட்டுப் போனாள். கொஞ்சம் மனதைத் திடப்படுத்திக் கொண்டு மற்றொரு குழந்தையையும் பார்த்தாள். இரண்டாயிரம் ஈட்டிகள் பாய்ச்சியது போலிருந்தது! 'ஐயோ!' என்று அலறினாள். 'பாழும் தெய்வமே! மோசம் செய்துவிட்டாயே?' என்றாள். "உங்கள் இஷ்டதெய்வங்கள் தானே பிறந்திருக்கின்றன" என்று, யாரோ சொல்வது போலிருந்தது. 'இப்படிப்பட்ட குழந்தைகளையா கேட்டேன். கோயில் கட்டினோம். கும்பிட்டோம்' என்று கதறினாள். என்ன செய்வது? பிறந்துவிட்டதே! பிள்ளையார் போலவும், அனுமாரைப் போலவும் இரண்டுகுழந்தைகள். ஆலாலசுந்தரருக்குப் பிறந்திருக்கும் செய்தி ஊர் முழுவதும் பரவிற்று. ஒரே ஜனத்திரள், அந்த அற்புதத்தைப் பார்க்கக் கூடிற்று. பத்திரிகைகளில் கூட பெரிய தலைப்புகளிட்டு செய்திகள் வரத் துவங்கின. ஆனால் அவளும் அவரும் பட்ட பாடு!

நாட்கள் ஓடின.

இரண்டு உருவங்களும் வளர்ந்தன.

பாலூட்டி, தாலாட்டித் தூங்க வைக்க அவள் பட்டபாடு!

கணபதியைத் தூக்கி அணைக்கவே முடியவில்லை அவர்களால். தப்பித் தவறி துதிக்கை எங்காவது பட்டால் அவன் அழுவான். சில வேளைகளில் அவளது கண்ணில் கூட அது பட்டுவிடுவதுண்டு. இந்தக் கண்றாவியைக் கண்டு ஆலாலசுந்தரம் அடைந்த கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. கணபதியைவிட அனுமனைத் தூங்கவைப்பதுதான் பெரிய தொல்லை! வாலை மடக்கி, ஒழுங்காக வைப்பதே பெரிய காரியமாக இருந்தது. அவனுக்குப் பால் புகட்ட,புதிய 'முறை'களையெல்லாம் அனுஷ்டிக்கவேண்டியதாயிற்று. இருவரும் வளர்ந்துவிட்டனர்.... ... கணபதிக்கு சோறூட்டும் பருவம்.

வயிற்றுப் பிழைப்புக்காகக் கிளிபோல் சொன்னதைச்சொல்லும் 'குலத்தார்' பூதேவராம். பூமிக்குத் தொண்டு செய்து சோற்றை 'அவதாரமெடுக்கச்' செய்யும் பண்ணையாள் சூத்திரனாம்!

அனுமனும் பால்குடிக்கும் கட்டத்தைத் தாண்டிவிட்டான்.

பாலும் தெளிதேனும் தருவதா, பாலும் பருப்பும் கலந்து ஊட்டுவதா......என்பது பெரிய பிரச்னையாகிவிட்டது. எதைக் கொடுத்தாலும் அவன் அழுகை ஓய்வதில்லை! அவனும் சாப்பிடுவதில்லை! தொந்தி சரிய அவன் நடைபோடும் அழகு......அனுமன் கதையோ கேட்க வேண்டாம். சோறு தின்பதே இல்லை! பழமும் பட்டாணியும்தான் அவனுக்குத் தேவை. அவன் தத்தித் தத்திக் குதிக்கும் கோலம்.....

அஞ்சுகம் தவியாய்த் தவித்தாள். தலையிலடித்துக் கொள்ளாத நேரம் கிடையாது. இந்தக் கோலாகலக் காட்சியைக் காண ஊர் முழுதும் கூடிநிற்கும்—அவர்கள் வீட்டின் முன்னால். இதில் வேடிக்கையென்னவென்றால், பிள்ளையார் கோவிலில் வந்து தேங்காய் உடைத்து விட்டு கும்பிட்டுச் செல்லும் பக்தர்களே, பரிதாபப்படுவர் அஞ்சலைக்காக! அனுமார் பக்தர் எவரும், ஆலாலசுந்தரர் படும் அவதியைத்தான் சொல்லினரே தவிர, அங்குவளரும் அனுமாரைப் பூஜிக்கவோ ஆராதிக்கவோ வருவதில்லை.

இந்த அலங்கோலத்தைச் சகிக்க முடியவில்லை.

ஆலாலசுந்திரருக்கு முன்னைவிட இப்போது, 'சான்சும்', வருவாயும் நிறைய வந்து கொண்டிருந்தன. வெளியூர் போனால் அவரைப்பார்க்கக்கூடும் கூட்டமே மிகப் பெரியதாகி விட்டது. ஆனால் அது மனதுக்கு சாந்தியையா தந்து விடும்?

அஞ்சுகத்தால் பொறுக்க முடியவில்லை. போதும் போதுமென்றாகி விட்டது. முழக்கயிறு தேடினாள். உத்தரத்தில் போட்டாள்........

'ஐயோ!'......

*

"என்ன அஞ்சு, என்ன? என்ன?" என்று பக்கத்திலே தூங்கிய ஆலாலசுந்தரர் விழித்துக் கொண்டு கேட்டார். உடம்பெல்லாம் வியர்வை! முகமெல்லாம் பயம் அவளுக்கு! துடித்துப் போயிருந்தாள் அவள். ஆலாலசுந்தரருக்கு விஷயம் விளங்கவில்லை. 'ஏதாவது கனவுகண்டாயா?' என்று கேட்டார். அவள் பேசவில்லை. வேக வேகமாக எழுந்து போனாள், பூஜைமாடத்திலிருந்த கணபதியையும் அனுமார் விக்ரகத்தையும் எடுத்து வீசியெறிந்தாள்...

ஆலாலசுந்தரர் திகைத்தார். கையைப் பிடித்துத் தடுத்தார். அவளோ, "நாளைக்கே அந்த இரண்டு கோயிலிலும் இருக்கும்விக்ரகங்களை அப்புறப் படுத்த வேண்டும்" என்றாள். "ஐயோ! என்ன சொல்கிறாய் அஞ்சு? அக்கிரகாரியமா இது" என்று, பிரசங்கபூஷணம், தவித்தார்.

"ஆகாவிட்டால் நாம், இந்த வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும். அந்த உருவங்களின் ஞாபகம் நினைவிலிருந்தால் அதே போல எனக்கும் குழந்தை பிறந்துவிடும்"

"போடீ, பைத்யம்!"

"கர்ப்பிணியின் நினைவுதான் கருவிலிருக்கும் குழந்தையாக மாறுமாம்"

"அதனால்......?"

"இந்த விக்ரகங்களை என்னால் இனி பார்க்க முடியாது."

பிரசங்கபூஷணம் விழித்தார்! கையிலிருந்த விக்ரகங்களோடு கிணற்றை நோக்கிப்போனாள், அஞ்சுகம்!!

★

# தொழிலுலகில்.....................

"கழுதைப் பயல்! காயை வாங்கி வந்துவிட்டான்" என்று எடுபிடியைப் பார்த்துச்சீறினார் ஏகாம்பரம். ஆப்பிள் சிறிது புளித்ததால் ஆத்திரம் அவருக்கு! அதை வீசியெறிந்துவிட்டு, காய்ச்சிய பாலை காதலி எடுத்துத்தர, அருந்தினார். ஆயாசந்தீர, பக்கத்திலமர்ந்தாள், அவள். இன்பம் கும்மாளம் கொட்டியது! வீதியிலே வீழ்ந்த ஆப்பிளை நோக்கி, நெடுநேரமாக 'ஐயா' தின்பதைப் பார்த்துக் கொண்டிருந்த ஏழைக்குழந்தை ஓடிற்று. எடுத்தது. கடித்தது. அதைவிட கொஞ்சம் உயரமான மற்றோர் சிறுவன் பாய்ந்தோடி, அப்பழத்தைப் பிடுங்கினான். ஒரே சப்தம்! சண்டை! சாக்கடையில் இரண்டும் புரண்டன. பழம் எங்கோ விழுந்துவிட்டது. இரண்டு 'எலும்புக்கூடு'களும் ஒன்றையொன்றுபார்த்துக்கொண்டன. ஏமாற்றம் அவைகளின் கண்களில்! ஏகாம்பரத்துக்கும் அவரது காதலிக்கும் அருமையான 'ஹாஸ்யக் காட்சி!! இரண்டு குழந்தைகளும், சண்டை போட்டுக்கொண்டே போய்க்கொண்டிருக்கின்றன......

விற்பனையாகிறது:

| | | |
|---|---|---|
| மக்கள் தீர்ப்பு | ... | 0-8-0 |
| ஜெபமாலை | ... | 0-8-0 |
| சாது | ... | 0-8-0 |

அச்சில்
வள்ளிநாயகியின் கோபம்

வெளிவந்துவிட்டது!
சி. என். ஏ. தீட்டிய
வாழ்க்கைப் புயல்
3-ம் பதிப்பு] [விலை 12 அணா
பரிமளம் பதிப்பகம் 17-B. வரகுவாசல்தெரு காஞ்சிபுரம்.

வியாபாரிகளுக்கு
25o/o கழிவு உண்டு.
வி. பி. பி. இல்லை.
முன் பணம் அனுப்புக.
தபால் செலவு தனி.

# "புரட்சி-போய்விட்டதா?"

[ கதிரன் ]

["பிரிட்டிஷ் அதிகாரிகளின் கையிலிருந்து மக்களை இந்திய அதிகாரிகளின் கைக்கு மாற்றி விடுவதற்குப் பெயரல்ல, 'இந்திய விடுதலை' என்பது"

"சுதந்திரம் கிடைத்ததால், இந்தியாவில் எவ்விதமாறுதலையும் நான் காணவில்லை"

"சுதந்திரம், மக்களின் வாழ்க்கையில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியிருக்க வேண்டும்"

"நகரங்களில் அமர்ந்தபடி, கிராமங்களை மறந்து விட்டனர்கள். சுதந்திரத்தால் அவர்கள் பெற்றதென்ன? பசியும், நிலமில்லாமையும், சாவுந் தானே!"

இந்தியத் துணைக்கண்டத்தில் அண்மையில் சுற்றுப்பிரயாணம் செய்த பிரபல எழுத்தாள அறிஞர் லூயிபிஷர், ஐதராபாத்தில்பேசுகையில், இவ்விதக் கருத்துக்களைச் சிந்தியுள்ளார். சுதந்திரம், மக்களிடம் ஒரு மறுமலர்ச்சியை உண்டு பண்ணியிருக்க வேண்டுமென்றும்—அது, சுதந்திர இந்தியாவில் ஏற்படவில்லையென்றும், வருத்தப் பட்டிருக்கிறார். 'சுயராஜ்யம்' கிடைத்தபின், மக்களின் வாழ்க்கைத்துறைகள் யாவிலும், புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படவில்லை யென்பதும், அவரது கருத்தாகும்.

இந்தக்கருத்தை, அவர் போன்ற, உலகமேதைகள் பலர் அடிக்கடி, சொல்லிய வண்ணம் உள்ளனர்.

நாம், ஆதிமுதல்கூறிவருகிறோம்—"இந்திய சுயராஜ்யம்—ஒருஅதிகார மாற்றம் தான்" என்பதாக,

இந்தப் பிரச்னைகள் சம்பந்தமாக என். ஜி. ஜாக் எனும் அறிஞர், நீட்டியிருக்கும், சில விபரங்களைக் கீழே தருகிறோம். 'சுதந்திரா' ஆங்கில இதழில் வந்த இந்தக்கட்டுரையைத் தோழர் கதிரன் அவர்கள் தமிழில், தருகிறார்.

சுயராஜ்யம் கிடைத்ததும், மக்களிடம் புரட்சிகரமான மாறுதல்கள் அரும்பியிருக்க வேண்டும். ஏன், அரும்பவில்லை?—என்பதே, இக் கட்டுரை]

*

"புரட்சி ஓங்குக!"

"இன்குலாப் ஜிந்தாபாத்!!"

இந்த முழக்கங்கள், சுதந்திரம் பெறுமுன், மிகமிகப் பிரபலமாகியிருந்தன. ஆனால், இப்போது, கேட்கவே அரிதாகி வருகிறது,

இந்த ஒலிதான் ஒவ்வொரு காங்கிரஸ் பந்தல்களிலிருந்தும் எதிரொலித்தது! அக்கோஷத்தைப்பூஷணமாகக்கொண்டு தடியடிகளையும் துப்பாக்கி வேட்டுக்களையும் துச்சமெனக் கருதி வீரநடை பயின்றவர் ஆயிரமாயிரம் சத்தியாக்கிரகிகள். இதுவே தூக்குமேடையில் நிறுத்தப்பட்டதேசபக்தர்களின்கடைசிக் கோஷமாக இருந்தது.

"புரட்சி ஓங்குக!" தற்சமயம் இந்தக் கோஷம் ஏன் கேட்கப்படுவதே இல்லை, நிச்சயமாக காங்கிரஸ் வட்டாரங்களில்? திரைப்பட கதாநாயகனைப்போல நாம் நம்முடைய இலட்சியத்தை அடையப்பெற்று, 'பின்னர் இன்பமாகவே வாழ்ந்து' வருகிறோமா? ஆசைநாயகியைப் போலல்லாமல், புரட்சியைக் காதலித்து இலட்சிய சித்தி பெற்றவர் தம்மை அப்புரட்சி ஜீரணித்துவிடுகிறது என்று கூறப்படுகிறது. ஆகையினாற்றான் நம் ஆட்சியாளர் இத்தகு முடிவிற்கஞ்சி, அதைச் சொல்வதிலிருந்து நழுவுகின்றனரா!

அஃதல்லாமல் நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோமெனினும், புரட்சியை நழுவவேவிட்டு விட்டோமா? அதனால் அந்நஷ்டம் மனத்திலே மருட்சியை உண்டாக்கிவிட அதனை மறந்துவிடவேண்டிமிகவும் முயன்று வருகிறோமா?

இந்த விசாரணை சுவையுள்ளதும், முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகின்றது. இதுகடந்த ஐந்தாண்டுக்காலத்தில் நடைபெற்ற, நடைபெறாத நிகழ்ச்சிகள்பற்றிய அந்தரங்கரூட்சமத்தை அம்பலமாக்குகின்றது. நம்முடைய சுதந்திரத்துடன் பின்னிக்கிடப்பதுபோலுள்ளஉமாற்றத்தை இது மேலும் விளக்க வைக்கலாம்.

புரட்சியின்றி விடுதலை பெற்ற பெரியநாடு என்பதற்கு வரலாற்றிலேயே இந்தியா ஒரே எடுத்துக் காட்டு. இதற்கு உன்னதநிலை எய்தியதில் முக்கிய பெருமைக்குரியவர் காந்தியேயாவார். ஆனால் 1947 ஆகஸ்டு பதினைந்தில் இந்தியாவை விட்டு வெளியேறியதில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி சர்க்காரும் மிக உயரிய அரசியல் தந்திரத்தைக் கையாண்டனர். பிரிட்டிஷ் ஆட்சியை முடிவடையும்படி செய்ததைப் போல் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட இந்தியாவில் வேறெந்த நிகழ்ச்சியும் இருந்தது இல்லை.

ஆனபோதிலும் பிரிட்டிஷார் புரட்சியைக் குறித்துக் கொண்டிருந்த அச்சமே இந்தியாவைவிட்டு அவர்கள் பெருந்தன்மையாக வெளியேறியதற்குப் பெருமளவிற்குத் தூண்டுகோலாயிருந்ததாகும். இந்திய தேசிய இராணுவக் (I. N. A.) கொந்தளிப்பும், கடற்படையினரின் (Naval-mutiny) கலகமும் எந்தத்திக்கில் காற்றடித்தது என்பதற்குச் சான்றுகள், அவை சுவர்ச் சித்திரங்கள்; 1952-ஆம் ஆண்டு 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற இயக்கத்திற்கு எதிர்பாராத திசைகளிலிருந்து கிளம்பிய ஆதரவுகள்.

தம்வரையில் காந்தியார் இரத்தக்களரி எனுமளவிலும் ஆயுதத் தாக்குதல் எனுமளவிலும் புரட்சியின் நம்பினரில்லை. அமைதியும் அகிம்சையுமே அவரது தாரகமந்திரங்கள்; படுகுழியும் சிரச்சேதமுமல்ல. இந்தியாவில் பிரிட்டிஷ் சர்க்காரின் சிறந்த போலிஸ்காரன் என்று அவரைப் பற்றிக் கிண்டலாகக் கூறப்பட்டதில் நிறைந்த பொருள் உளது.

காந்தியார், யாவருமறிந்த பொருளில் புரட்சியின் பால் நம்பிக்கை வைத்திருக்காமற்போனாலும், அவரே எக்காலத்திலும் தோன்றாத மாபெரிய புரட்சிக்காரர் எனலாம். அவர் கண்ட புரட்சியின் ஒரே ஒரு

பகுதிதான் இந்தியா அரசியல் விடுதலை பெற்றது. காந்தி சகாப்தத்தின் திரையைத் தூக்குவதுதான் அது!

ஆகஸ்டு 15 சந்தேகத்திற்கிடமின்றி இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கச் செய்தது. ஆனால் அது பிறந்த அதே நேரத்திலே, நாம் நிந்த—நாம்நேசித்த இந்தியா இறந்து விட்டது. ஒரு மாறுதலுடனும் பிளவுடனும் விடுதலை வந்துற்றது. இரத்த வெள்ளமும், கொள்ளை, களவும் ஊடேகிளம்பின. குறித்தநாள், ஆசை நிறைவேறிய நாள், நிர்ணயித்த நாள் ஆகஸ்டு 15 என்று பெருமைப் பட்டுக்கொண்டோம். ஆனால் அவையாவும் வெஸ்ட்மின்ஸ்டரில் முடிவு செய்யப்பட்டன. அது இனமாக, ஏதோ தள்ளிக்கொடுப்பதுபோல் கொடுக்கப்பட்டது; ஒத்துப்போவதுபோல் பெறப்பட்டது. கவளமேயில்லாது போய் விடுவதைவிட, அரைக்கவளம் பெறுவதுமேல் என்ற முறையில் அது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அவர்களுக்கே உரித்தான எச்சரிக்கையுடன், பிரிட்டிஷார் பாகிஸ்தானுக்கு ஒன்று, இந்தியாவிற்கு மற்றொன்று எனும்படி இரண்டு கவளங்களாக அதைக் காண்பித்தார்கள். தங்களுக்கும் ஒன்றைவைத்துக் கொண்டார்கள். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள பெருத்த பிரிட்டிஷ் மூலதனங்களே அந்தக்கவளம். இரண்டு உலகப் போர்களால் அலைக்கழிக்கப்பட்ட ஆங்கிலேயனுக்கு பேராசு என்ற உமியைவிட, வாணிபப் பாதுகாப்பு என்ற சத்துத்தான் முக்கியமாகப் பட்டது.

'அய்யனே! அது கிளர்ச்சி அல்ல, அஃதோர் புரட்சி' என்று லியான் கோர்ட் கோமான் (Duc de Lian Court) பதினாறும் லூயி மன்னனுக்கு சொன்னான், பிரஞ்சுப் புரட்சி எழுந்த நேரத்தில். 'அய்யா! இது புரட்சியல்ல; பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஒரு சட்டமே யாகும் —அதன் கடைசி சட்டம்' என்று சுதந்திரம் வந்த காலை நாம் கூறியிருக்கலாமன்றோ!

அது அரசியல் சட்ட முறைப்படி உண்டான மென்மையான மாற்றம். குறைந்த அளவு சலசலப்புடன் நிகழ்ந்த அதிகார மாறுதல். பிரிட்டிஷ் கவர்னர் ஜனரல் முதல், சட்டத்தையும் ஒழுங்கையும் சிற்றூர்களில் கண்காணிக்கும் தாழ்ந்த அதிகாரி ஈறாக எல்லாம் அப்படியே போலிருந்தன.

நமக்கு விடுதலை, புரட்சிவெடி போன்று வரவில்லை; அரசியல் சட்டம் எழுப்பிய அச்ச ஒலிபோலவே வந்தது. அது பிறந்த முறையே அது நடப்பிலிருந்து வருவதற்கு முன் மாதிரியாகிவிட்டது. மிகப் பெரிய மாறுதல்களை நாம் கடக்கவில்லை என்று கூறுவதற்கில்லை. அவை உருவாக, நாம் அறியக் கூடாத வகையில் கால தாமதம் ஏற்படுகிறது. அவை மலர்வதும் ஒரு கோர்வையுடன்; தொகுப்பாக, சட்டத்திலே விதிகள் போன்று காணப்படுகின்றன.

ஒரு மக்கள் சமுதாயத்தை உயர்ந்த நிலைகளுக்கு எடுத்துச் செல்லும் குமுறல், கொந்தளிப்பு, உரிமை யுணர்ச்சி, ஓர் புது யுகத்தை உருவாக்கும் எண்ணம், புதுநிலையை சமைக்கும் திண்மை ஆகியவை தெள்ளத் தெளியக் காணப்படவில்லை.

சோவியத் ரஷ்யா நீபர் நதியின் மீது துவக்கிய திட்டங்களைவிடப் பெரிய நதித் திட்டங்கள் நம்முடையனவாகயிருந்தும், ரஷ்யாவில் கிளர்ந்தெழுந்த தேசியக் கூட்டுறவிலும் பெருமையிலும் பத்தில் ஒரு பகுதி கூட ஈண்டு எழும்பவில்லை எனக் குமுறினார் நேரு. இதற்காகக் குற்றம் சாட்டப்பட வேண்டியவர் மக்களல்ல, சர்க்காரே. போராடிப் போராடித் தங்களால் எவ்வளவு சிறந்து வாழ முடியுமோ அவ்வளவு சிறந்த முறையில் வாழ அவர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த வாழ்க்கைப் போராட்டமே ஒவ்வோராண்டும் மேலும் மேலும் கடினமாகிக் கொண்டே வருகிறது.

இந்தச் சுதந்திரம் என்ற பெரிய சாதனையில் பாமர மக்கள் பங்கு பெறச் செய்யப்படவில்லை. ரஷ்யாவில், தொழிலாளி அந்நாட்டு மன்னன். சீனாவிலே மக்கள் சர்க்கார் என்று அழைக்கப் படுகிறது. ஆனால் இந்தியாவிலிருப்பதோ காங்கிரஸ் ராஜ்யம். காங்கிரஸ்காரன் தன்னைத் தனி உரிமைகள் பெற்றவனென்றே கருதுகிறான். ஆள உரிமையுடைய உயர் பிறவி என்றே எண்ணுகிறான்.

எப்படியோ காந்தியாருடன் காங்கிரஸ் கட்சியில் புரட்சி வாடை மறைந்து விட்டது போலவே தோன்றுகிறது. முன்னர் 'அபாயத்தில்வாழ்'(The doctrine of Living dangerously') என்ற கொள்கையைப் பரப்பி வந்த நேருவே இப்போது 'சம்பவங்களின் கட்டாயம்' ('Compulsion of events') என்று அடிக்கடி குறிப்பிடுகின்றார்.

இஃது, ஒரு திட்டத்தையும் நிறைவேற்றாத நிலையற்ற தன்மை, சூழ்நிலைகளை ஒத்துக்கொள்ளும் நிலை, ஆகியவற்றிலே முடிவுறும். நிர்வாக முன்மாதிரி, அரசியல் சட்டத்திலே உரிய ஒப்புதல், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வழிவகை ஆகியவைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது, ஒவ்வொரு காரியத்திலும், மாறுதலும் சாதனையும், வருந்தும் வகையில், இல்லாமலிருக்கின்றன.

பாசிபடிந்த பழமையைக்கிழித்து வெளிக்கிளம்பும் போதும்—உதாரணமாக ஜமீன் ஒழிப்புக்கூட, நீண்ட தாமதத்திற்குப்பின் செயல் முறைக்குக் கொண்டுவரப்படுகிறது; பொதுமக்கள் கற்பனையைத் தொடுவதாயில்லாமல் சிக்கல்கள் நிறைந்த பகுதிகள் நிரம்பியுள்ளன. செல்வத்திற்கும், நீண்டகால உரிமைக்கும் நமது ஆட்சியாளர் அளவுக்கு மீறிய மதிப்புக் கொடுத்துச் சாதாரண மக்களின் மனம் புண்படும்படி செய்வதில் வெற்றி பெறுகின்றனர்.

பேனாவின் ஓர் அசைப்பில் மக்களுக்கு நிலங்களைப் பிரித்துக் கொடுத்து மக்களைத் தங்கள் பக்கம் ஈர்த்துக்கொண்டனர் சீனாவிலே கம்யூனிஸ்டுகள். அண்டையிலே நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்ட பிரபுக்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வன்மையாக மறுத்தார் அண்மையில் ஷேக் அப்துல்லா. 'நஷ்டஈடு இன்றி பறிமுதல்' செய்வது என்பதை நமது சட்ட நிபுணர்களும் பண்டிதர்களும் தங்களை அலறச் செய்யும் ஒன்றாகக் கருதினாலும்,

அது பலநூற்றாண்டுகளாக இருந்து வந்த சுரண்டலை யொழித்து விவசாயத்துறையிலே புரட்சியை உண்டுபண்ணியிருப்பதை எவரும் மறுக்க முடியாது.

புரட்சி தனக்கே உரித்தான ஒரு உத்வேகத்தைக்கிளப்புகிறது ஆனால் எழுப்பப்பட்ட அரசியல் சட்டதிட்டம்பயபக்தி உண்டாக்கக் கூடியதாகக் கருதப்படுகிறது. அதன்விளைவாக மாறுதலுக்கு இடமில்லாமல் நிலையானதாகி விடுகிறது. மாறுதல்கள் வரும் நேரத்திலும் அவை நாடாள்வோருக்குப்பெரிதும் சாதகமாகவேஅமைந்து விடுகின்றன. அதன்விளைவு பிற்போக்குத் தனம் தான். அஃது இந்தியாவில்ஏற்கனவே ஏற்பட்டு விட்டது.

அரசியல் சட்டவரம்புக்குட்பட்ட செய்கையால் விடுதலை பெற்றதினால், காங்கிரஸ்காரர்கள் புரட்சியை செல்லத்தகாததாகச் செய்யமுனைந்துள்ளவர்போல் காணப்படுகிறார்கள். அதன் பற்களைப் பிடுங்கிவிட்டனர்; நகங்களை வெட்டிவிட்டனர்; அதன் முழக்கத்தைக்கூட நிசப்தப்படுத்திவிட்டனர்.

'சட்டமும் ஒழுங்கும்', "இன்குலாப் ஜிந்தாபாத்" இருக்கவேண்டிய இடத்தைக் கைப்பற்றிவிட்டன. உண்மையாகவே புரட்சி என்ற நினைப்பையே பரிகசித்தார் மத்திய சர்க்கார் மந்திரி யொருவர் சில காலத்திற்கு முன்னர். 'மாறுதலிலே புரட்சி கிடையாது; அத்தகைய ஒன்று என்றுமே வர இயலாது' என்று பாராளுமன்றத்திலே பகன்றார் சி.டி. தேஷ்முக் அவர்கள்.

ஆதிக்க வெறியர் பரம்பரையினர் சொன்னகூற்று என்று தள்ளிவிட முடியாது. ஏனெனில் தேஷ்முக் மத்திய சர்க்காரில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறார்; நேருவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரென்பதும் பிரசித்தம். எனவே அவரது கருத்தை ஒதுக்கிவிட முடியாது. காங்கிரஸ் ஆட்சியாளர் எண்ணத்தையே அது பிரதிப்பலிப்பதாகும்.

ஒரு புரட்சியை ஏளனம் செய்வதே அது எழும்பும் வகைக்கு சரியான வழிவகுப்பதாகும். மக்களின் புரட்சிகர எண்ணங்களின்மீது வளர விட்டால் சுதந்திரம் ருசியில்லாததாக, இலாபகரமற்றதாக முடிவுறும். புரட்சியின் பக்கமிலிருந்து காந்தியார் நம்மை வேறு பக்கத்திற்கு இழுத்துச் சென்றார். ஆனால் அதுவே அவர் கண்ட மாபெரும் புரட்சி. துரதிருஷ்டவசமாக அவர் வாக்கு நம்மால் மறக்கப் பட்டுவிட்டதுபோலும்!

ஒருபுறம் காந்தீயப் புரட்சியைப் புகுத்த நாம் தவறிவிட்டோம். மறுபுறம் புரட்சியென்ற வார்த்தையைக் கண்டே வெட்கப் படுகிறோம், கிலேசமடைகிறோம். 'அது மாறுதலிலேகூட இல்லை' என்று பெருமிதமாகக் கூறுகின்றார் நிதிமந்திரி.

இந்தப் பெருமிதப்போக்கு—நம்மிடையே உள்ள வரலாற்றைப் புரிந்துகொள்ளாமல் படிப்பது — புரட்சியை நழுவவிடுவது — என்பதுதான் நிறைசெய்தல் இயலாமைக்கும், ஐந்தாண்டுகால ஏமாற்றத்துக்கும் உண்மைக் காரணம்.

புரட்சியை ஊன்றத்தவறினால் சுதந்திரம் மாயமானாகவே முடிவுறும். நாம் புரட்சியின்றி சுதந்திரம் பெற்றிருக்கலாம், ஆனால் அதே சுதந்திரத்தைப் புரட்சியின் உருவாக ஆக்குவோம். கையாளும் முறைகள் ஓர் புது அத்தியாயத்தை துவக்கிவைத்து முடிவுக்கு ஓர் சிறப்பைக்கொடுக்கட்டும். எனவே இந்த ஐந்தாவது சுதந்திர ஆண்டு நிறைவின்போது "புரட்சி ஓங்குக" என்று முழக்கமிடுவோம்!

★

## இருவர்

**இவனும்**

நான் ஒரு பாட்டாளி!—கோடிக் கணக்கான உழைக்கும் ஜீவன்களில் ஒருவன். சாவும் வாழ்வும் எனக்குச் சமம். என்றாவது வாழ்ந்திருந்தால் அல்லவா, சாவுக்காகப் பயப்படவேண்டும்! நாங்கள் பிறந்த உடனேயே உயிர்ப்பிணங்களாகி விடுகிறோம்.

**அவனும்**

சாவா?—ஏ, அப்பா! இந்த உலகிலே, இன்னும் என்னென்ன செய்யவேண்டும். 'முதலாளி!' என்று அழைக்கும் மூவாயிரம் பயல்கள் கிடக்க, திரும்பினால் தெண்டனிட நூறுபேரிருக்க, நான் எப்படிச் சாவது? உலகம் எவ்வளவு அழகாயிருக்கிறது! அதில் ஒரு துளிகூட அனுபவிக்கவில்லையே நான். அதற்குள்ளாகவா? மாட்டேன்!

## எச்சரிக்கை

[மான்]

"பேசாதே எழுதாதே நடிக்காதே"—ஆட்சி
போட்டிருந்த சட்டங்கள் தூள்தூளாச்சு!

பேசினர் எழுதினர் நடித்தார்—கொள்கை
பெருங்காற்றுத் தீப்போலப் பரவிற்று எங்கும்!

வீசாத புத்துணர்வே தடைவிதித்தாலென்று
வெறுங்கனவு கண்டிருந்தோர் எண்ணத்தில்மண்ணே

வீசிற்று தமிழார்வம்! கொடுங்கோன்மை
வெலவெலத்துப் போனதிந்த மூன்றாண்டுநாளில்!

தடியடியால் துப்பாக்கி முனையால், நாட்டில்!
தலைதூக்கும் புத்துணர்வு அழியாது! வளரும்.

அடக்குமுறை என்னசெய்யும் உயிரைக்கொல்லும்
அதன்பின்னே எழும்புகிற புரட்சிக் கீதம்

உடைத்தெறியும் சிறைக்கதவை! ஆட்சிபீடம்
உயிர்தப்ப ஓடும். ஒளிய இடந்தேடும்

படைபலத்தால் நாடாள எண்ணும்ஜாரின்
பரம்பரைக்கு இப்பாடம் எச்சரிக்கையாகும்!

# சந்தனக்கிண்ணம்

மு. கருணாநிதி

தலைவர் பேச ஆரம்பித்தார். புது நிலவு போன்ற மணமகளையும், பூரிப்பு வழிய அமர்ந்திருக்கும் மணமகனையும் பாராட்டினார். பழைமையின் அடிச்சுவடுகள் மறையாமலிருக்கிற அந்தப் பட்டிக்காட்டிலே பகுத்தறிவுச் சுடர் கொளுத்தி வைத்த அந்த இளைஞனை இதய பூர்வமாக வாழ்த்தி மகிழ்ந்தார். வாழ்வுக்கு ஒளி தரப் போகும் தன் காதலனைத் தலைவர் பாராட்ட, அது கேட்டு வெட்கத்தோடு அமர்ந்திருக்கும் புதுப் பெண்ணின் நெஞ்சம் இன்ப ஊடையாயிற்று.

புரோகித மணம் ஏன் கூடாது; புரட்சித் திருமணம் எப்படி வளர்ந்தது என்பதற்கான விளக்கங்களை வாரி வாரித் தலைவர் இறைத்தார். வந்திருந்த வண்டினங்கள் அந்தத் தீந்தமிழ்த் தேனை உண்டு மகிழ்ந்தன.

பொருந்திய மணம் என்றால் என்ன? திருமணத்திற்குத் தேவையான—தகுதியான வயது என்ன என்பது பற்றியும் விளக்கம் தந்தார்.

பழைமையும் புதுமையும் மோதிக் கொள்ளக் கூடாது என்று கேலி செய்தார், ஆதாரங்கள் காட்டி.

திராவிடம் என்று ஒரு இனம் உண்டு. ''திராவிடம்'' என்று இழித்துரைப்பர், தீயோர். தீயோருக்கு தீராவிடம் தான் என்று சான்றுகளை வழங்கினார்.

''திராவிட உட்கல வங்க'' என்ற தாகூரின் பாட்டிலே, ''தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நற்றிருநாடும்'' என்ற மனோன்மணியம் ஆசிரியர் ஏட்டிலே, ''திராவிடர் வரலாறு'' என்ற சரித்திரப்புத்தகத்திலே, 'மாமல்லன் காலத்தில் திராவிட பாணியில் செதுக்கப்பட்டது'' என்ற மகாபலிபுரத்துச் சிற்பக் கல்வெட்டிலே, ''திராவிட வித்யாபூஷணம்'' என்று சாமிநாத அய்யருக்கு தரப்பட்ட பட்டத்திலே திராவிட என்கின்ற தேன்மலர் மணம் வீசுவதை தென்றல் நடையில் எடுத்துச் சொன்னார்.

அத்தகைய திராவிடத்தைக் காப்பாற்ற மணமக்கள் முன்வர வேண்டுமென்பதை, 'காதலிலே கவிதையிலே களம் போகும் பேச்சு கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு' என்ற கவிதை வரிகளால் குறிப்பிட்டார்.

பின்னர் வாழ்வுப் பாதையில் குறுக்கிடும் வளைவுகளை எடுத்துச் சொல்லி எதையும் தாங்கிடும் துணிவு வேண்டும் என்று தைரிய மூட்டினார். குடும்பம் என்பது மணல் வீடு கட்டி மரப் பொம்மை வைத்து மழலை விளையாட்டு விளையாடிய கொழுந்துப் பருவ நிகழ்ச்சியல்ல எனக் காட்டி, வாழ்க்கை வானில் பறக்கச் சிறகடிக்கும் வெண் புறுக்காள் வாழ்க நீவிர் வளமெலாம் பெற்று! என வாழ்த்தினார், பலமுறை. புறநானூற்றில் உலவிடும் தாய்மார்கள் பலர் தேவை என்று முழங்கினார். சுருக்கமாகவும் சுவையாகவும் புறநானூறு கூறுகிற ஒரு அழகான கவிதைக்கு மெருகேற்றி எளிய நடையிலே தேமிசைத்துத் தந்தார். அந்தக் கீதமே ஒரு கதையாக இருந்தது.

குடிசைதான் ஒரு புறத்தில்
கூரிய வேல், வாள்
வரிசையாய் அமைத்திருக்கும்,
வையத்தைப் பிடிப்பதற்கும்
வெம்பகை முடிப்பதற்கும்,
வடித்து வைத்த
படைக்கலம்போல்
மின்னும், மிளிரும்.
புலியின் குகையினிலே
அழகில்லை; புதுமையல்ல.
கிலியும் மெய் சிலிர்ப்பும்
கீழிறங்கும் தன்மையும்
தலை காட்டா;
மானத்தின் உறைவிடம்,
மறவன் மாளிகை.
இல்லத்து வாயலிலே
கிண்ணத்துச் சோறோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து
வயிற்றுக்குள் வழியனுப்ப;
பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப்
போட்டாள்
பெருநரைக்
கிழவி யொருத்தி,
ஓடி வந்தான் ஒரு வீரன்
ஒரு சேதிபாட்டி, என்றான்
''ஆடி வந்த சிறுமிபோல்
பெரு மூச்சுவாங்குகின்றாய்
ஆண் மகனா நீ தம்பி!
மூச்சுக்கு மூச்சு
இடைவேளை ஏற்படட்டும்,
—பின்
பேச்சுக்குத் துவக்கம் செய்''
என்றாள், அந்தக்
கிண்டலுக்குப் பேர்போன
கிழட்டுத் தமிழச்சி.
''வேடிக்கை நேரம் இதுவல்ல
பாட்டி, உன்
வாடிக்கைக் கேலியை
விட்டுவிடு.

மடிந்தான் உன் மகன்
களத்தில்'' என்றான்.
மனம் ஒடிந்து நிமிர்ந்தாள்
தாய்க் கிழவி ஒருமுறை.
''தாயம் ஆடுகையில்
காய்களை வெட்டுவதுண்டு-
களமும் அதுதான்;
காயம் மார்பிலா முதுகிலா?''
என்றாள்
'முதுகில்' என்றான்.
கிழவி துடித்தனள்.
இதயம் வெடித்தனள்.
வாளை எடுத்தனள்.
முழவு ஒலித்த திக்கைநோக்கி
முடுக்கினாள் வேகம்.
கோழைக்குப்
பால் கொடுத்தேன்—
குப்புற
வீழ்ந்து கிடக்கும்,
மோழைக்குப் பெயர்
போர் வீரனாம்.
முன்பொரு நாள்
பாய்ந்துவந்த ஈட்டிக்கு
பதில் சொல்ல
மார்பைக் காட்டி
சாய்ந்து கிடந்தார்,
என் சாகாத கண்ணாளர்.
அவருக்குப் பிறந்தானா!
அடடா! மானமெங்கே!
குட்டிச் சுவருக்கும்
கீழாக வீழ்ந்துபட்டான்
இமய வரம்பினிலே
வீரம் சிரிக்கும்
வீணை நரம்பினிலே
இசை துடிக்கும்,
அதுவும்
மானம் மானமென்றே
முழக்கும்.
மதுவும்சுராவும் உண்டுவாழும்
மானமற்ற ஆரியத்தின்
வம்சமா நீ? எடா!
மறத் தமிழ்க் குடியிலே
மாசு தூவி விட்டாய்.
நின்று தொழுத்தாய்
திமிர் பாய்ந்த
தோள்கள் எங்கே?
தினவெடுக்க வில்லையோ;
அந்தோ!
என்று கதறினாள்,
எண்பதை நெருங்கிய
ஏழைக் கிழவி.
சென்றங்கு செருமுனையில்
சிதறிக் கிடந்த
செந்தமிழ்க் காளைகளைப்
புரட்டிப் பார்த்தாள் அங்கு
நற்றமிழ் நாட்டைக் காக்க
ஓடிற்று இரத்த வெள்ளம்.
பிணக்குவியலிலே
பெருமூச்சு
வாங்க நடந்தாள்.
மணப்பந்தலினும்
அந்த மகிழ்ச்சியில்லை;
மகன் பிறந்தபோதும்
மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு
அவன் அழிந்து கிடந்தான்
ஈட்டிக்கு மார்புகாட்டி.
அறுத்தெறிய இருந்தேன்
அவன் குடித்த மார்பை.
அடடா!
கருத்தெரிய
பொய் சொன்ன
கயவன் எங்கே?
வாளிங்கே!
அவன் நாக்கெங்கே?—

இந்த வீர இசையைத் தலைவர் பாடிமுடித்தார். பந்தல் அதிர்ந்தது, கைத்தட்டல். கையொலி ஓய்ந்த பிறகு தலைவர் சொன்னார் ''இந்தப் பாட்டு நான் எழுதியதில்லை. இதோ இருக்கிறாரே; இந்த மணமகன் எழுதியது'' என்று உற்சாகத்தோடு உரைத்தார். மீண்டும் பந்தல் அதிர்ந்தது. பக்கத்திலிருந்த புதுப் புறாவின் இளங்கன்னங்கள் ரோஜா வாயின. இதயம் எப்படி மலர்ந்ததோ; யாரறியமுடியும்! தலைவர் வாழ்த்துரையை முடித்தார். பரிசுகள் வழங்கும் படலம் ஆரம்பமாயிற்று. மணமகளின் உள்ளத்தை அருகிருந்த மணமகனைவிட அதிகமாக உணரக்கூடிய சக்தி வாய்ந்த ஒரு உருவம் அந்தப் பந்தலிலே அமர்ந்திருந்தது. அதுதான் மணமகளின் தோழி விஜயா. கமலாவும் விஜயாவும் கல்லூரியில் மட்டுமல்ல; இளமையிலேயே இணைபிரியாதவர்கள். விஜயா வாழ்க்கைப்பாதையிலே பயணம் நடத்திக்கொண்டிருப்பவள். கமலா இன்றுதான் அடியெடுத்து வைக்கிறாள், கந்தனின் கையைக் கோர்த்தபடி. அறிஞர்களின் பாராட்டுக்குரிய ஒரு அன்புத்துணை தன் தோழிக்குக்கிடைத்தது கண்டு விஜயாவுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி. அந்த ஆனந்தத்தில் மெய்மறந்திருந்தாள். கணவன் மணமேடையிலே புகழப்படும் போதெல்லாம் கமலா, விஜயாவைக் கெண்டைக்கண்ணால் பார்த்ததை விஜயா மட்டுமே உணர முடிந்தது. பரிசளிப்புகள் முடியுந்தருவாயிலிருந்தன. இன்ப வெள்ளத்தில் எல்லாவற்றையும் மறந்திருந்த விஜயா திடுக்கிட்டு எழுந்தாள். பரபரப்புடன் மணமேடைக்கு ஓடினாள். தன் கையிலேயிருந்த ஒரு தாள்சுருளைப்பிரித்தாள்.

''கண்ணே கமலா........! நீ அதிர்ஷ்டசாலி! இதைப் பெற்றுக்கொள், நம் அன்பின் அடையாளமாக. எந்த நெருக்கடி வந்தாலும் சரி இந்த அன்புச் சின்னத்தை மறந்து விடாதே; சந்தனக்கிண்ணம்; உன் உள்ளம் சந்தோஷக் கிண்ணமாயிருப்பதை விளக்கும் சின்னம்''

என்று கூறிக் கொண்டே கமலாவைத் தழுவிக் கொண்டாள். ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள். கமலாவும் கண் கலங்கிவிட்டாள் சந்தோஷத்தால். வாழ்வின் ஆரம்பவிழா அரும்பிவிட்டது.

*

குடும்பம் குதூகலமாய் துவங்கியது. கமலா கொஞ்சம் பழமைப் பித்து பிடித்தவள். காதலர்களுக்குள் ஊடல் ஏற்படுவதெல்லாம் பழமை புதுமைச் சண்டையினாலேயே என்ற நிலைமை சில நாள் தொடர்ந்தது. பிறகு இருவருமே கடவுளர்களைக் கேலிசெய்ய ஆரம்பித்தனர்.

''பரமசிவனையும் பார்வதியையும் தினம் தினம் பள்ளியறைக்குப் பல்லக்கில் தூக்கிக்கொண்டு போகிறார்களே பக்தர்கள் — ஆனால் அவர்களுக்குக் கணபதி முருகன் இருவரைத் தவிர வேறு குழந்தைகள் பிறக்கவே இல்லையே ஏன்'' என்பான் கந்தன்.

''தெரியாதா உங்களுக்கு? அவர்கள் கர்ப்பத்தடை செய்துகொண்டார்கள்'' என்று சிரிப்பாள் கமலா.

''கடலிலே மீனை வெள்ளைக்காரனும் பார்த்தான்; நாமும் பார்த்தோம்......'' என்று ஆரம்பிப்பான் கந்தன்.

''வெள்ளைக்காரன் மீனைப்பார்த்து சப்மரீன் செய்தான்; நாம் மச்சாவதாரம் செய்தோம்'' என்று முடிப்பாள் கமலா.

இப்படி வளர்ந்தது அவர்களின் இன்ப வாழ்வு. இந்தப் புதியஜோடி

கண்டு கந்தனின் தாய் களிப்படைந்தாள் என்றாலும், கமலாவும் இப்படியெல்லாம் கடவுளைத் திட்டுகிறாளே; அடுப்பங்கரையில் கிடக்க வேண்டியதுகளுக்கு இந்த வம்புகள் எல்லாம் ஏன் என்ற ஆத்திரம் மெல்லத் தலைநீட்ட ஆரம்பித்தது. வெளிப்படையாகக் கண்டித்தால் மகனுக்கு வருத்தம் வருமேயென்று ஜாடைமாடையாகக் கண்டிக்கத் தொடங்கினாள். அப்படிக் கண்டனங்கள் கிளம்பும்போது காதலனின் இன்முகத்தை நினைத்து கமலா ஆறுதல் பெறுவாள். அது மட்டுமல்ல; அவள் தோழி விஜயா, அடிக்கடி சொல்லியிருக்கிறாள் "வீட்டிலேயிருக்கிற பெரியவர்களின் மனதை நோகவிடும் படி நடக்காதே. அனுசரித்து நட" என்ற பொன்மொழிகளை. அதை நினைத்துக் கொள்வாள் கமலா. உடனே ஓடிப்போய் அவள் கொடுத்த அன்புப் பரிசை—அந்த சந்தனக் கிண்ணத்தை எடுத்து முகத்திலே அணைத்துக் கொள்வாள். சந்தனக் கிண்ணத்தின் விளிம்புகளிலே அவள் தன் ஆருயிர்த் தோழியின் உயிர்த்துடிப்புள்ள இதழைக் காணுவாள்; அந்தக் கிண்ணத்தின் பளபளப்பிலே தோழியின் சிரிப்பைக்கண்டு துள்ளியெழுவாள். காதலன் வீட்டில் இல்லாத நேரத்தில் அவளுக்குப் பேச்சுத்துணை சந்தனக் கிண்ணந்தான். மாமியாருக்கு மருமகள் மீது ஏற்பட்ட கோபம் அவள் [illegible]வில் பேச வந்தாலும், அதிகமாகப் பேசுவது கிடையாது. பால்யத் தோழி, பள்ளித்துணை, விஜயா அந்தக் கிண்ணத்திலே தன் எண்ணத்தைக் காட்டிக் கமலாவைவிட்டு கிள்ளச் சொல்லிக்கொண்டேயிருந்தாள். கிண்ணத்திலே மின்னும் "விஜயா" என்ற எழுத்துக்கள் கமலாவிடம் எத்தனையோ பழங்கதைகளைச் சொல்லும். கமலாவும் கண்ணை மூடிக்கொண்டு, நினைவுக் கதவைத் திறந்துவைத்துக்கொண்டு அந்த இன்பக் கதைகளைக் கேட்பாள்.

*

திடீரென்று நாட்டிலே தீப்பொறி கிளம்பிற்று. தமிழை ஒழிக்கத் தருக்கர்கள் படை திரட்டினர். அதற்குத் தடைபோடத் தரணியாண்ட இனத்தவர் புறப்பட்டனர். வடநாட்டு இந்திமொழி ஏகாதிபத்யம் திராவிடத்திலே திணிக்கப்பட்டது. அதை எதிர்த்து மொழிப் போர் வீராவேசமாக மூண்டது.

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமைமாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்ற கவிதையை முழக்கியவாறு தமிழர் பட்டாளம் கிளம்பிற்று. சிங்கங்கள் சிறை புகுந்தன. சிசுக்களுடன் பல தமிழ்த்தாய்களை அடக்குமுறையின் கோரவாய் விழுங்கியது. மொழி காக்கப்போன இருவர் — தாலமுத்து நடராசன் எனும் பாவீரர்கள்—தம் மூச்சைக் காக்க முடியாமல் ஆக்கப்பட்டனர் இந்தி வெறியர்களால். தமிழகமெங்கும் கொதிப்பு, குமுறல், புயல்!

*

கமலா பலகணி வழியாக வீதிப் புறத்தைப் பார்த்தபடி நின்றுகொண்டிருக்கிறாள். அவளுடைய கையிலே அந்தச் சந்தனக் கிண்ணமிருக்கிறது. சந்தனக் கிண்ணத்தோடு பேசி முடித்தாகிவிட்டது; இப்போது அவள் எதிர்பார்ப்பது அலுவலகத்திலிருந்து திரும்பும் கந்தனை.

கண்களும் வலிக்கத் துவங்கிவிட்டன; கந்தனைக் காணோம். ஒரு பெருமூச்சோடு பலகணியைவிட்டு அகல முயன்றாள். அமைதியாயிருந்த தெருவிலே ஒரு அலைமுழக்கம் புறப்பட்டது. பரபரப்போடு கமலா பலகணிவழியேபார்வையைச் செலுத்தினாள். "தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! தாலமுத்து நடராசன் புகழ் வாழ்க!" என்று பரணிபாடியபடி ஒரு தமிழர் பட்டாளம் பவனி வந்துகொண்டிருந்தது. ஔவைக் கிழவிபோன்ற ஒரு மூதாட்டி கம்பீர நடைபோட்டு, கையிலேகொடி ஏந்தி, பிறைபோல வளைந்த கூனல் எப்படிநிமிர்ந்தது எனப்பார்ப்போர் ஆச்சரியப்படும்படி அந்த அணி வகுப்புக்குத் தலைமை வகித்துச் சென்றாள். நீண்டு உயர்ந்த—சேரன் செங்குட்டுவனே வந்துவிட்டான் என அதிசயிக்கத்தக்க அளவுக்கு வாட்டசாட்டமான ஒரு மனிதர்—அஞ்சாநெஞ்சர்—படையின் தளபதியாக வீரநடை போட்டார். அந்தப் புலிநிகர்மாந்தர்களின் ஒலிமுழக்கம் கமலாவை வீறுகொள்ளச்செய்தது.

திருமணத்தன்று "காதலிலே கவிதையிலே களம்போகும் பேச்சு, கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு" என்று தலைவத சொன்ன கவிதை நினைவுக்கு வந்தது. நினைவு அலைகளிலே சுழன்றுகொண்டிருந்த அந்த ஏந்திழையை ஒரு குரல் திடுக்கிட வைத்தது. "தமிழ் வாழ்க!" தென்றல் நடையிலே! "இந்தி ஒழிக" புயல் நடையிலே! இரண்டு நடையிலும் கிளம்பிய ஒலி கந்தனுடையதுதான். கமலா வெளியே ஓடிவந்தாள். கந்தன் கையிலே கொடியேந்தியவாறு ஆவேசமுடன் அந்தப்பட்டாளத்தில் பவனி வந்தான். கமலா கூட்டத்துக்குள் ஓடினாள். கந்தனைப் பிடித்து நிறுத்தினாள். கந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஐயோ கூட்டத்திலேயுள்ள கொள்கை வீரர்கள் தன்னைப்பற்றித் தவறாக நினைக்க, கமலா இடமளித்துவிடுவாளோ என்று கலங்கினான். கமலா ஆத்திரத்தோடு கேட்டாள்;

"இந்தி எதிர்ப்புக்கு உங்களை யார் போகச் சோன்னது!"

இதைக் கேட்டு கந்தன் விழித்தான். ஆனால் கமலா வார்த்தையை முடிக்கவில்லை...... இப்போதுதான் முடித்தாள்; "என்னை விட்டுவிட்டு" என்று.

"இந்தி எதிர்ப்புக்கு உங்களையார் போகச் சொன்னது; என்னை விட்டுவிட்டு!" என்ற மொழி கேட்டதும் மூதாட்டி, ஓடிவந்து கமலாவை அணைத்துக்கொண்டாள். மீண்டும் தமிழ்முழக்கம் தொடர்ந்தது. ஊர்வலம் அந்த வீதியைத் தாண்டியது. போலீசார் பாய்ந்தனர், புள்ளிமான் கூட்டத்திலே புலியென! வேட்டுச் சப்தம், வேதனைஒலி. 'தமிழ்வாழ்க' என்ற போர்முரசம். அத்தனை பேரையும் சிறைச்சாலைக்கு "வாருங்கள்" என வரவேற்றது அதிகாரத் திமிர்.

கமலாவும் கந்தனும் சிறைச்சாலையிலே "கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு" என்பதை மோகனத்திலே முணு முணுத்துக் கொண்டிருந்தனர்.

அடக்குமுறை தர்பார் துவண்டது. இந்தி வெறியர்கள் 'இனிப் பலிக்காது நம் முயற்சி' என மிரண்டனர். கட்டாய இந்தி, கடையைக்-

கட்டினாள். தமிழர் படைவென்றது. வீரர் உலாப் பாடினர். வீழ்ந்தாள் கள்ளி. கட்டாய இந்தி, கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று! வென்றது மொழிப் போர்.

*

கமலாவும் கந்தனும் தமிழ் காத்த தடந் தோள்களிலே வெற்றிமாலை சூடி, வீட்டுக்குத் திரும்பினர். "வீண் வேலையில் ஈடுபட்டாய். இனி வேலை கிடையாது உனக்கு" என்ற ஆபீஸ் உத்தரவும் அவனுக்கு முன் வீட்டுக்கு வந்திருந்தது. தாயாரோ புகையும் எரிமலையாக இருந்தாள்.

"அம்மா உனக்கு ஒரு கேடு என்றால் துள்ளி யெழமாட்டேனா நான்! அது போலத்தான் தாயே, தாய் மொழியைப் பழித்தவரை எதிர்த்தேன்; இதுகுற்றமா அம்மா" என்று அழுதான் கந்தன். மகனை விட மருமகள்மீது அதிக ஆத்திரம் அந்த மாதாவுக்கு.

*

வேலையற்ற நிலை. வேலை கிடைக்காத நிலை. வேதனை வாழ்வு. வேலையில்லாத கந்தன் இயக்க வேலையிலேயே முழுநேரமும் ஈடுபட்டான். அந்த ஊர் செயலாளர் அவன்தான். கந்தனைத் தெரியாதார் யாருமில்லை. அவன் புகழ் வளர்ந்தது. ஊரிலே இயக்க சார்பிலே ஒரு பொதுக் கூட்டம். எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டான். சொற்பொழிவாளருக்கு வழிச் செலவுக்கு இருபது ரூபாய் அனுப்பியாகவேண்டும்.

பணம் வசூல் ஆகவில்லை. கூட்டம் நின்றுவிடக் கூடாதேயென்று துடித்தான். வீட்டிலே நிம்மதியின்றி அலைந்தான். சிறைச் சாலையிலே கமலாவுக்கு சரியான உணவும் பாதுகாப்புமின்றி உடல் நலம் கெட்டது. அது ஏழ்மையின்காரணமாகத் தொடர்ந்தது. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தை வாங்கித் தரப் பணமில்லை. வீட்டிலிருந்த வெள்ளிச் சாமான்களையும் விற்றுச் சாப்பிட்டாகி விட்டது. சந்தனக் கிண்ணம் ஒன்றுதான் பாக்கி வெள்ளியிலே! அதை விற்றுவது மருந்து வாங்கிக்கொடேன் என்றாள் தாயார். அவனுக்கு அதை விற்க மனம் வரவில்லை. மனைவியின் தோழியல்லவா அந்த சந்தனக்கிண்ணம், ... மறந்துவிட்டான். இப்போது சொற்பொழிவாளருக்கு அனுப்பப் பணம் இல்லையென்றதும் அவன் விழிகள் அந்தக் கிண்ணத்தைத் தேடின. நோயுற்றிருந்த கமலா தூங்கிக்கொண்டிருந்தாள். கைகள் நடுங்க, கந்தன் சந்தனக்கிண்ணத்தை எடுத்தான். அடகு வைத்துப் பெற்ற பணத்தைச் சொற்பொழிவாளருக்கு அனுப்பினான்.

*

கூட்டம் குறிப்பிட்டபடி ஏற்பாடாகியது. புகை வண்டி நிலையத்துக்கு கந்தன் புறப்பட்டான் சொற்பொழிவாளரை வரவேற்க! அப்போது அவன்தாய் கமலாவைத் திட்டிக் கொண்டிருந்தாள். கூர்ந்து கவனித்தாள். சந்தனக்கிண்ணத்தை கமலா தொலைத்து விட்டாள் என்பதுதான் தாயின் குற்றச்சாட்டு. காய்ச்சலோடு கஷ்டபபட்டுக்கொண்டிருக்கும் கமலா, எதுவும் பேசாமல அழுது கொண்டிருந்தாள். தன் அருமை விஜயா காணாமற் போய் விட்டதை நினைத்துக் கண்ணீர் விட்டாள். தன் கண்களைத் துடைத்துக் கொண்டு கந்தன் புகைவண்டி நிலையத்திற்கு ஓடினான். புகைவண்டி வந்தது, ஆனால் கூட்டத்திற்கு வரவேண்டிய சொற்பொழிவாளர் வரவில்லை. அசையாமல் அப்படியே நின்று கந்தன் விம்மி விம்மி அழுது விட்டான். தன்னுடைய வீட்டுக் காரியத்திற்கு ஒருவர் வருவதாயிருந்து வராமல் போனாலும் பரவாயில்லை, பொதுக்காரியம் — பொது மக்களிடம் பணம் வசூல் செய்து பொதுமக்களை எப்படி ஏமாற்றுவது என ஏங்கினான். மேடைக்கு வந்து மக்களிடம் மன்னிப்புக்கேட்டுக்கொண்டான். மக்கள் முணுமுணுத்தபடி கலைந்தனர்.

*

வீட்டுக்கு வந்தான். கமலாவுக்கு காய்ச்சல் அதிகமாகிவிட்டது. கண்களிலே ஒளி குறைந்துவிட்டது. தாயார் பக்கத்திலே அமர்ந்து அழுதுகொண்டிருந்தாள். கந்தன் ஓடிவந்து "கமலா! கமலா!" என்று அலறினான்.

அவள் மெல்ல வாய் திறந்தாள். "அத்தான் அந்த சந்தனக் கிண்ணம்" என்று இதழசைத்தாள்.

"கமலா அதை நான்தான் திருப்பி அடகு வைத்திருக்கிறேன்—பணம் வந்ததும் மீட்டு விடலாம்" என்று கதறினான். அவன் கதறலிடையே கமலா கண்ணை மூடினாள். பிறகு திறக்கவேயில்லை, கந்தன் அழுதான்; அழுதுகொண்டேயிருந்தான்.

*

இப்போது கந்தன் ஏழையல்ல. பணக்காரனில்லாவிட்டாலும்பண வசதி இருக்கிறது.

இருபது ரூபாய்க்கு அடகு வைத்த சந்தனக் கிண்ணத்தை வட்டியோடு முப்பது ரூபாய் கொடுத்தால் மீட்டுவிடலாம்.

ஆனால்,

அதைமீட்டு யாரிடம் கொடுப்பது. கமலாவா இருக்கிறாள் அவளிடம் கொடுக்க. அவளைத்தான் இந்தி வெறியர்களின் சிறைச்சாலை கொஞ்சம் கொஞ்சமாக விடுதலைக்குப்பிறகும் விடாமல் கொன்று விட்டதே!-

கந்தன் சந்தனக் கிண்ணத்தை மீட்டுவிடத் தயாராயிருக்கிறான் எப்போது? திராவிடநாடுகிடைத்ததும் அந்த விடுதலைப்போரின் வெற்றி விழாவிலே, வீரர்களுக்கு சந்தனம் வழங்கும் சந்தர்ப்பம் வருமே; அப்போது!

---

## கடவுள் பூமியில்!

மும் மூர்த்திகள் முப்பத்து முக்கோடி தேவர்கள், மடாலயங்கள், மாதம் பல திருவிழாக்கள், சரசுவதி பூஜை, லட்சுமி பணத்துக்கு கடவுள், இவ்விதம் இருக்கிறது இங்கு. இந்த அளவுக்குக்கடவுள் பட்டியல் இல்லாத தேசம், அமெரிக்கா. அங்கும் இங்கும் உள்ள நிலைமையை ஒப்பிட்டுப் பாருங்கள். 4 பேருக்கு ஒருவர்வீதம், சொந்தத்தில் கார் உண்டு — அமெரிக்காவில். 5000 பேரில் ஒருவருக்கே, கார் இருக்கிறது—இந்தியாவில்.

சராசரி அமெரிக்கனின்வயது 60.

சராசரி இந்தியனின வயது 26.

2 பேரில் ஒருத்தருக்குச் சொந்தத்தில் ரேடியோ உண்டு.

1500 பேரில் ஒருவருக்கே, இந்திய பூமியில், ரேடியோ வைத்துக் கொள்ளும் 'பாக்யம்' உண்டு.

இங்குள்ள ஒருவரின் சம்பாத்தியத்தைவிட, 30 மடங்கு அதிகமாக, சராசரி அமெரிக்கன் சம்பாதிக்கிறான்.

# புதுவழி போனால்…………………

“கட்டுரை, தீட்டிவிட்டீர்களா?”

“இரவு முழுவதும் அதுதான் வேலை! இந்தா படித்துப் பார்”

ஆவலோடு கேட்டான், நண்பன். ஆசிரியன், கத்தை கத்தையாகக் காகிதங்களைத் தருகிறான். படிக்கிறான் — பரவசமடைகிறான். ஆனந்தம் அவன் கண்களில்; ஆவலோடு சொல்கிறான்.

“அருமை நண்பா! வெகுஅருமை! சரியான சாட்டையடி தந்துவிட்டாய். சமுக்குமதியினருக்கு நல்லதோர் விளக்கம். அனுப்பு, உடனே பத்திரிக்கைக்கு அனுப்பிவிடு……”

ஆசிரியன் கண்களில், பெருமிதம் ஒளிவிடுகிறது. அவனது எழுத்துக்கள், தோழனின், பாராட்டைப் பெற்றுவிட்டன! தோழனும் சாமான்யனா? சிறந்த அறிஞன்! அவன், பாராட்டிவிட்டான். அது தானே சிறந்த பேறு! இந்த எண்ணங்களில் மிதக்கும், அவன் இதயத்தில், உடனே சஞ்சலம் ஏற்படுகிறது.

பையைத் தடவுகிறான் — பரிதாபத்தோடு பார்க்கிறான் நண்பனை.

“என்ன நண்பா பார்க்கிறாய்?”

“கட்டுரையை எழுதிவிட்டேன்— பத்திரிகைக்கு அனுப்பவேண்டும். ஆனால்………?”

“ஆனால்! என்ன?”

“தபால்செலவுக்குக் காசில்லையே………”

நண்பன் அறிஞனைபொழிய அவனுடைய நிலையும் எழுத்தாளனுடையது போன்றதுதான். அறிவுக்கும், செல்வத்துக்கும் சம்பந்தம் இருப்பதில்லையே! அவனும்,திகைக்கிறான். கட்டுரையோ, அருமையானது. பத்திரிகையில் வெளியானால் தான் பலர் படித்து விளக்கம் பெறுவர். அவனோ எதிர்ப்புக்கிடையில் உலவும் ஏழை! எதிர்ப்பைச் சமாளிக்க அவனுக்கிருந்த ஒரே ஆயுதம் — அந்தப் பத்திரிகைதான். அதுவோ ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்தது. அங்குபோய் பிரசுரமாகவேண்டும். அனுப்பவோ தபால் செலவுக்குக் காசில்லை!

நண்பர்களிருவரும் தபால்செலவுக்குக் காசுதேட, யோசனைகள் செய்தனர். எழுத்தாளனின் ‘கோட்’மீது, நண்பனுக்கு பார்வை விழுந்தது. அந்தக் கோட்டை பழையவிலைக்கு விற்று, அந்தக்கட்டுரையை அனுப்ப தபால்செலவைச் சம்பாதித்தனர்!

*

“ஐயோ, செல்வா! தங்கச்சிலையென கொஞ்சி மகிழ்ந்தேனடா, போய்விட்டாயே………” என்று, புலம்புகிறாள், பெற்ற அன்னை. மழலையால் மகிழ்வித்த சிறு குழந்தை, செத்துக்கிடக்கும்காட்சி அந்த மனிதனை, துடிக்கச் செய்கிறது. அவன் சாதாரணமானவனா? அல்ல! அல்ல!! உலகமே, அவனைப் பற்றி, பேசுமளவுக்கு வளர்ந்திருப்பவன். மேதை! குழந்தையைப் பார்க்கப் பார்க்க குமுறுகிறாள். இறந்த குழந்தையை வைததுக் கொண்டு எவ்வளவு நேரம்தான் இருப்பது? அண்டையிலிருப்போர் ‘அடக்கம் செய்ய’ துரிதப்படுத்துகின்றனர். அவனோ, மனைவியையும் இறந்த குழந்தையையும் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறான். இறந்த குழந்தையைத்தவிர நான்கு குழந்தைகள் அவனுக்கு! அவையெல்லாம், காலைக்கட்டிக்கொண்டு கதறுகின்றன. அப்பா, அம்மாவின் கண்ணீரைக் கண்டு ஏற்பட்ட கலக்கம்! அதோடு பசி, வேறு!! பதைக்கின்றன. பரிதாப நிலையில் தவிக்கும் அந்த மேதையிடம், ‘சவப் பெட்டி வாங்கி வரவா?’ என்று, பக்கத்திலிருப்போர் கேட்கின்றனர். துயரத்தில் மிதக்கும் அவனுக்கு அப்போதுதான் நினைவுக்கு வருகிறது! சவப்பெட்டி வேண்டும் என்பது!

இறந்த குழந்தையின் சவத்தைக் கொண்டு செல்ல சவப் பெட்டி தேவை! ஆனால், அதற்குக் காசு? கலங்குகிறான். பக்கத்திலிருக்கும் நண்பனைப் பார்க்கிறான். இரண்டு பவுன் இருந்தால் போதும். ஆனால். இந்த சாதாரணத் தொகையும் அவனிடமில்லை. கலங்குகிறான்.

வீட்டிலே பிணம்! அவனோ வீதியிலே நடைப்பிணம் போல உலவுகிறான்!! நண்பர்களிடம் சென்று, ‘ஏதாவது உளதா?’ என்று காசு கேட்கிறான்!!!

*

கார்ல் மார்க்ஸ்—இன்று உலகம், வியந்து பாராட்டும் மேதை. அவர் தந்துவிட்டுப் போன, எழுத்துக்கள், இன்று கோடிக் கணக்கான மக்களால் வியந்து பாராட்டப்படுகின்றன. அவர் சந்தித்த வாழ்க்கைச் சம்பவங்கள் இவை. உலக மேதை — ஒரு கட்டுரை அனுப்பவும், சவப்பெட்டிக்காகவும், திகைத்துப் போய் தவித்திருக்கிறார். மார்க்சும் அந்தப் பெருந்தகையின் தோழன் எங்கெல்சும், ‘நியுயார்க் டிரிபியூன்’ சஞ்சிகைக்கு, கட்டுரைகள் அனுப்ப, தபால் செலவுக்காக அலைந்த நிகழ்ச்சிகள் அநேகம் உண்டாம்! மார்க்சின் வாழ்க்கை, அன்றாடம் காய்ச்சியின் வாழ்க்கையை விட மிக மிகக் கேவலமானது. அந்த மாவீரனின் மனைவி, கண்ணீர் சிந்தாத நாள் கிடையாது! இவ்வளவு வேதனைகளோடு, வாழ்க்கையைக் கழிக்க வேண்டியவனா, அவன்? அல்ல! அல்ல!! போக போக்கியங்களோடு வாழ்ந்திருக்கலாம் — தந்தையின் சொற்படி கேட்டு, உத்யோகத்துக்குப் போயிருந்தால். உலகம் ஒரு மேதையை இழந்திருக்கும்! வசதியிருந்தும், தனது குடும்பத்தை விட, உலகத்தையே நோக்கினான். சிந்தித்தான். எழுதினான். புதுவழி தந்தான். பெயர் பெற்றான்! இவ்விதம்பெயர் பெற்றோரின் பட்டியலைப் பார்த்தால், ஒவ்வொருவரும் தத்தமது வாழ்க்கையில் பட்டிருக்கும் பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. தடியடி! துப்பாக்கி! தூக்கு மேடை! இவைகளோடு, வாழ்க்கையிலும், பரிதாபத்தைச் சுமந்துதான் காலத்தை ஓட்டியிருக்கிறார்கள். இந்தத் தியாகிகள், கொண்டிருந்த ஆர்வம்தான் நமக்குப் புதுவழி தந்தது! புதுவழி காணச் சென்றதால் தான் அவர்கள், இத்தகைய இன்னல்களுக்கெல்லாம் ஆளானார்கள்!!

★

# ஏன் பிறந்தோம்!

[சி. பி. சிற்றரசு]

உம்—என்று ஒரு பெரு மூச்சு யாரையும் நிமிர்ந்து பார்க்க முடியாத நிலை. ஒரு காலத்தில் தன்னை நெருங்க அஞ்சியோடிய பகைவர்க்குத் தன் கையாலேயே விருந்துபசாரம் செய்ய வேண்டுமென்று பணித்திருக்கின்றான் மன்னன். இதைவிட என் வீரம் சாகா முன்னம் என் உடைவாளை எதிரியிடம் கொடுக்கும்படி செய்து அவன் கை ஓங்கிய வாளின்கீழ் என் கழுத்தை வணங்கச் செய்திருக்கலாம். சிறுநரிக்கு குற்றவேல் செய் என்று சிங்கத்தைப் பணிக்கிறது யானை, 'மறக்கள வேள்வி செய்தீர், மாநிலமெல்லாம் உங்கள் புகழ் ஓங்கி நிற்கிறது. அறக்கள வேள்வி செய்யுங்கள், அதனால் உங்கள் புகழ் அவ்வுலகமெல்லாம் பரவும்' என்றான் மாடலன் மறையோன். மதி மயங்கி விட்டான் எதிரியின் வாயால் புகழென்ற வார்த்தையைக் கேட்ட புரவலன்—மானம் போய்விட்டது. இந்தச் சகிக்க முடியாத அவமானத்தைத் தான் கேட்டுக்கொண்டு நடைபிணமாய் நடமாடுவதா, ஐயோ காலமே! 'ஏன் பிறந்தோம்' என்று துயரடைந்தான் வில்லவன் கோதை அன்றோர் நாள்.

"மொகலாய முடிமன்னன் பெற்ற அரசுகள் நாம் சிந்திய ரத்தத்தால், நமது சிந்தனையால், ஒரு இந்து பணியாவின் உயிரைப் பலி கொடுத்து அவன் கல்லறை மேல் மொகலாய சாம்ராஜ்யக் கோட்டையை எழுப்பினேன். அக்பர் என்ற அவனுடைய பெயருக்கேற்றபடி அவன் ஆட்சியின் நறுமணத்தை அகிலமெலாம் வீசச் செய்தேன். சில நேரங்களில் நானே அக்பர் பாதுஷா என்று நினைக்காவிட்டாலும் மக்கள் நினைந்தனர். நானில்லையெனில் அக்பர் இல்லையென்று அக்பரே நினைக்காவிட்டாலும் எம்மை எதிர்க்கச் சக்தியற்றுக் குருதி கொட்டி மாண்ட வீரர்களின் மரண கீதமாக இருந்தது.

டில்லி பாதுஷாக்களின் பாதுஷாவாக அக்பரையாக்கியது நான். மங்கோலிய சாம்ராஜ்யத்தை நிறுவிய யாசானுங்கிஸ்கான் கால முதல் மொகல் மன்னர்களிலேயே சமரச வேந்தன் என்று பெயரெடுத்த அக்பர் காலம் வரையிலும் வீரத்தால் வெற்றி காணாத மன்னர்களே இல்லையென்று இஸ்லாம் தன் ஆசியைக் கூறிக்கொண்டிருக்கும்போது, அந்த இஸ்லாத்துக்கு விரோதமாக, 'தீனே இலாஹி' என்ற புது மதத்தை யுண்டாக்கிய போதும் மன்னன் மனம் போல் நடக்கட்டும் என்று வாளா இருந்துவிட்டேன். அவனடைந்த வெற்றி, அவனால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் அவ்வளவிலும் என் கை பட்டேயிருக்கும். அவன் மேன்மையடைய நான் இரவு பகலாகப்பட்ட துன்பத்துக்குப் பரிசாக நான் நாடு கடத்தப்பட்டிருக்கிறேன். அரசனுக்கு வேலை செய்தது போதும், இனி ஆண்டவனுக்காகிலும் பணி செய்யலாம் என்று மெக்கா நோக்கி நடந்துகொண்டிருந்தபோது சூழ்ச்சிக்காரர்களால் குத்திச் சாய்க்கப்பட்டுக் குருதி வெள்ளத்தோடு வெள்ளமாய்; 'ஏன் பிறந்தோம்' என்று சொல்லிக்கொண்டே செத்தான் பரிதாபத்துக்குரிய பைராம்கான்.

"அவன் என் கண்ணொளி அவனுக்கே என் அரசுரிமை. அவனை அறிஞனாக்குவேன். வீரனாக்குவேன், விவேகியாக்குவேன், அகலமான நெற்றி, பல கருத்துக்கள் தோன்றத் தக்கதான பருத்த தலை. எல்லாம் என் சாயல், என் கலி தீர்க்க வந்த என் கண்மணி, நான் பெற்ற செல்வம், என்றெல்லாம் உளம் வீங்கப் பேசினான், பெருமகிழ்வு கொண்டான். மகன் முன்னேக்கி நடப்பதைப் பின்னேக்கிப் பெருமைப்பட்ட தந்தை. ஆனால் மகன் வயதடைந்ததும் அவசரப்பட்டான். மணிமுடியைப் பறித்துக்கொண்டு தந்தையைச் சிறையிட்டான். சிறையிலே தந்தை, சிம்மாசனத்திலே மகன். வேந்தன் வாடுகிறான். அவன் பெற்றெடுத்த வீணன் விலைமாதர் முன் கூத்தாடுகிறான். தந்தைக்குப் பிறகு தான் தான் தரணிக்குடையவன் என்ற பொறுமையை இழந்து தன்னைப் பெற்றவன் கைகளில தன் கைகளாலேயே விலங்கிட்டு வெஞ்சிறையில் தள்ளிவிட்டான். விடுதலையடைந்தால் வெஞ் சமருக்கழைப்பானே என்று பயந்தான் மகன். ஆகவே உணவளிக்காமலே கொன்றுவிட உத்தேசித்துவிட்டான் உன்மத்தன்.

தான் வளரத் தன் தந்தையின் கையால் சோறுண்ட கிராதகன் தன் தந்தைக்கு உணவளிக்காதே என்று கட்டளையிட்டு விட்டான். பல நாட்கள் பட்டினியால் வாடுகிறான். தாய் கெஞ்சினாள், நெஞ்சம் தளரவில்லை மாபாதகன் அஜாதசத்ரு. பட்டினியிருந்து பழக்கமில்லாத அரசன், இருட்சிறையில் இவ்வஞ்சக உலகத்தில், 'ஏன் பிறந்தோம்' என்று சொல்லிக்கொண்டே சிறைக் கம்பிகளின்மேல் சாய்ந்துவிட்டான் மகதவேந்தன் பிம்பிசாரன்.

கையிலே மதுக் கோப்பை. காரிருளை ஓட்டி விட்டேன் என்று சொல்ல கவிஞன் முன்வந்து நிற்கிறது மதி. காற்றசைந்தபக்கம் ஓடுகிறது ஓடம். மதியின் சாயலை நீரில் கண்டான் காவியப்புலவன். சந்திரனா அல்லது அதன் சாயலா எனத் தெரிந்துக்கொள்ள முடியாத அளவுக்குப் போதை. 'மதியே நீயும் வா மது அருந்துவோம்' என மதுக் கோப்பையோடு நீரில் சாய்ந்தான். கவிஞனைத்தாங்க முடியாமல் ஓடமும் சாய்ந்தது. நீரில் பல முறை மூழ்கினான். கரை சேரமுடியவில்லை. கவியின் மூலம் உலகுக்கே பெரும் போதையை அளித்த நாம் ஏன் இந்த அற்ப போதையிலீடுபட்டோம் என்ற ஆத்திரத்தால் அலைகளைத் தன் கைகளால் அடிக்கின்றான். மூச்சுத் திணறுகிறது. அனைவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கின்றனர். செத்துக்கொண்டிருக்கும் கவிஞன் பாடிய சாகாக் கவிதைகளைப் பாடிப் பரவசப்பட்டுக்

கொண்டிருக்கின்றனர். ஆனால், அது வானமளாவி நிற்கும் உப்பரிக்கையில். இந்த மாகவிஞன் வாவியில்! இப்பழி தாங்க, 'ஏன் பிறந்தோம்' என்று சொல்லிக்கொண்டே நீரின் அடிவாரத்தில் சேர்ந்து சிறிது நேரத்தில் பிணமாய் மேலே வந்துவிட்டான் சீனப் பெருங்கவி லீபோ.

ஐந்து அடிக்கப்பாலிருப்பவர்கள் தெரியாது, அந்த அளவுக்குத்தான் நிலவொளி. உப்பரிக்கையில் உலவுகின்றான் மன்னன், பின்னால்காலடிச் சப்தம் கேட்கிறது. ஒருபெண், தன் மனைவியே போன்ற சாயல் இராணியே தான் என்று நினைத்தான். மற்றவளானால் தான் தனித்திருக்கும்போது தட்டில் பால் கோப்பை ஏந்தித் தன்னைத் தனியாகச் சந்திக்க வரமாட்டாள் பால்மட்டிலும் அந்த ஆண்பாலுக்கு வேண்டியிருந்தால் ஆளிடம் அனுப்பியிருக்கமாட்டாளா இராணி. தானே சென்றாளென்றால் சொல்ல வேண்டியதில்லை. பாலருந்தவும், காமப்பாலருந்தவும், கையை நீட்டினான். முதலில் கோப்பையைக் கொடுத்தாள், குடிக்கத் தலை நிமிர்ந்தன. கொடுவாள் ஒன்று கழுத்தில்பாய்ந்தது—கொன்றுவிட்டாள். இராணியைப்போல் வேடந்தரித்துவந்த தேவிகா என்ற பார்ப்பனப் பெண். இவ்வளவு சூட்சிகளைத் தெரிந்து கொள்ளாமல், ஏன் மன்னனாக வாழ்ந்தோம், இவ்வளவு மௌடீகமாக நாம் ஏன் பிறந்தோம் என்று சொல்லிக்கொண்டே கொட்டிய உதிரவெள்ளத்தில் வீழ்ந்து மடிந்தான் சுங்க மன்னன் புஷ்யமித்திரன்.

தோழர்கள் தூற்றுகின்றனர் உற்றார் வேல்போன்ற பழிச்சொல்லால் விலாவில் குத்துகின்றனர். கிரிமினல் கைதி கொலைக்காரன் போல்வெளியேபோக அஞ்சி அஞ்சி நடமாடவேண்டியநிலை. வசைமாரிக்கிடையே சோகக் குடையேந்திச் சொல்லம்புக்குத் தப்பித் தப்பிப் போய்க்கொண்டிருந்த பரிதாபக் காட்சி. காதுகளுக்கு கேட்கும் சக்தி இருக்கிறதோ என்று கவலைப்பட்டநேரம். எல்லாரும் தூங்கிய பின்தோழர்களைச் சந்திக்கச் சந்துகளில்விழுந்தோடிய விந்தை. யாரோ ரத்தபாசத்தில் கலந்தவர்களுக்கு ஏற்பட்ட அவமானத்தில் நமக்கு வந்த பங்கைத்தாங்கி, தொங்கிய முகத்தோடு மூலையில் உட்கார்ந்த கொடுமை, சவம்சுடலைக்குப் போன பின் வீட்டில் நிலவும் மௌனம் போன்ற அமைதி கைப்பொருளிழந்தால், கண்ணியத்தை மற்றவர் கைப்பற்றிக்கொண்டால், அபாண்டமானபழி சுமத்தப்பட்டுப்பலிபீடத்தில் நிறுத்தப்பட்டிருந்தால் இவைகளுக்கு மேலாக எந்த அபாயம் நேர்ந்திருந்தாலும் கலங்காத உள்ளம் படைத்த காளைகள், தந்தையின் கண்டிப்பை, அண்ணனின் அதட்டலை, தாயின் பரிதாபக்குரலை, ஆசான் அறவுரையை எல்லாம் பொருட்படுத்தாது களம் குதித்த இளைஞர்கள், கிடைத்தற்கரிய பொக்கிஷமான கொள்கையின் காவலர்கள் தாம் தானென்ற பெருமையால் உளம் பூரித்து தோள்கள் விம்மி நாட்டுப் பாதுகாவலர்கள் ஈட்டிக்குத் தங்கள் சதையை இரத்தத்தைவிருந்தளித்த வீரர்கள், சொத்துரிமையை இழந்தவர்கள், தனக்குச் சேரவேண்டிய விகிதாசார குடும்ப சொத்தை வேண்டாமென எழுதிக் கொடுத்துவிட்டு வெளியேவந்து கொள்கைக் குண்டத்தில் குதித்தவர்கள், தி. மு. கழகத்தினர்.

நமது எதிர்காலத்தை ஒளிமயமாக்கவேண்டும்! எண்ணெயுண்டு, திரியுண்டு கொளுத்தத் தீயுமுண்டு, அகல் இல்லை. அது நமக்குத் தேவையுமில்லை கற்பாறையில் குழி தோண்டி அதில் விளக்கேற்றுவோம் மேலும் அந்தக் கற்குழிமண் அகலைப்போல் எண்ணெயைக் குடிக்காது. பெரிய பொறுப்பு நம்மேல் விழுந்திருக்கிறது. எனவே, ஏன் பிறந்தோம்என்ற கேள்விக்குக் கொள்கையை நிலைநாட்ட, குள்ள மதியினரை ஓட்ட, அரசியல் வாண வேடிக்கையை நிறுத்தி, அதிர்வெடிகளைச் சமாளிக்க, திராவிடத்தைப் பிரிக்கத்தான் பிறந்தோம் என்ற உண்மையைநமக்கு உறுதியாக்கிய நாள் செப்டம்பர் 17-ம் நாள். இனி ஏன் பிறந்தோம் என்பதல்ல நமது கேள்வி. என்ன செய்வோம் என்பதுதான்.

★

# மார்க்ஸ் ★ ★ பேசுகிறார்!

[பாண்டியன்]

---

கம்யூனிசக் கோட்பாடுகளின் தந்தையாம் பேரறிஞர் கார்ல் மார்க்ஸ், இந்திய பூமியில், மதம் உருவானது சம்பந்தமாக, கூறியிருக்கும் சிலதகவல்களைத் தந்துள்ளோம். ஆரிய மதம், பார்ப்பனர்களின் கிருஷ்டியென்று நாம்சொன்னால், சீறிடும் தோழர்களும் உள்ளார்கள்! 'பேதத்தை உண்டாக்கலாமா?' என்று, கோபத்தோடு பேசுகிறார்கள். அவர்களுக்கு இது! மார்க்ஸும், சொல்லியிருக்கிறார். British Rule in India என்ற கட்டுரையில்:—

"ஆதிகாலத்துசகுச் சென்று ஆராய்ந்தால், நம்பமுடியாத கட்டுக்கதைகள் மூலம், இந்தியாவில் தொல்லைகளை 'துவக்கி' வைத்தவர்கள் பார்ப்பனர்கள் தான். உலகில் கிருஸ்துவ சகாப்தம், உதயமாவதற்கு முன்பே, இந்தக் காரியங்களைச் செய்தார்கள், அவர்கள்"

*

"கிராமங்களில்உண்டாக்கப்பட்ட சிறு சிறு வகுப்புகள், ஜாதிப் பிரிவினைகளாலும் உயர்வு தாழ்வுப் பிரிவினைகளாலும் அடிமைப் படுத்தப்பட்டன. இந்தப் பேதங்கள் மனிதனை வெளியிலிருக்கும் நிலைமைகளுக்கு அடிமையாக்கின. சூழ்நிலைகளை ஆட்டிப்படைக்க வேண்டியவன் அவைகளுக்கு அடிபணிய நேர்ந்தது. இதனால், தன்னை வளர்த்துக் கொள்ளவேண்டிய சமுதாயம், மாறாத நிலைக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது. இதனால், மிருகங்களை, வணங்க வேண்டியவனானான். இயற்கையைக் கட்டியாளவேண்டிய மனிதன், குரங்கை ஹனுமான் என்றும், பசுவை—சப்பலா என்றும் நம்பிக் கொண்டு அடிபணிந்து கும்பிடலானான்."

# திருவிட நாடு

[உடுமலை நாராயண கவி]

★

மொழிமேலே விழிவைத்தே
முடிமன்ன ராண்டதமிழ் நாடு—வட
மொழியான ஆரியத்தால்
அழியாத கலைவாழும் தமிழ்நாடு (மொழி)

மழைதனை அன்போடு மகிழ்ந்தே கொண்டாடும்
உழவோரால் உயர்வான வளநாடு
புலியுடன் ஆடும் இரைதேடும்
புனலாடும் எழில்நீடும் புலவர்தம்நாடு (மொழி)

தன்
மானங்காத்த மறக்குடியார் சொந்தநாடு
தினம்
மாற்றாரை வாழவைக்கும் அன்புநாடு
அபி
மான மலையாளந் துளு கன்னடம் தெலுங்கு
மரபோடு, உறவாடும் தமிழ்நாடு (மொழி)

மருமலை மீதினிலே விற்கொடுகாட்டி—கனக
விஜயன்தன்னை வென்றசேர வீரன்நாடு
ீர்பெருகும் சிலம்பணிந்த கண்ணகிபோல்
திருக்கோயில் சிலையமைத்த செந்தமிழ்நாடு

செந்தமிழ்நாடு—நல்ல
திருவிடநாடு—
எந்தையர்நாடு—இதற்
கேதினி ஈடு

# பஞ்சாயத்துகள்

ப. உ. சண்முகம்

'ராஜா' மந்திரி சபை திருத்திய பஞ்சாயத்துச் சட்டங்களை 'ராஜாஜி' மந்திரி சபை அமுலுக்குக் கொண்டுவர மறுத்திருக்கிறது. கவர்னர் பிரகாசா இதை ஆமோதித்திருக்கிறார். சென்ற சட்ட சபையில் நிறைவேறி, முந்திய கவர்னர் 'பவநகரால்' அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தை, அமுல் நடத்தாதுவிட, இப்போதைய மந்திரி சபைக்கோ அல்லது புதிய கவர்னருக்கோ என்ன 'அதிகாரம்' இருக்கிறது. என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு சட்ட சபை நிறைவேற்றிய பஞ்சாயத்து சட்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வராமலேயே அது தவறானது என்று தள்ளிப்போடுவது நிறைவேற்றிய சட்ட சபையையும், சட்டத்தை அங்கீகரித்த கவர்னரையும், கவர்னரின் அங்கீகாரத்தை ஆமோதித்த அப்போதைய குடியரசுத்தலைவரையும், 'அவமதிப்பதாகாதா?' என்று நானும் உங்களைப் போல்தான் சந்தேகிக்கிறேன். இருந்தாலும் எத்தனையோ தாறுமாறான செய்கைகளைச் செய்துவரும் காங்கிரஸ் ஆட்சியில் இது சகஜம் என்று எண்ணித்தான் சமாதானம் அடையவேண்டி இருக்கிறது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் இந்தச் சட்டம் 1—4—51 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு விட்டதாகச் சென்ற ஆண்டு ஆரம்பத்திலேயே அரசாங்கம் அறிவித்ததேயாகும்!

ஆகவே எது காரணம் பற்றியோ இந்தச் சட்டத்தைப்பற்றி அரசாங்கம் ஆராயத் துவங்கியிருக்கிறது. இந்த சமயத்தில் நமது ஆலோசனையை அரசாங்கத்திற்குச் சொல்லிவிட ஆசைப்படுகிறோம்.

பஞ்சாயத்துக்கள்:— ஜனநாயகத்தின் படிக்கட்டுகள், அரசியலின் அரிச்சுவடியே இங்குதான் ஆரம்பமாகிறது. நாட்டுப் பற்று முதல் மக்களின் பொறுப்பு வரையில், மக்கட்கு கற்றுத் தரும் பாடசாலைகள், இவைகள்தான். உரிமையை உணர்த்தும் உலைக்கூடம், இதுதான். சுத்தம்சுகாதாரம் இவைகளை நாட்டுப்புற மக்களுக்குப் புகட்டவும் கிராமங்கள் முன்னேற்றமடையவும் பஞ்சாயத்துமுறை சிறந்த சாதனமாகும். கிராமத்திற்குத் தேவையானவைகளைத் தேடிக்கொள்ளவும் பெற்றவைகளைப் பொறுப்புடன் காக்கவும் கிராம மக்களுக்கு கொடுக்கப்படும் வாய்ப்புத்தான் பஞ்சாயத்துமுறை. பஞ்சாயத்து வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியாகும். ஆதலால் 'கிராமங்கள்தான் ஒரு நாட்டின்உயிர்நாடி, அவைகள்தான் ஒரு நாட்டின் முதுகெலும்புகள்' என்றெல்லாம் கூறிவந்த காந்தியாரின் சீடர்கள் பஞ்சாயத்துக்களைக் கொஞ்சம் அக்கரையுடன் கவனிக்க வேண்டுகிறோம்.

பொதுவாக பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டுமென்று அரசாங்கத்தை நடத்துபவர்கள் முதல் மற்றைய எல்லாக் கட்சி ஆட்களும் சொல்லி வருகிறார்கள். அப்படி அதிகாரங்கள் கொடுக்கப்படுவதன் நோக்கம் யாதெனில், நிர்வாக ஒழுங்கைக் கற்றுத் தருவதோடு ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பை ஊட்டுவதுமாகும். அதிகாரங்களை, பகைவர்களைப் பழி வாங்கும் ஆயுதமாகப் பயன்படுத்தவிடக் கூடாது. அதிகாரங்கள் ஒவ்வொருவரின் கடமையையும் வகுத்திடும் வேலியாக இருக்கவேண்டுமே யொழிய, மற்றவரின் உரிமையை மேயும் மாடாக அமையக் கூடாது. அதிகாரங்களைக்கொண்டு அமைதி நிலை பெறச் செய்யவேண்டுமே யொழிய, அராஜகத்தை வளரச் செய்யக் கூடாது. இப்படி அதிகாரங்களை வளரச் செய்யக் கூடாது. இப்படி அதிகாரங்களை கொடுக்கபடுவதன் மற்றொரு காரணம் அரசியலாரிடம் அடைந்துக் கிடக்கும் ஏராளமான அதிகாரங்களில் கொஞ்சம் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுப்பதன் மூலம் அரசாங்கம் தன் மீதிருக்கும் பொறுப்பில் கொஞ்சம் குறைத்துக் கொள்வதுமாகும். மேல் நாடுகளில் இது ஒரு காரணமாகக் கொண்டுள்ளார்கள். ஆனால், இங்கோ அதிகார வேட்டைகளில் இறங்கி இல்லாத அதிகாரங்களைப்புதியதாகஉற்பத்திசெய்து அதற்கென்று புது இலாக்கா ஏற்படுத்தலாமா என்று ஏக்கம் கொண்ட தியாகிகள் இருக்கையில், இருக்கிற அதிகாரத்தில் கொஞ்சம் இழப்பதென்றால் எப்படி இசைவார்கள்? அதிகாரங்கள் கொடுக்கப்படாது தீர்மானங்கள் நிறைவேற்றும் குழுவாகப் பஞ்சாயத்துக்களை வைப்பதைக்காட்டிலும், கிராம மக்களின் பொன்னான நேரத்தை பாழ் செய்யாதுபஞ்சாயத்துக்களைக் கலைத்துவிடலாம். சர்க்காரின் உத்தரவுகளை நிறைவேற்றுவதற்குப் பஞ்சாயத்துச் சபைகள் தேவையில்லை. நிர்வாக அதிகாரிகளே போதும். ஒருவேளை மந்திரிமார்களுக்கு வரவேற்புக் கொடுத்து வாழ்த்துச் சொல்லத்தான் பஞ்சாயத்து சபைகள் என்று 'கனம்கள்' கருதுமானால் நாம் ஆட்சேபிக்கவில்லை. பஞ்சாயத்துக்களின் நடவடிக்கைகளைக்கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசியலாருக்கு இருக்கக் கூடாதென்று நாம் சொல்லவில்லை. 'சவாரி செய்யும்போதுதான் குதிரையின் வாயில் கடிவாளம் போடவேண்டும்; கொள் தின்னும் போதும் போடுவதென்றால் முறையா? போட்டால் குதிரை வளராது. சீக்கிரத்தில் செத்துவிடும்.

அதிகாரம் கொடுத்தால் தவறான முறையில் சிலர் பிரயோகிக்கிறார்கள் என்பது நாம் அறிந்ததே. அதற்காக அதிகாரங்களைக் கொடுக்காமலிருக்கக்கூடாது. நெல்லுக்கு நீர் பாய்ச்சினால் புல்லுக்கும் பாய்கிறதே என்று சொல்லி, நீர் பாய்ச்சாதுபோனால், நெல் வளருவதெப்படி? தருணத்தில் புல்லைக் களைந்திடுவதுபோல், தவறான முறைகளில் அதிகாரம் செலுத்தப்படுமா

னுல், தடுப்பதற்கு வசதி வைத்துக் கொண்டுதான் அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும். (என் னென்னஎன்பதைப் பின்னுல்சொல் கிறேன்)

புதிய பஞ்சாயத்து முறைப்படி பஞ்சாயத்துத் தலைவரை, பஞ்சாயத்திலுள்ள வாக்காளர்கள் அனைவரும் சேர்ந்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடப்பதைப்போல. இதற்கு முன்பு பஞ்சாயத்து அங்கத்தினர்கள்தான் தலைவரைத்தேர்ந்தெடுத்தல்வேண்டும். இந்த முறை சரியான முறையன்று. ஏனெனில், இந்த முறைப்படி பதவிவேட்டைக்காரர்கள், பண பலத்தைக்கொண்டு அங்கத்தினர்களை விலைக்கு வாங்க வசதி யளிக்கிறது. இதனுல்தான் அங்கத்தினர் பதவியை ஒரு வியாபாரம் என்று கருதி, வீணர்கள் பஞ்சாயத்துகளில் நுழைகிருர்கள். இவர்களால் நிர்வாகம் பாதிக்கப்படுகிறது. ஏனெனில், தலைவராக வருபவர்கள், இத்தகைய 'நரிகளுக்கு' நேர்மையைச் சில சமயங்களில் பலியாக்கவேண்டிய நிலையிலும் வந்து விடுகிருர்கள்; இத்தகையோர்களின் விருப்பத்தை ஈடேற்ருவிட்டால் தலைவர்மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவருவதாக மிரட்டுவார்கள். இதற்குப் பயந்தாவது தலைவராக இருப்பவர், தன் மனச்சாட்சிக்கு விரோதமாகத் தவறுன காரியங்களைச்செய்யவேண்டியிருக்கிறது. ஆனுல், புதிய முறைப்படி தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமுமில்லை; அங்கத்தினர்கள் தயவும் தலைவருக்குத் தேவையில்லை. அங்கத்தினர் பதவியைக்கொண்டு வியாபாரம் செய்யமுடியாதென் பதை பணந்தேடிகள் தெரிந்து கொண்டால், அவர்கள் உள்ளே நுழையமாட்டார்கள். அங்கத்தினர்களை விலைக்கு வாங்கி, எவரும் தலைவராக வரமுடியாது. பொதுமக்கள் விரும்புகிறவர்தான் வர முடியும். ஆதலால், இந்தப் புதிய முறைதான் சிறந்தது. இந்தப்படி தேர்ந்தெடுக்கப்படும் தலைவரையும்கூட நீக்கிவிட அரசாங்கம் பிரத்தியேக அதிகாரம் கொண்டிருக்கிறது. இது ஜனநாயகத்திற்கு மாறுனது. மக்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கும் தலைவரை, அரசாங்கம் தன் பிரியப்படி நீக்குவதென்றுல், அத்தலைவரைத் தேர்ந்தெடுக்கும் மக்களையே அவமதிப்பதாகும். இதற்குப் பதிலாக தலைவர் ஏதாவது தவறு செய்வாரானுல் அரசாங்கம் விருப்பப்பட்டால் அத்தலைவரைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களிடம், 'தலைவரிடம் நம்பிக்கை கோரி' ஒரு தனித் தேர்தலையே நடத்தலாம். அவ்விதம் நடத்தி வாக்காளர்கள் முடிவையே இறுதி முடிவாக விடவேண்டும். இதுதான் நாகரீக முறை. இத்துடன், அங்கத்தினர்களைக்கூட நீக்கிவிட அரசாங்கம் அதிகாரம் பெற்றிருப்பது உகந்ததன்று. தவறு செய்யும் அங்கத்தினரை, தலைவருக்கு அரசாங்கம் கோருவதைப்போலவே அந்த அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களிடம் நம்பிக்கை கோரி தனித் தேர்தல் நடத்தலாம். மக்கள் முடிவே இறுதி முடிவாக இருக்கவேண்டும்.

நிர்வாக அதிகாரி:— நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனுல், நிர்வாக அதிகாரி பஞ்சாயத்துச் சபைக்கு ஆலோசகராக இருக்க வேண்டுமேயொழிய, ஆட்டிப் படைப்பவராக இருத்தல்கூடாது. பெரும்பாலும் பஞ்சாயத்துத் தலைவர்கள் சட்டத்தைப் புரிந்துகொள்ளும் சக்தியற்றவர்களாகவே யிருக்கிருர்கள். இத்தகையோர்களுக்கு சட்டத்தை முதலில் நிர்வாக அதிகாரி கட்டாயம் சொல்லித்தரவேண்டும்.

இப்போது நிர்வாக அதிகாரிகள் அநேகமாகசர்க்கார் ஓற்றர்களாகவே இருக்கிருர்கள். இந்த நிலை மாறியே ஆகவேண்டும் இதற்குச்காரணம்சர்க்காரால் நியமிக்கப்பட்டுச் சர்க்கார் விரும்பும் குறிப்பிட்ட பஞ்சாயத்தில் அவர்களைத் திணிப்பதுமாகும். தற்சமயம் என்ன நடக்கிறதென்றுல் சம்பிரதாயத்துக்காக சர்க்கார் நியமிக்கும் நிர்வாக அதிகாரியின் பெயரை குறிப்பிட்டு பஞ்சாயத்து தலைவரின் அபிப்பிராயத்தைக் கேட்பார்கள். இதன்படி பஞ்சாயத்துத் தலைவரின் அபிப்பிராயத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொள்கிருர்களா என்றுல் அதுதான் இல்லை. இதை விட வேதனைக் குரியது யாதெனில் பஞ்சாயத்துத் தலைவரின் பதிலை எதிர்பாராமலேயே, தலைவரின் அபிப்பிராயம் கேட்கும் அன்றைய தினமே நிர்வாக அதிகாரிக்கு வேலையில் சேருமாறு உத்தரவு போய்விடும். இந்த நிலையில் நிச்சயம் மாற்றம் வேண்டும். சம்பிரதாய முறைப்படி கேட்கப் படுவதை விட்டு விட்டு சட்டப்படி பஞ்சாயத்தின் தலைவரையோ அன்றி சபையையோ ஒப்புதலைப் பெற்றுத்தான் நிர்வாக அதிகாரியை நியமனம் செய்தல் வேண்டும்.

> அண்டையன் பசியால் வாட
> அணங்கொடு மாடி வாழ்தல்
> மண்டையன் குற்ற மன்று
> மன்னிடும் ஆட்சிக் குற்றம்

பஞ்சாயத்து சபையின் உத்தரவிற்கு நிர்வாகஅதிகாரி கீழ்படிந்தே ஆகவேண்டும். சபையின் அலுவல்களை நிறைவேற்ற நிர்வாக அதிகாரியைப் பயன் படுத்த வேண்டுமேயொழிய, நிர்வாகஅதிகாரி தன் அலுவல்களை நிறைவேற்றச் சபையைப் பயன்படுத்தக்கூடாது. நிர்வாக அதிகாரியோ அல்லது பஞ்சாயத்து வேறு சிப்பந்தியோ தன் அலுவல்களைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டால் அத்தகையோரை சமாதானம் கேட்கும் உரிமை தலைவருக்கும், தண்டிக்கும் உரிமை சபைக்கும் இருக்கவேண்டும். இத்தகைய நடவடிக்கை சரிதானு என்று கவனித்துக் கொள்ளும் பொறுப்பு மாவட்டக் கலெக்டர்களுக்குத் தரப்பட வேண்டும். பஞ்சாயத்துச் சகல சிப்பந்திகளும் தலைவராலேயே நியமனம் செய்யப்படல் வேண்டும். சம்பள பட்வாடா முதற்கொண்டு சிப்பந்திகளுக்கும் நிர்வாக அதிகாரிக்கும் விடுமுறை அளிக்கும் சகல உரிமைகளும் தலைவருக்கே அளிக்க வேண்டும். இவைகள் சரியான முறையில் வழங்கப்படுகின்றனவா வென்று கண்காணிக்க மாவட்டக் கலெக்டருக்குப் பூரண அதிகாரம் அளிக்கப்படவேண்டும்.

நிர்வாக அதிகாரிகளை மேற்பார்வைசெய்ய டெப்புடிபஞ்சாயத்து ஆபீசர்களென்றும், அவர்களை மேற்பார்வை செய்ய மாவட்டப் பஞ்சாயத்து ஆபீசர்களென்றும் பலரைச் சர்க்கார் தன் விருப்பப்படி நியமித்திருக்கிருர்கள். சிலமாவட்டங்களில் இரண்டு மூன்று மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள் இருக்கிருர்கள். இது முறையன்று.

முதலில் இந்த உத்தியோகங்கட்குத் தேவையானயோக்யதாம்சங்களைக் குறித்து இந்த உத்யோக நியமனங்களைச் சர்வீஸ் கமிஷனுக்கு விட்டுவிட வேண்டும்.

மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள் தேவையற்ற நியமனம். இந்த அதிகாரங்களை மாவட்ட கலெக்டர்களுக்கே கொடுத்து விடலாம். ஏனெனில் நீதி—நிர்வாகம் பிரிந்து போன பிறகு மாவட்டக் கலெக்டர்களுக்கு வேலைகள் ரொம்பவும் குறைந்து விட்டது. ஆதலால் மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள் அலுவல்களை மாவட்டக்கலெக்டர்கள் ஏற்பதால் எந்த விதமான குந்தகமும் ஏற்படாது.

பஞ்சாயத்துகளுக்கு சுகாதார அதிகாரிகள் நியமிப்பது பஞ்சாயத்தின் நிதியைப்பாதிக்கக் கூடியது மட்டுமல்ல தேவையற்ற நியமனமுங்கூட. சானிட்டரி இன்ஸ்பெக்டர்களே போதும். இவர்களை மேற்பார்வை செய்யப் பஞ்சாயத்துத் தலைவருக்கும் மாவட்ட சுகாதார அதிகாரிக்கும் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

பஞ்சாயத்துச்சபையோடு பஞ்சாயத்துக் கோர்ட்டைச் சேர்ப்பது. அவ்வளவு உகந்ததன்று. ஏனெனில் பஞ்சாயத்து சபை தேர்தலால் விளையும் சச்சரவுகளுக்காக நிரபராதிகள் தண்டிக்கப்படுவார்கள். கோர்ட் அதிகாரத்தைப்பஞ்சாயத்து சபைக்கு அளிப்பது அத்துமீறியதாகும். ஒருவரையொருவர் பழி வாங்கத்தான் இது உபயோகமாகுமே ஒழிய, நீதியை நிலைபெறச் செய்ய முடியாது. பொதுவாக இப்போதிருக்கும் சட்டப்படி ஒரு நகரசபை உறுப்பினர் பெஞ்சு கோர்ட்டு அங்கத்தினராக இருத்தல் கூடாது. இந்தச் சட்டத்தின் நோக்கம் யாதெனில் நகரசபையால் கொடுக்கப்படும் வழக்குகள் பெஞ்சு கோர்ட்டுக்குப்போவதால் வழக்குத் தொடரும் சபையின் அங்கத்தினரே வழக்கு விசாரிக்கும் நீதிபதியாக இருந்தால் குற்றவாளிக்குச் சரியான நியாயம் கிட்டாது என்பதால்தான். வழக்கு தொடர்பவர்களே வழக்கை விசாரிக்கும் நீதிபதியானால் நீதி நிலைக்காது. ஆதலால் இதை அவசியம் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

நிதியும் வரியும்:— பஞ்சாயத்துக்குட்பட்ட இடத்தில் வீட்டு வரி வசூலிக்கப் புதிய சட்டம் இடமளிக்கிறது. கிராமங்களில் வாழ்கின்றோர் பெரும்பாலும் ஏழைகள். வயிற்றிற்கும் வருவாய்க்கும் சரிகட்ட இயலாது திண்டாடுபவர்கள். இது மட்டுமல்ல அரசாங்கத்திற்கு நிலவரி, புகையிலைவரி, விற்பனைவரி, இவைகள் மூலம் ஏராளமான பணம் கொடுப்பவர்கள். இந்தப்பஞ்சைகளிடம் மேலும் வீட்டு வரி விதிப்பது நியாயமன்று. புதியசட்டம் தொழில் வரி விதிக்கவும் வகை செய்கிறது. கிராமத்திலிருப்பவர்கள் என்ன தொழில் செய்கிறார்கள்? பயிர்த் தொழில்தானே! இதற்கா வரி, நிச்சயமாக இந்தத் தொழிலுக்கு வரி விதிக்கலாகாது. விதித்தால் விவசாயம் வளராது. இத்துடன் நிலத்தின் வருஷாந்திர குத்தகைதொகையின் மதிப்பில் ரூபாய்க்கு மூன்று தம்படி நில செஸ்போடவும் வகை செய்கிறது. இதுவும் உகந்ததன்று. நிலத்தின் குத்தகை மதிப்பு நிலத்தின் தரத்தில் மட்டுமல்ல உழவனின் உழைப்பிலுமிருக்கிறது. இந்த உழைப்பிற்கு வரி போடுவது நியாயமா? பெருவாரியாக நிலம் வைத்திருக்கும் நிலச்சுவான்தார்களிடம் வரி வசூலிப்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை ஆனால் ஏழை உழவன் தன் உழைப்பால் பெறும் ஊதியத்திற்கு எந்த வகையிலும் வரி விதிக்கலாகாது.

கிராமங்களில் கொண்டுவந்து விற்கப்படும் விளைபொருள்மீது வரி விதிக்க வகைசெய்கிறது. இதன் விளைவு என்னவாகுமென்று யோசிக்காமலேயே இந்த வரிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. கிராமங்களில் பண்டமாற்றத்தை எந்த வகையிலும் பாதிக்கக்கூடாது. பாதித்தால் நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கும்.

புதிய சட்டப்படி பஞ்சாயத்துக்குள் விற்கப்படும் சொத்தின் மதிப்பின்மீது 5-சதவிகிதம் (பத்திர ஸ்டாம்பு கிரயமில்லாது) சர்சார்ஜ் விதிக்கப்பட இருக்கிறது—பெரும்பாலும் ஏழைகள்தான் விற்கிறார்கள். இப்போதே பத்திர ஸ்டாம்பு ட்யூட்டி நூற்றிற்கு $7\frac{1}{2}$-ரூபாயாக இருக்கிறது. இந்தச்சர்சார்ஜ் சேர்ந்தால் $12\frac{1}{2}$-சதவிகிதமாகிறது. இது எந்த வகையில் நியாயமென்று அரசாங்கமே யோசிக்கட்டும். இதை விடப்பத்திரம் விற்கும் உரிமையே பஞ்சாயத்துகளுக்கு தந்தால்—விற்பதால் கிடைக்கும் கமிஷனைப் பஞ்சாயத்துக்கள் எடுத்துக்கொள்ளலாம். கிராம மக்களுக்கு உதவியாகப்பஞ்சாயத்துக்களுக்கே ரிஜிஸ்டர் செய்யும் உரிமையையும் தரலாம். ரிஜிஸ்ட்ரேஷன் பீஸ் பஞ்சாயத்துக்குவரும். இதற்கு வேண்டிய தஸ்தாவேஜ்களை (ரிக்கார்டுகளை) அந்தந்த பஞ்சாயத்தே வைத்துக்கொள்ளும்படியும் மாதம் ஒரு முறை புதியதாக ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட சொத்துகள் சம்பந்தமான நகலைத்தாலுக்காபீஸ்களுக்கு அனுப்பும்படியும் உத்தரவிட்டால் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ் செலவே அரசாங்கத்திற்குக் குறையும்.

அரசாங்க கிராண்ட் (உதவி):— சென்னை அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் $12\frac{1}{2}$ சதவிகிதத்தை இரண்டாந்தர பஞ்சாயத்துகளுக்கு ஜனத் தொகை அடிப்படையில் பிரித்துக்கொடுக்க அரசாங்கம் இசைந்திருக்கிறது. பாக்கியுள்ள $87\frac{1}{2}$ சத விகிதத்தை அரசாங்கம் தன் செலவுக்காக வைத்துக்கொள்கிறது. இது முறையா? நியாயமா? ஆங்கில அரசாங்கம் ஏற்பட்ட நாள் முதல் நில வரி கட்டுகிறார்கள், ஒரு பயனும் பெறாமல். கல்வி செஸ் கட்டுகிறார்கள், பள்ளிக்கூடம் இல்லாது! ரோட் செஸ் கட்டுகிறார்கள் தங்கள் ஊருக்குச்சரியானபாட்டையில்லாது! இந்த ஏழைகளின் பணத்தை வைத்துக்கொண்டு நகரங்களில் வாழ்பவர்கள் நல்ல பலன் பெறுகிறார்கள். கிராமத்தான் பணத்தை வைத்துக்கொண்டு நாம் 'கல்லூரி' நடத்துகிறோம். அவன் பணத்தைக் கொண்டு 'சிமிட்டி', 'தார் ரோட்'டுகள் போட்டுக்கொள்கிறோம். இது நியாயமா? முறையா? கல்வி செஸ் வசூலிக்கப்படும் மக்களுக்கு ஆரம்பக் கல்வி வசதியாவது செய்துதானே தர

விடுதலை பெற—நம்மை ஆளும் அன்னியரைக் காட்டிலும்; நம்மவருடனேயே அதிகம் சண்டை போடவேண்டியிருக்கிறது.

—சுபாஷ் பாபு

வேண்டும். வரிப்பணம் கட்டிவிட்டு வரப்பின்மீது நடந்து செல்லும் அந்த ஏழைகளுக்கு, சிமிட்டி, தார் இல்லாது போனாலும், கிரவல் ரோடாவது போடத்தானே உதவ வேண்டும். இவைகட்கு 12½ சதவிகிதம் போதுமா? குறைந்தது 50 சத விகிதமாவது ஒதுக்கித் தந்தே ஆக வேண்டும். அரசாங்கத்தின் நிதிநிலை சரியாக இல்லை என்பதற்காகக் கிராம மக்களை மோசம் செய்வது சரியன்று. சென்னை அரசாங்கம் தன் முக்கிய வருமான இனங்களை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட்டதாலேயே கிராம மக்களின் வரியைத்தன் செலவுக்கு வைத்துக்கொள்வது நாணயமன்று!

கிராமாந்திர மக்களுக்குச்சுகாதாரத்தை சட்டத்தின்மூலம் கற்பித்துவிடலாம் என்றெண்ணுவது தவறு. அதுவுமன்றி நம்நாட்டு கிராம மக்கள் வாழ்வோடு மற்றைய நாட்டு மக்கள் வாழ்வை ஒப்பிட்டுக் காட்டவேண்டும். இதற்கெல்லாம் நல்ல சாதனம் 'சினிமாக்கள்தான்.' இதற்கென்று அரசாங்கம் சிறு சினிமாப்படங்கள் தயாரித்துஒவ்வொரு பஞ்சாயத்திலும் திரையிட வேண்டும். இதைத் திரையிட என்று தனி உத்தியோகஸ்தர்கள் தேவையில்லை. பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி அதற்கான சர்டிபிகேட் பெற்றிருக்க வேண்டுமென்றால் எளிதில் காரியம் நடந்திடும். படம் காட்டும் மெஷின் வாங்கப் பணம் இல்லையே என்று அரசாங்கம் தட்டிக் கழித்துப் பயனில்லை. இந்த முறையைக் கையாண்டால் நிச்சயம் கிராம முன்னேற்றத்தில் நல்ல பலன் கிடைக்கும். வரும் நோய்க்கெல்லாம் ஒரு கடவுள் பெயரையிட்டுப் பாழாகும் மக்களுக்கு இந்த உதவி எவ்வளவோ பலனைத்தரும்.

ஆக பஞ்சாயத்துச் சட்டத்தைக் குறித்து நம் அபிப்பிராயத்துள் சிலவற்றைத்தந்துள்ளோம். இதை ஏற்பதும், மறுப்பதும், அரசாங்கத்தின் விருப்பத்திற்கே விட்டு விடுகிறோம். புதிய பஞ்சாயத்துச் சட்டத்தைப் புரிந்துகொண்டு, மீண்டும் பஞ்சாயத்துச் சட்டம் சட்டசபைக்கு வருமானால் அங்கு பேசுகின்ற நம் தோழர்களாவது இவைகளைப்பற்றிப்பேசுவார்களா?

★

# ★ அகில உலக பாங்கி ★

"அகில உலக பாங்கின் தூதுக் குழு டில்லி சேர்ந்தது."

"இந்தியாவுக்குக் கடன் தருவதைக் குறித்து ஆலோசிக்கிறது"

இவ்விதம், பத்திரிகைகளில் படிக்கிறோமே, இந்த அகில உலக பாங்கி என்பது என்ன?

உலக நாடுகள் பல ஒன்று சேர்ந்து அமைத்துக் கொண்டிருக்கும் ஓர் ஸ்தாபனமாகும் இது. இந்தப் பாங்கின் மூலதனம், உலக நாடுகள் செலுத்தும் சந்தாத்தொகையாகும். உலகப் போருக்குப் பின்னர் இயங்கத் துவங்கிய இந்தப் பாங்கின் முக்கிய அலுவல், சீரழிந்த நாடுகளையும், பின் தங்கிய நாடுகளையும், முன்னேறச் செய்யும் வகையில் மூலதனமும் தொழில் நுணுக்க வசதியும் அளிப்பதென்பதாகும். இந்த நோக்கத்துக்காகச் சர்வதேச பாங்கி இயங்குவதாகக் கூறப்படுகிறது! இது இருக்கும் இடம் அமெரிக்கத் தலைநகரமான வாஷிங்டனாகும். இந்தப் பாங்கி ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் ஆகின்றன.

## உள்ளெண்ணம்

இந்தப் பாங்கியின் நோக்கம், முன்னேற்றமடையாத நாடுகளின் வளர்ச்சிக்குப் பாடுபடுவதென்று கூறப்பட்டாலும், இதை இயக்கும் அமெரிக்கரின் உள் எண்ணம் வேறு. கம்யூனிசம், ஏழ்மையும் வறுமையும் தாண்டவமாடுகிற இடத்தில் வளர்கிறது என்பதால், அந்த ஏழ்மையை ஓரளவு ஒழித்து, கம்யூனிசம் வளராமல் தடுக்கும் நோக்கமே, அமெரிக்காவினுடையது. ஆனாலும், பின் தங்கிய நாடுகள், பணக் கஷ்டத்தாலும் ஏதாவது மக்களுக்குச் செய்துதர வேண்டுமெனும் ஆசையாலும், இந்தப் பாங்கிடம் கடன் கோருகின்றன.

## அங்கம் வகிப்பவை

இந்த அகில உலக பாங்கில் இந்தியா, இத்தாலி, ஈரான், ஈராக், ஈக்வடார், உருகுவே, எகிப்து, எதியோப்பியா, ஐஸ்லாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கியூபா, கிரீஸ், கனடா, காஸ்டாரீகா, கொலம்பியா, சிலி, சிரியா, டென்மார்க், டொமனியன் குடியரசு, தேசியசீனு, தாய்லந்து, தென் ஆப்பிரிக்கா, நார்வே, துருக்கி, பனமா, பராகுவே, நெதர்லாந்து, நிராகுவா பிலிப்பைன், பிரேசில், பெரு, பொலிவியா, பின்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், பிரிட்டன், பாகிஸ்தான், மெக்ஸிகோ, ஹொன்ரோஸ், லக்ஸம்பர்க், யூகோஸ்லேவியா, லெபனுன், வெனிசுலா, செக்கோஸ்லோவேகியா முதலிய 48 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு நாடும் அதனதன் விகிதாசாரத்துக்கேற்றபடி, சந்தா செலுத்துகின்றன. இதில் அதிக சந்தா செலுத்துவது, அமெரிக்காதான்.

அமெரிக்கா 594,215,000 டாலர் (38o/o)

இங்கிலாந்து 26,000,000 டாலர் (16o/o)

பிரான்ஸ் 10,500,000 டாலர் (6o/o)

இந்தியா 8,000,000டாலர்(5o/o)

முக்கிய நாடுகளான, இவை செலுத்தும், சந்தாத் தொகையின் அளவு இது. சந்தாச் செலுத்தும் நாடுகளின் உற்பத்தித் துறைக்கு வேண்டிய மூலதன உதவி செய்து, அந்நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்று பிரகடனப்படுத்தியிருக்கிறது. ஆனால், மேற்படி பிரகடனத்தில், இன்னும் சிலவும் கூறப்பட்டிருக்கின்றன.

தனி நபர் மூலதனத்துக்கு ஆபத்து இல்லை.

வெளிநாட்டு மூலதனம் வரலாம். கடன் தர...

பண உதவி செய்வதென்றால் வாங்கும் கடனை, அந்தநாடு, திருப்பித் தந்துவிடுமா என்பதே முதல் கண்ணோட்டமாகும். கடனுக்கு விண்ணப்பம் போட்ட நாட்டிற்கு பாங்கின் பிரதிநிதிகள் சென்று, 'கடன் கேட்கும் அவசியம் என்ன?' என்று ஆராய்ந்து பார்ப்பார்கள். கொடுக்கிற கடனுக்கு 'ஜாமீன்'

ஈடாக, அந்த நாட்டின், இயற்கை வளம் இருக்கிறதாவென்றும் பார்ப்பார்கள். பிறகு, புதுத் திட்டங்களுக்குப் போதிய நிதி உதவி அந்த நாட்டிற்கு இல்லையென்று தெரிந்தால் பாங்கி கடன் தரும். பாங்கி தரும் கடனை மட்டும் நம்பியிருக்கக் கூடாது, உதவிபெறும் நாடு! தனது சர்க்காரிலிருந்தும் மேற்படி திட்டத்துக்கு ஓரளவு நிதி ஒதுக்கினால்தான் பாங்கும் பணம் தரும். தமது நிதியில் ஓரளவேனும் அத்திட்டத்துக்குச் செலவழிக்கப் படாவிடில் வேலையை பொறுப்பில்லாமல் நடத்துவார்களென்னும் சந்தேகமே இதற்குக் காரணம்!

இந்த நிபந்தனைகளின் பேரில் இந்தியாவும் அடிக்கடி சர்வதேச பாங்கில் கடன் வாங்கி வருகிறது 'இந்தக் கடனை இருபது வருடத்தில் தருகிறேன்'– அந்தக் கடனைப் பதினைந்து ஆண்டுகளில் தீர்த்துவிடுகிறேன்' என்ற நிபந்தனைகளோடு.

### பலனும் தீமையும்

புதிதாகத் தன்னைச் செப்பனிட்டுக்கொள்ள முயலும் நாடுகள், அமெரிக்காவுக்கு ரஷ்யாவின்மீதிருக்கும் ஆத்திரத்தைச் சாதகமாக வைத்து, தத்தமது காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள இந்தப்பண உதவியைப் பெறத்துடிக்கின்றன. அமெரிக்காவும் பின்தங்கிய நாடுகளுக்கு உதவி என்கிற திரைமறைவில், பணத்தைவீசி அந்த நாடுகளைத் தன்வலையில் சிக்கவைக்கமுயலுகிறது. இந்த முயற்சியிலீடுபடும் நேரத்தில் தனது ஆதிக்க உணர்ச்சியைக்காட்டாது வியாபார சாகசத்தைக் காட்டுவதுபோல நடக்கிறது! அதனால்தான், இந்தக்கடனை, பாங்கிகள்மூலமும் உதவுவதாகவும், அதற்குப்பல நிபந்தனைகளிருப்பதாகவும் காட்டிக்கொள்கிறது. உண்மையில் எல்லாநாடுகளும் சுபீட்சமடைய வேண்டும் என்கிற எண்ணம் அகில உலக பாங்கை நிறுவியவர்களுக்கிருந்திருந்தால், நிபந்தனைகள், இவ்வளவு கடுமையாக இருக்கமாட்டா. பின் தங்கியிருக்கும் நாடுகளில் பெரும்பாலானவை சின்னஞ் சிறு நாடுகளாகும்! அவை, இந்தப்பாங்கின்மூலம் கடனைப் பெறக்கூடிய நிலையில், நிபந்தனைகள் இல்லை. நாடு சமூகச் செழிப்போடிருந்தால்தான் பாங்கின் விருப்பப்படி கடன் கிடைக்கமுடியும். இல்லையெனில் இயலாது! இதனால், அமெரிக்கா, தனக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பலமும் மனித சக்தியும் உள்ள பெரிய நாடுகளைத் தயார் செய்யும் வகையிலேயே இப்பாங்கை இயக்கி வருவதாக அறியலாம். அது மட்டுமல்ல! உடனடியாக கம்யூனிசத்துக்கு இரையாகக்கூடிய இடம் என்று கருதும் ஐரோப்பாவுக்கு, இந்தப்பாங்கி, அதிகக் கடனைக் கொடுத்திருக்கிறது. 1951-ல் மொத்தம் 76.2 சதவிகிதம் ஐரோப்பாவுக்கும் 17.8 சதம் அமெரிக்க காலனிகளுக்கும், 6 சத விகிதம் ஆசியநாடுகளுக்கும் கொடுத்திருக்கிறது! எனவே இந்தப்பாங்கி மேல் பூச்சுக்கு ஏதோ ஒரு 'கற்பகவிருட்சம்'போல பேசப்பட்டாலும்,நஞ்சு தடவப்பட்ட கனியாகும். முதலாளித்துவம் தனது ஆதிக்கத்தை நழுவ விடாமல், சாகசத்தோடு, செய்து வைத்துக்கொண்டிருக்கும் ஏற்பாடாகும்.

### நிர்வாகம்

இந்தப் பாங்கின் நிர்வாகத்தை கவர்னர்போர்டும், நிர்வாக டைரெக்டர்களும் நடத்திச் செல்கிறார்கள். ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு பிரதிநிதிவீதம் அங்கம் வகிக்கும் 48 நாடுகளின் பிரதிநிதிகளுமிருப்பார்கள். ஆனால் எல்லா அதிகாரமும் கவர்னர் போர்டுக்குத்தானுண்டு. இவர்களின்கீழ் 12 டைரெக்டர்கள் இருக்கிறார்கள். வஞ்சக உள்ளமும், வாணிப நோக்கமும் இல்லாமலிருந்தால், இப்படிப்பட்ட ஸ்தாபனம் எவ்வளவோ பயன் தரக்கூடியதுதான்! ஆனால், உலகின் சீர்கெட்ட நிலையில், இந்த ஸ்தாபனமும் அவ்விதம் இல்லை!!

★

---

**கழக வெளியீடுகள்**

**தீர்மானங்கள் 0—1—0**

**சட்டதிட்டம் 0—2—0**

விபரங்களுக்கு:

தி. மு. க. : : ராயபுரம்

தலைமைநிலையம் சென்னை 13.

---

## சோம்பல்

"சோம்பேறியின் மன விருப்பம் அவனையே கொல்லுகிறது."

—ஸாலமோன்
(யூதஞானி)

*

"தொழில் எத்தனைக் கீழ்த்தரமானாலும் அதைச் செய்வதில் அவமானம் ஒன்றுமில்லை. சோம்பல் ஒன்றுதான் அவமானம்"

—டால்ஸ்டாய்

*

"சோம்பல் ஒரு குற்றம். தொழிலின்றி வாழ்தல் ஒரு மலம்"

—உத்தம சக்தம்
(பௌத்த நூல்)

*

"உடம்பைச் சொகுசுக்கும் சோம்பலுக்கும் இரையாக்கி வைத்திருப்பவன் மனிதவழியை மறந்தவன்."

—தேரோ
(அமெரிக்க ஆசிரியர்)

*

"சந்தேகம், வருத்தம், மனச்சோர்வு, கோபம், ஏக்கம்,இந்தப் பிசாசுகளெல்லாம் மனிதனை அடிக்கும் பொருட்டுப் பதுங்கியிருக்கின்றன. அவன் சோம்பலுக்கு இடம் கொடுக்கும்போது இவையெல்லாம் அவனை வந்து தாக்குகின்றன."

கார்லைல்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.

# எமது வெளியீடுகளும் விற்பனை உரிமை நூல்களும்

### அறிஞர் அண்ணா

| | | | |
|---|---|---|---|
| சூழ் நிலை | 1 | 0 | 0 |
| தமிழகம் | 1 | 0 | 0 |
| அற நிலையங்கள் | 0 | 6 | 0 |
| நூல் நிலையங்கள் | 0 | 4 | 0 |
| பொருள் | 0 | 4 | 0 |
| சொல்லும் பயனும் | 0 | 4 | 0 |

### கவிஞர் பாரதிதாசன்

| | | | |
|---|---|---|---|
| பாரதிதாசன் கவிதைகள் | 3 | 8 | 0 |
| பாண்டியன் பரிசு | 3 | 8 | 0 |
| எதிர்பாராத முத்தம் | 1 | 4 | 0 |
| அழகின் சிரிப்பு | 1 | 0 | 0 |
| தமிழியக்கம் | 1 | 0 | 0 |
| காதல் நினைவுகள் | 0 | 12 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 10 | 0 |
| அமைதி | 0 | 8 | 0 |
| இசையமுது | 0 | 12 | 0 |
| குடும்ப விளக்கு I | 0 | 6 | 0 |
| ஷை II | 0 | 10 | 0 |

### கலைஞர் கருணாநிதி

| | | | |
|---|---|---|---|
| பெரு மூச்சு | 1 | 0 | 0 |
| களத்தில் கருணாநிதி | 1 | 0 | 0 |
| பள்ளி வாழ்க்கை | 1 | 0 | 0 |
| இன முழக்கம் | 0 | 8 | 0 |
| திராவிட சம்பத்து | 0 | 3 | 0 |
| சங்கிலிச் சாமி | 0 | 8 | 0 |
| இரத்தச் சுவடு | (அச்சில்) | | |

### திரு. இரா. நெடுஞ்செழியன்

| | | | |
|---|---|---|---|
| கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம் | 0 | 12 | 0 |

### திரு. இரா. செழியன்

| | | | |
|---|---|---|---|
| ராஜாடி ராஜா | 0 | 12 | 0 |
| பொது அறிவு | 0 | 12 | 0 |

### திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி

| | | | |
|---|---|---|---|
| கிழக்கும் மேற்கும் | 1 | 0 | 0 |
| வெறுங் கூடு | 1 | 0 | 0 |
| பிணங்கள் | 1 | 0 | 0 |
| நினைவுச் சுழல் | 0 | 12 | 0 |
| தியாகச் சுடர் | 0 | 12 | 0 |

### திரு. கே. ஜி. இராதாமணாளன்

| | | | |
|---|---|---|---|
| இளவரசி | 2 | 0 | 0 |
| அரக்கு மாளிகை | 2 | 0 | 0 |
| சபதம் | 1 | 0 | 0 |
| சிந்தனைத் துளிகள் | 0 | 4 | 0 |
| பொற் சிலை | 1 | 4 | 0 |
| நீரோ | (அச்சில்) | | |
| அன்னம் | (அச்சில்) | | |

### திரு. தில்லை வில்லாளன்

| | | | |
|---|---|---|---|
| தங்கத் தாமரை | 1 | 0 | 0 |
| மனப்போர் (அண்ணாவின் முன்னுரையுடன்) | 1 | 0 | 0 |
| மல்லிகைத் தோட்டம் | (அச்சில்) | | |
| குடும்பம் | (அச்சில்) | | |

### புலவர் குழந்தை

| | | | |
|---|---|---|---|
| திருக்குறளும் பரிமேல் அழகரும் | 2 | 4 | 0 |
| திருவள்ளுவர் | (அச்சில்) | | |

### திரு. ரா. தணலன்

| | | | |
|---|---|---|---|
| அழகு நிலா | 1 | 0 | 0 |
| செல்வ குமாரி | 1 | 0 | 0 |
| லீலா ராணி | 0 | 8 | 0 |

### சோம. லெ. இலக்குமணச் செட்டியார்

| | | | |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம் | 2 | 0 | 0 |
| என் பிரயாண நினைவுகள் | 1 | 8 | 0 |

### கு. ராஜவேலு, M.A.

| | | | |
|---|---|---|---|
| மகிழம்பூ | 3 | 0 | 0 |

### எஸ். எஸ். மாரிசாமி

| | | | |
|---|---|---|---|
| தென்னாப்பிரிக்க இந்தியர் போராட்டம் | 3 | 8 | 0 |
| காதல் கொலை வழக்குகள் | 1 | 0 | 0 |

### நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ்

| | | | |
|---|---|---|---|
| டில்லி நோக்கி | 3 | 0 | 0 |

### கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

| | | | |
|---|---|---|---|
| மலரும் மாலையும் | 5 | 0 | 0 |
| மருமக்கள் வழி மான்மியம் | 2 | 0 | 0 |
| ஆசிய ஜோதி | 1 | 8 | 0 |
| உமார்கய்யாம் பாடல்கள் | 1 | 4 | 0 |

### டாக்டர் மு. வரதராசன்

| | | | |
|---|---|---|---|
| **கதை** | | | |
| கள்ளோ? காவியமோ? | 3 | 0 | 0 |
| பெற்றமனம் | 4 | 4 | 0 |
| அல்லி | 4 | 0 | 0 |
| மலர்விழி | 3 | 4 | 0 |
| கி.பி. 2000 | 1 | 8 | 0 |
| **இலக்கியம்** | | | |
| ஓவச்செய்தி | 3 | 0 | 0 |
| கண்ணகி | 1 | 8 | 0 |
| மாதவி | 1 | 4 | 0 |
| திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் | 4 | 0 | 0 |
| மணல் வீடு | 1 | 0 | 0 |
| முல்லைத்திணை | 1 | 8 | 0 |
| நெடுந்தொகை விருந்து | 3 | 0 | 0 |
| **வரலாறு** | | | |
| கவிஞர் தாகூர் | 0 | 14 | 0 |
| அறிஞர் பெர்னாட்ஷா | 2 | 0 | 0 |
| **நாடகங்கள்** | | | |
| மனச்சான்று | 1 | 12 | 0 |
| பச்சையப்பர் | 1 | 4 | 0 |
| இளங்கோ | 0 | 12 | 0 |
| **பிற** | | | |
| அறமும் அரசியலும் | 1 | 12 | 0 |
| அரசியல் அலைகள் | 1 | 4 | 0 |
| அன்னைக்கு | 1 | 0 | 0 |
| மொழியின் கதை | 0 | 12 | 0 |
| எழுத்தின் கதை | 0 | 10 | 0 |

### சிதம்பர ரகுநாதன்

| | | | |
|---|---|---|---|
| நம் கால வீரன் | (அச்சில்) | | |
| க்ஷணப் பித்தம் | ,, | | |
| **பிற** | | | |
| ரஷ்யப் பிரச்னை (ஸ்டாலின் பரிசு பெற்றது) | 1 | 4 | 0 |
| மா. சே. துங். சீனப் பிரதமர் சரித்திரம் | 0 | 8 | 0 |
| தமிழின் தனிச்சிறப்பு மறைமலை அடிகள் | 0 | 4 | 0 |
| ஆஹா ஊஹூ (தி. ஜ. ர) | 1 | 0 | 0 |
| தமிழ் வாத்தியார் (மா. ரா) | 0 | 12 | 0 |

எங்கள் நிலையத்தில் எல்லாத் தமிழ் நூல்களும் ஒருங்கே கிடைக்கும். புத்தகவணிகர்களும் நூல்நிலைய பொருப்பாளர்களும் தங்கள்தேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

## பாரி நிலையம் - 59, பிராட்வே, சென்னை-1



தீபாவளியன்று
திரை உலகில் புதிய குரல்
நேஷனல் பிக்சர்ஸ்
தயாரித்த
பராசக்தி
திரைக்கதை வசனம்:
மு. கருணாநிதி
ஸ்டுடியோ:
எவி எம்